REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 29 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தිනකරන්
92 ANNIVERSARY

வரு. 92 இல. 206 | Thursday 29, August, 2024 | 24 பக்கங்கள் | 50/-




# மீண்டும் கஷ்ட யுகம் ஏற்பட்டால் சஜித்தும் அனுரவும் ஓடிவிடுவர்






## கஷ்ட காலங்களில் பொறுப்பை ஏற்காமல் ஓடிய தலைவர்களை நம்ப முடியுமா?
### – நுகேகொடையில் ஜனாதிபதி தெரிவிப்பு

"இயலும் ஸ்ரீலங்கா" என்ற அரசியல் மேடையே நாட்டைக் காப்பாற்றும் மேடையாகும் என தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஏனைய மேடையில் இருப்பவர்கள் மக்கள் இறந்தாலும், அரசியல் இலாபம் கிட்டினால் போதும் என்று நினைப்பவர்களே என்றும் தெரிவித்தார்.

தாம், சொல்வதில் ஏதாவது தவறு இருந்தால் பதில் சொல்லுமாறும் ஜனாதிபதி சவால்

08

#### தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராக அறிவிக்கவும்

# ஜனாதிபதிக்கு எதிரான வழக்கு நேற்று தள்ளுபடி

### வழக்கு செலவையும் செலுத்த நீதிமன்று உத்தரவு



சில விடயங்களின் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தகுதியற்றவரென, அறிவிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று (28) தள்ளுபடி செய்யப்பட்டது.

பதில் பொலிஸ் மாஅதிபரை நியமிக்கத் தவறியமை மற்றும் உயர் நீதிமன்றத்திற்கும் மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கும் நீதியரசர்களை நியமிகத் தவறியமை முதலான விடயங்களை அடிப்படையாகக் கொண்டே, இந்த அடிப்படை உரிமை மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதை உயர் நீதிமன்றம் நிராகரித்ததுடன், வழக்கின் செலவாக 50 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறும் மனு தாரருக்கு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

மனுதாரர்கள் நீதிமன்றத்தில் உண்மைக்குப் புறம்பான விடங்களை முன்வைத்துள்ளதாகவும், இந்த மனு மூலம் அரசியலமைப்பின் 92 ஆவது சரத்தை மீறியுள்ளதாகவும் சட்ட மாஅதிபர் சார்பில், ஆஜரான மேலதிக சட்ட மாஅதிபர் நெரின் புள்ளே, ஆட்சேபனை தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு, சட்டத்தரணி ஆர்.எஸ்.பி. ரணசூரியவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தேசபந்து தென்னகோனின் அதிகாரங்கள், செயற்பாடுகளை முன்னெடுப்பதை தடைசெய்து, ஜூலை மாதம் உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவு, பதில் பொலிஸ் மாஅதிபரை நியமிப்பதில் ஜனாதிபதியை தடுக்கவில்லை என்றும் மனுதாரர் இந்த மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதால் தனக்கு நியமனம் வழங்க முடியாது எனக் கூறிய ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை நீதி அமைச்சராக நியமித்துள்ளதாகவும் மனுதாரர் அதில், குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம், அரசியலமைப்பை ஜனாதிபதி மீறுவதாகவும், தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தவறாக பயன்படுத்துவதாகவும் மனுதாரர் குற்றம் சுமத்தியிருந்தார்.

பதில் பொலிஸ் மாஅதிபரை நியமிக்காதது பொதுமக்களின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ள மனுதாரர், அரசியலமைப்பை மீறிய

08

# அலி சாஹிர் மௌலானாவை கட்சியிலிருந்து நீக்க முடியாது

### கொழும்பு மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை



பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவை முஸ்லிம் காங்கிரசிலிருந்து நீக்க முடியாதென, கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (28) இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா, ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்திருந்தார். நாட்டின் எதிர்காலம் கருதி தாம், இந்த முடிவை எடுத்ததாகவும் அறிவித்திருந்தார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்திருந்தது. இந்நிலையில், கட்சியின் முடிவை மீறியதாக

08

# பொருளாதார யுத்தத்தில் வெற்றியீட்டிய ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது அவசியம்

**எஹெலியகொடவிலிருந்து**
**லோரன்ஸ் செல்வநாயகம்**

நா ட்டில் பேரழிவை ஏற்படுத்திய பயங்கரவாத யுத்தத்திற்கு தீர்வு கண்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, நாட்டு மக்கள் நன்றிக் கடனாக ஒத்துழைப்பு வழங்கியது போல, பாரிய பொருளாதார யுத்தத்தை வெற்றி கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றிக் கடனாகச் செயற்பட வேண்டுமென, சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். 'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று எஹெலியகொட நகரில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, அப்போதைய

08



# ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று



ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனம் இன்று (29) வெளியிடப்படவுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான சுஜீவ சேனசிங்க தெரிவிக்கையில், இது தொடர்பான கொள்கைப் பிரகடனத்தின் அனைத்து திட்டங்களும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் ஒரே நாட்டில் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு என்ற கொள்கை அமுல்படுத்தப்படுமெனவும், கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்

08

# ஜனாதிபதி ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியீடு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று (29)வெளியிடப்படவுள்ளதாக ஜனாதிபதியின் அரசியல் கட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது. கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இது தொடர்பான வைபவம் இடம்பெறுகிறது. 'இயலும் ஸ்ரீலங்கா" என்ற தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், இந்தக் கொள்கை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து விடுவித்து பொருளாதார சுபிட்சத்துக்கு இட்டுச் செல்வதற்கான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் படிப்படியாக நாட்டை அபிவிருத்தியடைந்த நிலைக்கு கொண்டு செல்லும் திட்டங்களும் "இயலும் ஸ்ரீலங்கா" கொள்கை அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

08

# இறப்பருக்கு உரமானியம் வழங்க அரசு நடவடிக்கை

### 9500 ரூபா உர மூடை 5500 ரூபாவுக்கு விற்பனை



நாட்டின் இறப்பர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், இறப்பர் உற்பத்தியாளர்களுக்கு உர மானியம் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தற்போது 9500 ரூபாவாக விற்கப்படும் 50 கிலோ உரத்தை 5,500 ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதுகுறித்து, அரசாங்க உரக் கம்பனியின்

08



03

## வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதிக்கே ஆதரவு
### பொருளாதாரத்தை மீட்டமைக்கு நன்றிக்கடன்



03

## தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய இருவருக்கு அபராதம்
### தலா ஒருவருக்கு 15,000 ரூபா



03

## 650 அலைபேசிகளுடன் சந்தேக நபர் கைது
### வாகனத்திலிருந்து மாற்றிய போது சம்பவம்

# இலங்கைக்கு நேராக சூரியன் உச்சம் கொடுக்கும்

### வெப்பநிலை நேற்று முதல் உயர்வு

**சூரியனின் தெற்கு நோக்கிய இயக்கத்தின் காரணமாக நேற்று முதல் எதிர்வரும் (06) வரை இலங்கையின் மீது சூரியன் நேரடியாக உச்சம் கொடுக்குமென, வளிமண்டலவியல் திணைக்களம்**

08




# மட்டு. மங்களாராம விகாராதிபதி கைது

மட்டக்களப்பு மங்களாராம விகாரையின் தலைவர் அம்பிட்டியே சுமணரத்ன தேரர் கைது செய்யப்பட்டுள்ளார். தேர்தலின் போது வன்முறையைத் தூண்டியமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் பேரில், அம்பாறை பொலிஸார், இவரைக் கைது செய்தனர்.

சக்திவாய்ந்த அரசியல்வாதியை சமூக வலைதளங்களில் அவதூறாகப் பேசுவது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

08

# ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பலர் ஜனாதிபதியுடன் இணைவர்

### பிரசாரம் சூடுபிடித்ததும் தாவல்கள் இடம்பெறும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்த கருத்து சரியானது. அது சிறந்த நடவடிக்கை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

08



# GCE O/L பெறுபேறுகள் இரண்டொரு வாரத்தில்

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை (2023) பெறுபேறுகள் இன்னும் 02 அல்லது 03 வாரங்களில் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான

08



**92 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# அனைத்து மதங்களையும் சமமாக நடத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையுடனான சந்திப்பில் ஜனாதிபதி

கடந்த கொரோனா வைரஸ் பரவலின் போது மரணித்த முஸ்லிம்கள் மற்றும் ஏனைய மதத்தினரின் உடல்களை தகனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஆராய்வதற்காக ஏனைய கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா நிறைவேற்றுக் குழுவுடன் நேற்றுமுன்தினம் (27) மாலை நடைபெற்ற சந்திப்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

கொழும்பு மாளிகாவத்தையில் அமைந்துள்ள அகில இலங்கை ஜம்மியதுல் உலமா தலைமையகத்திற்குச் சென்ற ஜனாதிபதி, அதன் தலைவர் அஷ்ஷெய்க் எம். ஐ. எம். றிஸ்வி மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

உலமா சபையின் பொதுச்செயலாளர் அஷ்ஷேக் அக்ரம் நூராமித், பொருளாளர் அஷ்ஷேக் ஏ. ஏ. அஹமட் அஸ்வர், உபதலைவர் அஷ்ஷெய்க் எச். ஒமர்தீன், அஷ்ஷெய்க் எம். ஜே. அப்துல் காலிக், உபதலைவர் அஷ்ஷேக் ஐ. எல். எம். ஹாஷிம், உப தலைவர் அஷ்ஷேக் ஏ. எல். எம். பலீல் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். இதன் போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு மௌலவிமார் தமது ஆசிகளை தெரிவித்தனர்.

நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மௌலவிமார்களுக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆணையை கோருவதற்காகவே இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் மகாநாயக்க தேரர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி, அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதற்கு தான் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் பலஸ்தீன மோதல்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பலஸ்தீன நாடு தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும், அதற்காக தான் தொடர்ந்தும் குரல் கொடுப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம், ஜெருசலத்தில் புதிய கொன்சியூலர் அலுவலகம் ஒன்றை திறந்திருப்பதாக பரவும் தகவல் உண்மைக்கு புறம்பானது என்றும், இஸ்ரேலுக்குள் பணியாற்றும் இலங்கையருக்கு சேவை வழங்குவதற்காக 2000 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேலுக்குள் தூதரக சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌசி எம்.பி, பைசர் முஸ்தபா, முன்னாள் ஆளுநர் அசாத் சாலி உள்ளிட்ட பலர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.









**கொரோனா தொற்றின் போது மரணித்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்ய பரிந்துரைத்த தரப்பினரின் பொறுப்புக்கூறலை ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படும்**

**ஊடகப் பிரிவு**
இயலும் ஸ்ரீலங்கா

# வறுமையை ஒழிக்க புதிய திட்டம் முன்னெடுக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

வறுமையை ஒழிக்கும் ரணசிங்க பிரேமதாசவின் ஜனசவிய திட்டம் உட்பட பல திட்டங்கள் காணப்படுகின்றன. ஜனசவிய, கெமிதிரிய, சமுர்த்தி போன்ற திட்டங்களின் சிறந்த விடயங்களை உள்ளடக்கிய புதிய வறுமை ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்படும். பெண் தலைமைத்துவ குடும்பங்கள் முழுமையாக வறுமைக்குள் சிக்கி இருப்பதனால் அவர்களை வறுமையில் இருந்து மீட்டெடுக்கும் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. சகலரையும் உள்ளடக்கிய புதிய வறுமை ஒழிப்பு திட்டம் முன்னெடுக்கப்பட இருக்கின்றது என ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக இரண்டு வருடங்களுக்கு மாதாந்தம் 20,000 ரூபா வீதம் நிதி உதவி வழங்கி, அதன் மூலம் முதலீடு, நுகர்வு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஆகிய துறைகளுக்குள் பிரவேசிக்கச் செய்து, 24 மாதங்களில் வறுமை ஒழிப்பதற்கு ஆவன செய்வோம் என்று சஜித் பிரேமதாச தெரிவித்தார .

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் 20 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன்தினம் (27) காலை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இப்பேரணியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், அப்பகுதியை சேர்ந்த ஏராளமான மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

விவசாயத்திற்கு தேவையான உயர்தரமான 50 கிலோ கிராம் உர மூடையொன்றை 5000 ரூபாவிற்கு வழங்குவதோடு, உர விநியோகத்தில் இடம்பெறுகின்ற இருட்டடிப்பு மாபியாவை நிறுத்தி, சாதாரண விலைக்கு இரசாயன திரவ மருந்து வகைகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

உயர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா தொற்று என்பனவற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாய மக்களின் விவசாய கடன்களை இரத்துச் செய்வதோடு நெல்லுக்கான நிர்ணய விலையையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதுகாப்பான பச்சை வீட்டு விவசாய முறை. சொட்டு நீர்ப்பாசன முறை, பசுமை இல்ல விவசாய முறை, ட்ரோன் தொழில்நுட்பம் ஆகிய நவீன தொழில் நுட்ப முறைகளை கையாண்டு, விவசாயத் துறையை மேம்படுத்தி வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டு, விவசாய உற்பத்தி பொருள் சந்தை தொடர்பான தகவல்களோடு, விவசாயத்தில் ஈடுபடுவதற்கான பின்புலத்தை உருவாக்குவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.



பாரிய, நடுத்தர மற்றும் சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் நீண்ட காலமாக புனரமைக்கப்படவில்லை. நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள் என்பனவற்றை புனரமைப்பதற்கான திட்டங்களை முன்வைத்து விவசாயத்தை ஊக்குவிக்கும் நீர்ப்பாசன புனரமைப்பு திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



# எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை சிறிதும் வீணாகாது

## தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க



போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவர்களையும், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவர்களையும் தேசிய மக்கள் சக்தி தண்டிக்க முயற்சிக்காது என அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகமொன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும், வடக்கு கிழக்கு படுகொலை, ஆட்கடத்தல், காணாமல் ஆக்கப்படல் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும் என தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக வடக்கின் முன்னணி பத்திரிகையொன்று தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்களின் மொழி உரிமையை பாதுகாத்தல், புதிய அரசியலமைப்பைபொன்றை கொண்டுவருதல் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

மக்களின் நோக்கமும் ஆட்சியாளர்களின் நோக்கமும் ஒன்றாக உள்ள அரசாங்கம் அமைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

'நாடு அனுரவிற்கு' எனும் தொனிப்பொருளில் மாலம்பேயில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "இலங்கையின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்திற்கமைய அமைக்கப்படும் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம். நாட்டு மக்கள் பல வருடங்களாக தேர்தலுக்காக காத்திருக்கின்றனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதாக கூறி ஒன்றரை வருடங்களாகின்றன.

வாக்களிக்க இன்னும் குறுகிய காலமே உள்ளது. திசைகாட்டி வெற்றி பெற பாடுபடுவோம். நாம் திட்டமிட்டு செய்த பணியை விட மக்கள் எம்மை வெற்றிப்பெறச் செய்வதற்கு அதிக வேலை செய்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. இலங்கையில் முதன்முறையாக மக்கள் வாக்களிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை சிறிதும் வீணாகாது என்பதை உங்கள் அனைவருக்கும் உறுதியளிக்கிறோம். அந்த நம்பிக்கையும் அவ்வாறே பாதுகாக்கப்படும்.

கடந்த காலங்களில் அரசுகள் அமைக்கப்படும் போது மக்களுக்கு ஒரு நோக்கம் இருந்தது, ஆனால் ஆட்சியாளர்களுக்கு வேறு நோக்கம் இருந்தது. மக்களின் எதிர்பார்ப்பும், ஆட்சியாளரின் எதிர்பார்ப்பும் வேறு. மக்களின் எதிர்பார்ப்புகளை ஏமாற்றுவதை நிறுத்துங்கள்" என்றார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2024 ஓகஸ்ட் 29 வியாழக்கிழமை

தொழுகை நேரம்

சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.22
மஃரிப் - 06.21
இஷா - 07.32

இன்றைய சுபதினம்

குரோதி வருடம் ஆவணி 13

ராகுகாலம் : பகல் : 1.35 - 3.05 வரை
சுபநேரம் : காலை : 7.35 - 4.05 வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



# IMF: மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது வெற்றியளிக்காது



## பேசினால், டிசம்பர் – ஜனவரி வரை 1.2 – 1.3 பில்.டொலர்களை இழக்க நேரிடும்

சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது மிகவும் கடினமான செயல்மட்டுமன்றி அது வெற்றிகரமான செயலாக அமையாதென, வெளிநாட்டலுவல்கள், நீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால், எதிர்வரும் டிசம்பரில் சர்வதேச நாணய நிதியம் வழங்கவுள்ள அடுத்த தவணை மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) வழங்கவுள்ள தவணைகளை இழக்க நேரிடுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி 2024 டிசம்பர் முதல் 2025 ஜனவரி வரை 1.2 பில்லியன் முதல் 1.3 பில்லியன் டொலர்களை இந்நாடு இழக்குமெனவும்,இதனால், மீண்டும் ஸ்திரமற்ற நிலைக்கு மாறுவதை யாராலும் தடுக்க முடியாதெனவும் அமைச்சர் அலி சப்ரி மேலும் சுட்டிக்காட்டினார்.

நேற்று (28) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அமைச்சர், இதனைக் குறிப்பிட்டார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி :

"2022 இல் நாடு இருந்த நிலைமையின் படி, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஒரு பாரிய பங்களிப்பை வழங்க வேண்டியிருந்தது. பாதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு உறவுகளை மீளக் கட்டியெழுப்புதல், சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்று அதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் போன்ற சவால்களை நாம் அதன்போது எதிர்கொண்டோம்.

இரண்டரை வருடங்களின் பின்னர் இந்த நாட்டை ஸ்திரப்படுத்த எம்மால் முடிந்துள்ளது.

08

# தினகரன் 92 வருடங்களுக்கு முன்

## தினகரன் இன்று 29 ஓகஸ்ட் 1932



புதிய ஆண்டு வரவு செலவு

கவர்னர் வெற்றி

1932-33ம் வருட வரவுசெலவுத் திட்டத்தை ஒருவிதமாக மந்திரிசபையார் சரிப்படுத்தி விட்டார்களென்றும் அவர்கள் அதுவிஷயத்தில் செய்திருக்கும் சிபார்சுகளுக்குக் கவர்னரது அங்கீகாரத்தை இப்பொழுது எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்களென்றும் தெரியவருகிறது. மொத்தப் பென்ஷன் வருகிறவருடத்தில் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

### புதிய ஆண்டு வரவு செலவு

### கவர்னர் வெற்றி

1932 - 33ம் வருட வரவு செலவுத் திட்டத்தை ஒருவிதமாக மந்திரிசபையார் சரிப்படுத்தி விட்டார்களென்றும் அவர்கள் அது விஷயத்தில் செய்திருக்கும் சிபார்சுகளுக்கு கவர்னரது அங்கீகாரத்தை இப்பொழுது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்றும் தெரியவருகிறது. மொத்தப் பென்ஷன் வருகிற வருடத்தில் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# 650 அலைபேசிகளுடன் சந்தேக நபர் கைது



அலைபேசிகளை மோசடியான முறையில் நாட்டுக்குள் கடத்த முயன்ற சந்தேக நபர், ஒருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். புத்தளம் கரம்ப பிரதேசத்தில் உள்ள வீதித்தடையில் கடற்படை மற்றும் பொலிஸார் இணைந்து நடத்திய தேடுதலில் இந்நபர் கைதானார். கெப் வாகனத்திலிருந்து அலைபேசிகளை மாற்றிய போதே,இக்கைது இடம்பெற்றது. இச்சோதனையில், சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படம் 650 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர் 52 வயதுடைய கெக்கிராவ பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளுக்காக நுரைச்சோலை பொலிஸாரிடம் இந்நபர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# நாட்டின் முதலாவது இயற்கை வாயு மின் உற்பத்தி நிலையம் நேற்று திறப்பு



நாட்டில் 1977 ஆம் ஆண்டு அரசாங்கம் ஆடைத் கைத்தொழிலை நாட்டின் பிரதான பொருளாதாரமாக மாற்றியது போன்று, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையை அடுத்த தசாப்தத்தில் நாட்டின் பிரதான பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையை தன்னிறைவான புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தியாளராக மாற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், மேலதிமான வலுசக்திக்கான கேள்வி எப்போதும் இருக்கும் என்பதோடு, உத்தேச இந்தியா - சிங்கப்பூர் மின் இணைப்பு நடைமுறைக்கு வந்தால், அதில் இணைந்து கொள்ள தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

08

# தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய இருவருக்கு அபராதம்



கொழும்பு, கறுவாத் தோட்டம் பொலிஸ் எல்லைக்குள் தேர்தல் விதிமுறைகளை மீறி, தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டிய குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவருக்கு கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே தலா 1,500 ரூபா அபராதம் விதித்தார்.

08

# வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதிக்கே ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாண ங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும், சுயேட்சை வேட்பாளரான ஜனாதிபதிக்கு ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

08

# பொரளை சீவலி பழைய மாணவர்களின் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

## செப்: 08 ரயில்வே மைதானத்தில் ஏற்பாடு

பொரளை சீவலி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் செப்டெம்பர் (08) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு, பேஸ்லைன் வீதியிலுள்ள ரயில்வே மைதானத்தில் பகல் முழுவதும் நடைபெறவுள்ளது.

இந்த கிரிக்கெட் போட்டி நான்காவது முறையாக நடத்தப்படுகிறது. கல்லூரியின் பழைய மாணவர்களை ஒருங்கிணைத்து பாடசாலையின் முன்னேற்றத்தை நோக்கமாகக்




கொண்டு, நடத்தப்படும் இப்போட்டியில் சுமார் 20 அணிகள் விளையாடவுள்ளன.

# சிவம் பாக்கியநாதனின் மனைவி காலமானார்



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் மற்றும் Daily News பத்திரிகைகளின் மட்டக்களப்பு விசேட நிருபரான, சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதனின் மனைவி திருமதி நந்தினிதேவி சிவம் பாக்கியம் தனது 55 ஆவது வயதில் செவ்வாய்க்கிழமை இரவு (27) மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் காலமானார்.

08

# பஹ்ரைனுக்குள் நுழையும் வெளிநாட்டு பணியாளருக்கு சர்வதேச வங்கிக் கணக்கு

பஹ்ரைனின் தொழிலாளர் சந்தை ஒழுங்குமுறை ஆணையம் (Labour Market Regulatory Authority) தொழில் நிமித்தமாக பஹ்ரைன் விமான நிலையங்களுக்குள் நுழையும் அனைத்து வெளிநாட்டுப் பணியாளர்களுக்கும் சர்வதேச வங்கிக் கணக்கை (IBAN International Bank Account Number) வழங்கத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சரியான பணப் பரிவர்த்தனைகளை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பஹ்ரைனின் தொழிலாளர் சந்தை ஒழுங்குமுறை ஆணையத்தின் (Labour Market Regulatory Authority) www.lmra.gov.bh என்ற இணையத் தளத்துக்குச் சென்று 0097317506055 என்ற இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொள்வதன் மூலம் இது தொடர்பிலான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வெளிநாட்டுப் பணியாளர்கள் பஹ்ரைனுக்குள் நுழையும் போது, விமான நிலையத்தில் வைத்து இந்த சர்வதேச வங்கிக் கணக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள், ஆலோசனைகளை அந்நாட்டு அரசாங்கம் வழங்கியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

# ஐ.தே.கட்சியின் வட்டார அமைப்பாளராக நியமனம்

அக்கரைப்பற்று வட்டாரம் 02, ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளராக எம்.ஏ.செய்னுடீன் சலீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான கடிதம் கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் வைத்து வழங்கப்பட்டது. ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகலரத்நாயக்க இக்கடிதத்தை சமூக செயற்பாட்டாளர் சலீமிடம் கையளித்தார்.

08

# மாவட்ட அபிவிருத்தி நிதி எம்.பிக்களுக்கு நேரடியாக வழங்கப்படுவதில்லை

(பருத்தித்துறை விசேட நிருபர்)

மாவட்ட அபிவிருத்திக்கான நிதி, ஜனாதிபதி செயலகத்தால் நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகிறதே தவிர, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரடியாக வழங்கப்படுவதில்லை என, தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாக பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிதி, குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டதாக,வேண்டுமென்றே ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப்படுகிறது. பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிதி, மற்றும் பல்வேறு அபிவிருத்தி நிதிகள் என்பன,ஜனாதிபதி செயலாகத்தால் இவ்வருடம் ஒதுக்கப்பட்டுள்ளன.

08


# பிரசவத்துக்குப் பின்னரான மன அழுத்தம் தொடர்பில் கவனம் செலுத்தல்: வைத்தியர் புத்தி ஜயசேகர அவர்களுடனான "நலம் பேணும் வட்டம்" ("Circle of Well-Being") கலந்துரையாடல்




[illegible]




[illegible]

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 12ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு

வெறொருவன் மனைவியைக் காம எண்ணத்துடன் நோக்காத பெருங்குணம் அறநெறி மட்டுமன்று; அது ஒழுக்கத்தின் சிகரமும் ஆகும்.

## தேர்தல் பிரசாரங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ள பொருளாதார விவகாரம்

ஜனாதிபதி தேர்தலுக்கான தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. ஒவ்வொரு அபேட்சகரும் தங்களது நோக்கங்களையும் திட்டங்களையும் மக்களிடம் முன்வைத்து வருகின்றனர். அவற்றை தேர்தல் விஞ்ஞாபனங்களாகவும் அவர்கள் வெளியிடுகின்றனர்.

அந்த வகையில் இந்த தேர்தல் பிரசாரத்திலும் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் நாட்டின் பொருளாதார விவகாரம் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறது. இவ்வாறான முக்கியத்துவத்தை கடந்த காலத் தேர்தல்களில் பொருளாதாரம் பெற்றுக் கொள்ளவில்லை.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அதன் விளைவாக மக்கள் கடும் நெருக்கடிகளுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம்கொடுத்தனர். அந்த நெருக்கடிகளும் பாதிப்புகளும் தோற்றுவித்திருந்த சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் அன்றைய ஆட்சியாளர்களே தங்கள் பதவிகளை விட்டு விலகிச் சென்றனர். அதுவும் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகி இருந்த ஆட்சியாளர் பதவியை விட்டு விலகிச் சென்ற சமயம், 55 இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்றிருந்தவரும் கூட நாட்டின் தலைமையை ஏற்று பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க முன்வர மறுத்தார்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அள்ளி வழங்கி இருந்த வாக்குகளைக் கூட இவர்கள் இருவரும் இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு முன்பாக கருத்தில் கொள்ளாது செயற்பட்டனர். அந்தச் சூழலில் அவர்கள் மக்களின் நலன்களை விடவும் தங்களது நலன்களுக்கும் விருப்பங்களுக்கும் முன்னுரிமை அளித்தனர்.

அதனால் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் போன்றதொரு நிலை நாட்டில் மீண்டும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். தங்களது வாக்குகளை அள்ளி வழங்கி நட்டாற்றில் விடப்படக்கூடிய நிலைக்கு மீண்டும் உள்ளாக அவர்கள் தயாராக இல்லை. இப்பின்புலத்தில்தான் இத்தேர்தலில் பொருளாதார விவகாரம் பிரதான இடத்தைப் பெற்றதாக விளங்குகின்றது.

அதேநேரம் 2022 இல் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானதன் விளைவாகவே இன்று பொருளாதாரம் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலையை உருவாக்கி இருக்கிறது.

உண்மையில் பொருளாதாரம் பலமாகவும், வலிமையாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் நாடு பலமாக இருக்கும். அதனால் நாட்டில் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறான திட்டங்கள்தான் நாட்டில் பொருளாதார சுபிட்சத்தையும் மக்களுக்கு வளமான வாழ்வையும் பெற்றுக் கொடுக்கும்.

அதனால் கடந்த காலங்களைப் போன்று இந்த தேர்தல் காலத்தில் காற்றில் பறக்கக்கூடிய வாக்குறுதிகளை வழங்க முடியாது. இந்தத் தேர்தலில் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய தெளிவான வாக்குறுதிகளை வழங்க வேண்டிய நிலைக்கு ஒவ்வொரு அபேட்சகரும் உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சூழலில் தற்போது நடைமுறையிலுள்ள பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை திருத்தியமைக்கப் போவதாக ஓரிரு அபேட்சகர்களும் அவர்களது ஆதரவாளர்களும் கூறுகின்றனர். ஆனால் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி மக்கள் நிர்க்கதி நிலைக்கு தள்ளப்பட்டிருந்த போது நாடு குறித்தோ மக்கள் குறித்தோ முடிவெடுத்து செயற்படத் தவறியவர்கள்தான் இன்று இவ்வாறு குறிப்பிடுவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அன்றைய இக்கட்டான சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி முடிவுகளை எடுக்காதிருந்தால் நாட்டின் நிலை என்னவாகி இருக்கும்? இதனை ஒரு தரம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதுவே பரவலான கருத்தாக உள்ளது. நிச்சயமாக நாட்டில் வன்முறைகளும் வழிப்பறிக் கொள்ளைகளும் தலைவிரித்தாடி இருக்கும். அவ்வாறான துர்ப்பாக்கிய நிலையில் இருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாத்த பெருமை ஜனாதிபதியையே சாரும்.

அவர் ஆரம்பித்த பொருளாதார வேலைத்திட்டங்கள்தான் நாட்டை மீட்டெடுத்து மறுமலர்ச்சிப் பாதையில் பயணிக்க வழிவகுத்திருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை தொழில் வல்லுநர் அமைப்பின் 37 ஆவது வருடாந்த கூட்டத்தில் உரையாற்றிய இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க, 'தற்போதைய பொருளாதார செயற்றிட்டங்களை இடைநிறுத்துவதானது இரு வருடங்களுக்கு முன்னர் நாடு முகம்கொடுத்த சமூக, பொருளாதார நெருக்கடி மீண்டும் தோன்றுவதற்கே வழிகோலும்' என்றுள்ளார்.

ஆகவே நாடும் மக்களும் மீண்டுமொரு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக முடியாது. அதற்கு மக்களும் தயாரில்லை. அதற்கு ஏற்ப வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# தமிழ்நாட்டில் அம்மன் மாநாடு நடத்துவோம்!




## முருகன் மாநாடு சர்ச்சைக்கு மத்தியில், தமிழ்நாடு அமைச்சர் சேகர்பாபு அறிவிப்பு

தமிழ்நாட்டில் முருகன் மாநாடு நடத்தப்பட்டதைப் போல தமிழ்நாடு அரசின் இந்துசமய அறநிலையத்துறை சார்பாக அம்மன் மாநாடு நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு முருகன் மாநாடு நடத்தியதே தவறு என ஆளும் தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகள் கொந்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், அம்மன் மாநாட்டை நடத்தப் போவதாக அறிவித்துள்ளமை புதிய சர்ச்சையாக வெடித்துள்ளது.

பழநியில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை சார்பாக 2 நாட்கள் முருகன் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டிருக்கின்றன.

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை என்பது கோவில் நிர்வாகத்துக்கானதே தவிர, இந்து மதத்தைப் பரப்புகிற பணிகளை செய்யக் கூடாது என தி.மு.கவின் கூட்டணிக் கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. தி.மு.கவை தொடர்ந்து ஆதரிக்கும் திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம், தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆகியவையும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. முருகன் மாநாட்டின் சர்ச்சைக்குரிய தீர்மானங்களை இந்துசமய அறநிலையத் துறை திரும்பப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டு வருகிறது.

இந்த நிலையில் முருகன் மாநாட்டைத் தொடர்ந்து அம்மன் மாநாடு நடத்தப் போவதாக தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் சேகர் பாபு கூறுகையில்," தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு அம்மன் திருக்கோயில்களில் முதன் முதலில் 108 சுமங்கலி பூஜை நடத்தப்பட்டது. அம்மன் கோயில்களில் விளக்குப் பூஜையை தொடங்கியது இந்த ஆட்சிதான். விளக்கு பூஜைக்கு ஒருவருக்கு ரூபா 1,000 என செலவு வைத்துள்ளோம். மாதந்தோறும் 108 பெண்களுக்கு 17 திருக்கோயில்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மன் கோயில்களைப் பொறுத்தவரை இந்த ஆட்சி அதிக அக்கறையோடு, அம்மன் கோயில் திருப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்கு குடமுழுக்கு நடத்தியது இந்த ஆட்சிதான். ஆகையால் அம்மன் மாநாடு நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# மட்டக்களப்பு விவேகானந்த பூங்காவில் ஐவரின் உருவச்சிலைகள் திறந்துவைப்பு





வரலாற்றில் முதல் தடவையாக இலங்கையில் விவேகானந்தர் பூங்கா ஒன்று மட்டக்களப்பில் அண்மையில் திறந்து வைக்கப் பட்டது. இந்த விவேகானந்த பூங்காவில் ஆறு துறவிகளின் பிரசன்னத்தில் ஐந்து சிலைகள் பத்து இல்லங்களுடன் மிளிர்கின்றன. கூடவே அழகான பூந்தோட்டம் காட்சியளிக்கிறது.

உலகளாவிய இராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷன்களின் தலைவர் ஸ்ரீமத் கௌதமானந்தாஜி மகராஜ் அவர்களின் பரிபூரண ஆசிர்வாதத்துடன் இராமகிருஷ்ண மிஷன் தஞ்சாவூரிலிருந்து தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்தாஜி மகராஜ், கொழும்பு மிஷனிலிருந்து ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தாஜி மகராஜ் மற்றும் ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தாஜி மகராஜ், மட்டக்களப்பு கல்லடியிலிருந்து பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தாஜி மகராஜ் மற்றும் உதவி முகாமையாளர் சுரார்ச்சிதானந்தாஜி சுவாமி மாத்ருசேவானந்தர் ஆகிய ஆறு சுவாமிஜிகளின் நேரடி ஆசியுடன், ஐயனார் ஆலயத்திலிருந்து அனைவரும் வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டனர். பூங்கா வரையிலான நடைபவனி இடம்பெற்று 70 அடி உயரமான சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை மற்றும் நினைவுக்கல் திறந்து வைக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்தர், சுவாமி ஜீவனானந்தாஜி, சுவாமி நடராஜானந்தாஜி, சகோதரி நிவேதிதா ஆகியோரின் திருவுருவச் சிலைகளும் திறக்கப்பட்டதோடு, ஏனைய துறவிகளின் பெயர்களைத் தாங்கிய 10 இல்லங்களும் ஸ்ரீமத் சுவாமி மாத்ருசேவனாந்தர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு விவேகானந்த பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

சமூக நலன்புரி அமைப்பு, திலகவதியார் மகளிர் இல்லம் மற்றும் விவேகானந்த தொழில்நுட்பவியல் கல்லூரியின் ஸ்தாபகர் சமூகதீபம் சற்குணேஸ்வரன் அவர்களின் எண்ணக்கருவுடன் விவேகானந்த பூங்காவின் திறப்பு விழா சிறப்பாக இடம்பெற்றது.

கிரான்குளம் கலாசார மண்டபத்தில் விவேகானந்த பூங்காவிற்கான நன்கொடை வழங்கிய நன்கொடையாளர்களும் கௌரவிக்கப்பட்டதோடு ஸ்தாபகர் சற்குணேஸ்வரன் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் உயரிய விருதாகிய விவேகானந்த விருது வழங்கப்பட்டு சுவாமிஜிகளால் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறே விவேகானந்த பூங்காவின் நன்கொடையாளர்கள் மற்றும் விபரங்களை உள்ளடக்கிய 'விஸ்வரூபம்' மலர் வெளியீடு இடம்பெற்றது.

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி தட்சிணகௌரி தினேஷ், மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் எஸ்.செல்வராஜா, ஸ்ரீ சத்ய சாயி சஞ்ஜீவனி வைத்தியசாலை வைத்திய கலாநிதி சுந்தரேசன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் புவனேந்திரன், மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் சர்வேஸ்வரன், சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி சிவகுமார், பதுளை மலையக சிறுமிகள் இல்லத் தலைவர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலரது பிரசன்னத்துடன் நிறைவேற்றுப் பணிப்பாளர் க.பிரதீஸ்வரன் உள்ளிட்ட அமைப்புகளின் முகாமையாளர்கள், இணைப்பாளர்கள், விவேகானந்தத் தொழில் நுட்பவியல் கல்லூரி மாணவர்கள், முல்லைதீவு அன்னை ஸ்ரீ சாரதா நிலையம், பழுகாமம் திலகவதியார் மகளிர் இல்ல மாணவிகள், ஸ்ரீராமகிருஷ்ண மிஷனின் மாணவ மாணவிகள் உள்ளடங்கலாக விவேகானந்த குடும்பத்தினரும் இணைந்து சிறப்பான முறையில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# அகில இலங்கை தமிழ்மொழி தின போட்டியில் தேசிய நிலைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவி





அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அர் ரஹீமியா வித்தியாலய மாணவி அஷ்ரப் பாத்திமா அகில இலங்கை தமிழ் மொழித் தின மாகாணநிலை வாசிப்பு போட்டிப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று தேசியநிலை போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டி அர் ரஹீமியா வித்தியாலயத்தில் தரம் 07 இல் கல்வி பயிலும் அஷ்ரப் பாத்திமா அகில இலங்கை தமிழ் மொழித்தினவாசிப்பு போட்டிப் பிரிவில் மாகாணநிலை போட்டியில் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். பாடசாலையில் நடைபெறும் பல்வேறு போட்டிகள், பாடசாலை செயற்பாடுகள் என்பற்றில் திறமை காண்பித்துவரும் மாணவி அஷ்ரப் பாத்திமா ஆவார். இதற்கு முன்னர் நடைபெற்ற பல போட்டிகளிலும் அவர் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாணவியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.எம். மிஸ்வர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோர் அஷ்ரப் பாத்திமாவிற்கு பரிசு வழங்கி கௌரவித்தார்கள். இந்நிகழ்வில் மாணவியின் தந்தை அஷ்ரப், தாய் ஜூமான ஆகியோருடன் மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

மாணவியின் கல்வி வளர்ச்சியில் அயராது உழைத்துவரும் அதிபர், ஆசிரியர்களுக்கு பாடசாலை சமூகம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டுள்ளது.

**எம்.எல். சரிப்தீன்...**
(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

# 'மலையக மக்கள் பண்பாடும் இலக்கியமும்' கருத்தரங்கு




காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை சார்பில் நடத்தப்படும் மலையகம்_ 200 (மலையக மக்கள் பண்பாடும் இலக்கியமும்)என்னும் பன்னாட்டுக் கருத்தரங்கத்தின் தொடக்கவிழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பல்கலைக்கழக வெள்ளி விழா அரங்கில் நடைபெற்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் என்.பஞ்சநதம் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர், கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் வரவேற்புரை நிகழ்த்துகையில் "மலையக மக்கள் தாயகம் விட்டு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாகப் புலம் பெயர்ந்து சென்று 200 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அம்மக்களின் வலிகள் குறித்தும் , அவர்களது உழைப்பு குறித்தும் தமிழக மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் இத்தகைய கருத்தரங்கங்கள் நிகழ்த்தப்படுகின்றன. அந்த வகையில் கல்விப்புலத்தில் மலையகம்_ 200 குறித்து நிகழ்த்தப்படும் முதல் கருத்தரங்கமாக இந்நிகழ்வு அமைகிறது" என்றார்.

துணைவேந்தர் என். பஞ்சநதம் தனது தலைமையுரையில் மலையக மக்கள் குறித்த கருத்தரங்க முன்னெடுப்பினைப் பாராட்டிப் பேசியதோடு "மலையக மக்களின் வாழ்வியல் குறித்தும் பண்பாடு குறித்தும் மாணவர்கள் நேரடியாக அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இடப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

மலையக எழுத்தாளர் மாத்தளை சோமு இணையவழியில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். அவர் தனது வாழ்த்துரையில் "தமிழ் புனைகதைகளில் மலையக மக்களின் துயரம் குறித்த பதிவுகள் புதுமைப்பித்தனின் 'துன்பக் கேணி' சிறுகதையிலிருந்தே தொடங்கிவிட்டன. ஒரு இனத்தின் வரலாறு அவ்வின மக்களின் இலக்கியத்தில் பதிவாகி இருக்கும். காலனிய ஆட்சியில் தொடங்கிய மலையக மக்களின் 200 ஆண்டுகால துயர வரலாறு மலையக இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மலையக தாயகம் திரும்பிய தமிழர்க்கான நல்வாழ்வு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் மு.சி.கந்தையா தனது தொடக்க உரையில், "இந்திய வம்சாவளித் தமிழரான மலையகத் தமிழர்கள் இலங்கையில் தனித் தேசிய இனமாக வாழ்ந்து வருகின்றனர். காலனிய ஆட்சியில் உழைக்கும் தமிழ் மக்கள் 21 நாடுகளுக்குக் கூலிகளாக அழைத்துச் செல்லப்பட்டனர். இலங்கையின் பொருளாதாரம் மலையக மக்களால் மேம்படுத்தப்பட்டது. ஆனால் அச்சமூகத்தினருக்கு வாழ்வுரிமைகள் முறையாக வழங்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்து அலைக்கழிப்பு செய்யப்படுகிறார்கள். சிறிமாவோ_ சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் தமிழகத்திற்குப் புலம்பெயர்ந்து நீலகிரி மாவட்டத்தில் வாழும் தமிழர்களின் வீட்டுமனை மற்றும் நிலங்கள் மீதான உரிமைகள் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை" என்று குறிப்பிட்டார்.





தொடர்ந்து நடைபெற்ற முதலாம் கருத்தரங்க அமர்வில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் து.கௌரீஸ்வரன் தலைமையில் மலையக ஆய்வறிஞர்கள் அருணாசலம் லெட்சுமணன், வேலாயுதம் இராமர் ஆகியோர் மலையகப் பண்பாடு பற்றிய கட்டுரைகளை வழங்கினர்.

பிற்பகல் அமர்வில் கவிஞர் பேனா மனோகரன், பேராசிரியர்கள் மு.கிறிஸ்டோபர், ஆ.பாண்டி ஆகியோர் மலையக இலக்கியம் குறித்துக் கட்டுரைகள் வழங்கினர். ஆவணப்பட இயக்குனர் தவமுதல்வனின் 'பச்சை ரத்தம்' எனும் மலையகம் பற்றிய ஆவணப்படம் திரையிடப்பட்டது. நிகழ்வின் இறுதியில் நுண்கலைத்துறைப் பேராசிரியர் கேசவ ராஜராஜன் நன்றி கூறினார்.

# நாட்டின் கல்வித்துறையில் பழையன கழிதலும் புதியன புகுதலும் அவசியம்

தனிநபர் ஒருவரின் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது நவீன உலகத்திற்கு ஏற்ற கற்றலாகும். அந்த முன்னேற்றமானது சமூகத்தின் மறுமலர்ச்சிக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் அடித்தளமாக இருக்கும். இலங்கையின் கல்வியை முதன்மையான இடத்தை வகிப்பதாக கூறும் வாதங்களைத் தாண்டி உண்மை அதற்கு நேர்மாறாக உள்ளது. காரணம் இலங்கை கல்வி கலைத்திட்டத்தில் நவீன உலகிற்கு ஏற்ற கல்வியை வழங்காமையே ஆகும்.

ஆரம்பகால கல்வியானது குறுகிய நோக்கில் ஒரு சிலரை மாத்திரம் இலக்காகக் கொண்டு காணப்பட்டது. அந்நியராட்சியில் பிற்பாடு இதில் மாற்றம் கொணரப்பட்டு அவர்கள் தமது மதம், மொழி என்பவற்றை ஊடுகடத்தும் பிரசார ஊடகமாக கல்வியை பயன்படுத்தினர். மன்னராட்சி தொடங்கி அந்நியர் ஆட்சி வரை கல்வி ஒரு குறிப்பிட்ட ஒரு இலக்கை மையமாகக் கொண்டு ஒரு கருவியாக பயன்படுத்தப் பட்டது. பின் 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின் கலைத்திட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டு அனைவருக்கும் கல்வி வழங்கப்பட்ட போதிலும், அதிகளவான பட்டதாரிகள் வேலையில்லா நிலைமைகளிலேயே எதிர்கொண்டு காணப்படுகின்றனர். இதற்கு முழுக் காரணம் நவீன உலகமயமாக்கலுக்கு ஏற்ற கல்வி முறைமையை முழுமையாக கல்வி கலைத்திட்டத்தினுள் கொண்டு வராமையே ஆகும்.



இன்றைய நவீன காலகட்டத்தில் கல்வி செயற்பாடுகளாக *Smart Class Room* கற்கை நடைமுறையில் காணப்படுகிறது. அனைவருக்கும் கணினி கல்வி போன்ற நவீன உலகிற்கு ஏற்ற கல்வி வழங்கப்பட்ட போதிலும் அவை அனைத்து பாடசாலைகளிலும் வெற்றிகரமாக வழங்கப் படுகின்றதா? என்பது கேள்விக்குறி. இந்நாட்டிலுள்ள உயர் கல்வி நிலையங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வியை நிறைவு செய்து வெளியேறுபவர்களில் தொழில் வாய்ப்பிற்காக காத்திருப்பவர்களும் அதிகரித்துள்ளனர். படித்ததற்கு ஏற்ற வேலை இன்மை என்பதனால் வெளிநாடுகளுக்கு செல்வோரே அதிகம். எமது நாட்டில் தொழில் வாய்ப்புகள் காணப்படும் வேளையிலும் நம்மவர்களிடம் அதற்கேற்ற நவீன கல்வி தகைமைகளும் அப்பாதையை நோக்கி செல்வதற்கான தெளிவான கல்விமுறை வழிகாட்டல்கள் இல்லை. இந்த நிலைமை கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களாக நாட்டில் நிலவிக் கொண்டிருக்கின்றது.

தற்காலத்தில் கல்வி கலைத்திட்டத்தில் நெகிழ்ச்சி தன்மை காணப்படுகிறது. அதாவது பொதுத்தராதரத்தில் சித்தி பெறாதவரும் உயர்தரம் பயிலும் வாய்ப்பு காணப்படுகிறது, தகவல் தொடர்பாடல் தொழினுட்பப் பாடம் கட்டாயப் பாடமாக்கப்படல், 2013 இல் தொழினுட்பக்கற்கை பிரிவு மிக முக்கிய பிரிவாக கொணரப்பட்டமை போன்ற நவீன உலகிற்கு ஏற்ற வளர்ச்சி போக்கினையும் அண்மைக் கால கல்வியில் காணக்கூடியதாய் உள்ளது.

தற்காலத்தில் இலங்கையில் இலத்திரனியல் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகிறது. உதாரணமாக திறந்த பல்கலைக்கழகங்களில் தொலைக்கல்வி (*online education or virtual learning*) கற்பிக்கப்படுகிறது. பல்கலைக்கழகங்களில் புதிய மாணவர்களை உள்நுழைவிற்கும் போது அதற்கான விண்ணப்ப படிவங்கள் அனைத்தும் இலத்திரனியல் மயமாக்கப்பட்டுள்ளது. இது கல்வியின் நவீனத்துவத்தை காட்டுகிறது.

நவீன தொழில் சந்தைக்கு தேவையான தகைமையை கொண்டுள்ளவர்களை உருவாக்கும் நிலையங்களாக இந்நாட்டு பல்கலைக்கழகமும் அரச, தனியார் உயர்கல்வி நிறுவனங்களையும் தொழிற்கல்வி நிறுவனங்களையும் உருவாக்க வேண்டும். உண்மையில் இது காலத்திற்கு அவசியமான நடவடிக்கை. இந்நாட்டின் கல்வித் துறையில் நவீன உலகிற்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய தேவை உள்ளது. இதனை கருத்தில் கொண்டு இந்நாட்டு கல்வித்துறை நவீன உலகுக்கு ஏற்ற மாற்றங்களை உடனடியாக கொண்டு வர வேண்டும். அவ்வகையான மாற்றங்கள் உயர்கல்வியைப் பெற்று வெளியேறுபவர்களை உடனடியான வேலை உலகிற்கு இட்டுச் செல்லும்.

அதேநேரம் தொழில் சந்தைக்கு தகுதியானவர்களை உருவாக்கும் இடங்களாக பல்கலைக்கழகங்களும் உயிர்கல்வி நிறுவனங்களும் மாறவேண்டும். இது நாட்டின் மறுமலர்ச்சிக்கும் மக்களின் வாழ்வின் சுபீட்சத்திற்கும் வித்திடும். அப்போதுதான் உயர் கல்வி பெற்று தொழிலுக்காக காத்திருக்கும் நிலைமையும் ஒரு முடிவுக்கு வரும் எனலாம்.

**தெய்வநாயகம் சதுர்சிக்கா...**
இரண்டாம் வருட கல்வியல் சிறப்புக் கற்கை மாணவி,
கல்வி பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# அன்றைய ஆசிரியர்களும் இன்றைய மாணவர்களும்

அறியாமை என்ற அகக்களையை வேர் அறுத்து அறிவு என்னும் ஒளிச்சுடரை அறுவடை செய்வதே கல்வியாகும். அவ்வகையிலே கல்வியானது ஒவ்வொரு மனித வாழ்விலும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது. இதனை உணர்ந்த சான்றோர் அக்காலத்திலே 'மூத்தோர் சொல்லும் முதுநெல்லி கனியும் முன்பே கசக்கும் பின்பே இனிக்கும்' என்றும் ஒளவையார் 'பிச்சைபுகினும் கற்கை நன்றே' என்றும் கல்வியின் மகத்துவத்தை உணர்த்தியுள்ளனர்.

ஆரம்ப காலத்தில் இருந்து இன்றுவரை ஒவ்வொரு மனித வாழ்வினையும் மாற்றி அமைக்கக்கூடிய ஆயுதமாக கல்வி விளங்குகின்றது. இவ்வாறு அத்தியாவசியமாக விளங்கும் கற்றல் செயற்பாட்டின் விடிவெள்ளியாக விளங்குபவர்கள் ஆசிரியர்களே. இதனாலையே எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என ஆசிரியர்கள் தெய்வங்களாக போற்றப்படுகின்றனர்.

உலகை மாற்றக்கூடிய உன்னதமான கல்வியில் ஆசிரியரின் பங்கு அளப்பரியது என்றே கூற முடியும். இன்றைய கற்றல் செயற்பாட்டின் நட்சத்திரங்கள் மாணவர்களே. மாணவர்களை மையமாகக் கொண்டே இன்று கற்றல் கற்பித்தல் நுட்பமுறைகள் காணப்படுகின்றன. இங்கு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டியாக மாத்திரமே திகழ்கின்றனர். அன்று ஆசிரியர்களின் செயற்பாடுகளே கற்றல் கற்பித்தலில் தாக்கம் செலுத்தின. இன்று மாணவர்களின் வகிபங்கே அதிகமாக காணப்படுகின்றன.

அவ்வகையிலே ஆசிரியர் கோட்பாடு ரீதியாக விடியங்களை அனுபவங்களின் மூலம் தேர்ச்சியாகவோ அல்லது அறிக்கையாகவோ மாற்றமுறச் செய்யும் ஒரு மாற்றுமுகவராக செயல்படுவார். இங்கு செயலர் நிலையில் ஆசிரியர் செயல்பாடுகள் அமையப்பட மாட்டாது. மாறாக மாணவர்களை செயலறு நிலையில் அனுபவங்களை பெறுவதற்கான செயல்பாடுகளை அதிகம் இடம்பெறும். கற்பித்தலை விட கற்றல் செயல்பாடுகளுக்கு முதலிடம் வழங்கப்பட்டு மாணவர்களை சுயமாக அனுபவங்களை பெறுவதற்காக சந்தர்ப்பங்கள் ஆசிரியரினால் ஏற்படுத்திக் கொடுக்கப் படுகின்றன.



கற்றல் கற்பித்தல் முறையில் மாணவர்கள் நேரடியான கற்றல் அனுபவத்தினை பெற்றுக் கொள்ளும் முறையாக போல செய்தல் கற்றல் நுட்பமுறை விளங்குகின்றது. இங்கு முன்வைக்க எதிர்பார்க்கும் அறிவுத் தொகுதியானது வினைத்திறனாக அமையும். எனலாம். இத்தகைய நுட்ப முறைகள் இன்றைய மாணவரிடத்தில் ஊடுபுகும் பட்சத்தில் அனுபவங்களின் அடிப்படையில் கற்பதற்க்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றது. அதுமட்டுமன்றி கோட்பாட்டு அறிவாகவும், கோட்பாட்டு அறிவு செயல் அறிவாகவும் நிலைமாற்றம் செய்பவராக இன்றைய ஆசிரியர்கள் தொழிற்படுகின்றார்கள். என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் மாணவர்கள் இடத்தில் அறிவும் திறனும் மனப்பாங்கும் வளர்க்கப் படுகின்றன

மாணவர்களின் சிந்தனைகள் தூண்டப்படவே தொழில்நுட்பங்கள் வருகை கண்டன எனலாம். ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு கணினி மூலை, செயற்பாட்டு மூலை, வாசிப்பு மூலை, உணவு மூலை என்பவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு ஆங்கிலம் கற்பித்தல்,இரு நகரின் நண்பர்கள், பாடசாலை சினேகம் என நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளன. ஆசிரியர் மாணவரை ஒன்றிணைத்து சிறந்த கற்பித்தலுக்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தொழில்நுட்ப பாடங்களின் வருகை, கற்பிக்கும் சாதன பொருட்களை பயன்படுத்தி கற்பித்தல் எனும் ஒன்பது நிகழ்வுகளைக் கொண்ட ரோபட் கானோயின் கற்பித்தல் முறை போன்ற நவீன கற்பித்தல் முறைகளை ஆசிரியர்கள் வகுப்பறையில் பயன்படுத்துகின்றனர்கள் என்றால் அது இன்றைய மாணவர்களின் கற்றலில் ஏற்பட்ட சுதந்திர நிலையே.

மேலும் ஊடாடும் பாடங்கள், விர்ச்சுவல் ரியாலிட்டி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், கல்வியில் AI தொழிநுட்பம் பயன்படுத்துதல், கலப்புகற்றல், 3D அச்சிடுதல், வடிவமைப்பு சிந்தனை செயல் முறையைப் பயன்படுத்தவும், புரட்டப்பட்ட வகுப்பறை மற்றும் அதீத தொழிநுட்பங்களை ஒருங்கிணைத்து கற்றலை மேம்படுத்துவதற்கென மாணவர்களின் கற்றலை இலகுபடுத்தும் வகையில் விபரங்கள் கல்வி அமைச்சினால் வழங்கி வைக்கப்பட்டு கற்றல் ஊக்குவிக்கப்படுகின்றது.

இதிலிருந்து நாம் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். அன்று ஆசிரியர்கள் மாணவர்களது சிந்தனை விரிவுபடுத்தும் கற்றல் நுட்பமுறைகளை பயன்படுத்தாமையினால் தான் மாணவர்களது போக்கு மந்தமாகக் காணப்பட்டது. இதுவே இன்றைய நிலையில் மாணவர்களது மூளை தூசு துடைக்கப்பட்டு இற்றைய கற்றல் நுட்பங்களின் ஈடுபாட்டினால் பல பக்கங்களிலும் சிதறி ஊடுபுகுவதனால் உள்ளங்கையில் உலகம் என்றநிலைக்கு மாறிவிட்டது எனலாம்.

**மனோகரன் மதுஷாயினி...**
இரண்டாம் வருடம் கல்வியியல் சிறப்பு கற்கை,
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை கிழக்கு பல்கலைக்கழகம்

# கல்விப் பயணத்தில் வெற்றியை ஈட்டுவதில் மாணவருக்கு கைகொடுக்கும் நட்புவட்டம்

ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கைப் பயணத்திலும் சமவயதுக்குழுக்கள் என்னும் தரப்பினரின் பங்களிப்பு இன்றியமையாததாகும். பாடசாலை முதல் பல்கலைக்கழகம் ஏன் வாழ்நாள் முழுவதும் ஒரு தொடர்கதையைப் போல நம்முடன் தொடர்ந்து கொண்டிருக்கும் இவர்களே நம் ஒவ்வொருவரினதும் வாழ்க்கைக்கான தொடக்கப்புள்ளியாகவும், முற்றுப் புள்ளியாகவும் அமைகின்றனர்.



எந்தவித எதிர்பார்ப்புக்களோ, முன் அனுபவங்களோ இன்றி தற்செயலாக நடைபெறுகின்ற செயற்பாடாகவே இச்சமவயதுக் குழுக்களின் உள்நுழைவானது ஒவ்வொருவரினது வாழ்விலும் அமைகின்றது என்பதனைவிட ஒவ்வொரு மாணவரினதும் வாழ்வில் ஏற்படுகின்றது என்றே கூறலாம். ஏனெனில் சமவயதுக் குழுக்களின் தோற்றத்திற்கு பாடசாலையே அடித்தளமிடுகின்றது.

இன்று பெற்றோர்களிடம் கற்றுக்கொள்ளாத பல்வேறு விடயங்களிளை சமவயதுக் குழுக்களிடம் இருந்தே நாம் கற்றுக்கொள்கின்றோம். குழுச் செயற்பாடுகளில் எவ்வித பாகுபாடுமின்றி அனைவரும் இணைந்து செயற்படல், அவர்களுடைய இன்பதுன்பங்களில் பங்கேற்று அவர்களுக்கு உறுதுணையாய் நிற்றல், சகபாடிகளின் திறன்களைக் கண்டறிந்து அவற்றினை ஊக்குவித்தல், படிக்கின்ற போதே நண்பர்களுடன் இணைந்து சுயதொழில்களை மேற்கொண்டு தங்கள் கற்றலுக்கான பணத்தினை சம்பாதித்துக் கொள்ளல் போன்ற சிறந்த விடயங்களிலும் கூட இவர்களின் பங்களிப்பானது மேலோங்கிக் காணப்படுகின்றது.

மேலும் பாடரீதியான சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்டறிந்து அதுதொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதனைக் காட்டிலும் சமவயதுக் குழுக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதிலேயே அதீத ஈடுபாட்டினைக் காட்டுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

நண்பர்கள் எனும்போது அங்கு வயதோ, இனமோ, மதமோ தாக்கம் செலுத்துவதில்லை. நாம் நமக்குப் பிடித்த சமவயதுக்குழுக்களுடன் நட்பெனும் உறவை ஏற்படுத்திக்கொள்கிறோம். நாம் நம் சகபாடிகள் எம் மதத்தவராகக் காணப்பட்டாலும் அவர்களுடைய அனைத்துவிதமான விழாக்களுக்கும் செல்வதுடன், அவர்களுடைய இன்ப துன்பங்களிலும் கலந்து கொள்கின்றார்கள், தனது நண்பர்களின் வீட்டிலே ஏதேனும் விசேட நிகழ்வென்றாலும் சரி, துக்க நிகழ்வென்றாலும் சரி நாம் அழைக்காமலே எதுவித எதிர்பார்ப்புக்களுமேயின்றி தன்னுடைய உறவாகவே எம்மை நினைத்து ஓடி வந்து உதவிசெய்து நமக்கு உறுதுணையாய் நிற்பதும் இவர்களே. இதனால் சமூக ஒற்றுமை மேலோங்குகிறது, ஓர் இனம் ஒரே தேசம் என்ற எண்ணக்கரு மேலெழுகின்றது.

நாம் பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலே ஈடுபடுகின்ற வேளைகளிலே நம்மை உற்சாகப்படுத்துவதிலும், நாம் தோல்வியை சந்திக்கின்ற வேளைகளில் நாம் துவண்டு போகாமல் நம்மை முன்னேற்றுவதிலும் இவர்களினுடைய பங்கு அளப்பரியதே.

ஏன் இன்று பல மாணவர்களின் வெற்றிக்குப் பின்னால் பெற்றோர்கள், ஆசிரியர்களைக் காட்டிலும் சமவயதுக்துழுக்களே பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றனர். இவர்கள் ஒருபோதும் நம்மைக் குறைத்து மதிப்பிடுவதில்லை. நம்மால் முடியாது என்று நம் மனதிலே பசுமரத்தாணி போல் புதைந்து காணப்படுகின்ற எதிர்மறையான சிந்தனையை முடியும் என்ற நேர்மறை மனவெழுச்சியாக மாற்றியமைக்கின்றனர்.

மாற்றுத்திறனாளிகள்கூட தங்களால் எதுவுமே இயலாது என்று அவர்களைச் சுற்றியுள்ளவர்களால் ஒதுக்கப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து மாற்றமடைந்து இன்று தங்களாலும் முடியும் என்பதனை பல்வேறு துறைகளினூடாகவும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர் இவர்களைப் பெற்றெடுத்த எத்தனையோ பெற்றோர்களின் ஆறாத வடுக்கள் ஆற்றப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் காரணம் அத்தகைய பிள்ளைகளை சக நண்பனானக் கருதி அவர்களை ஊக்குவிக்கின்ற அவர்களது சகபாடிகளே. பாடசாலை, பல்கலைக்கழகங்களிலும் கூட பிரியாவிடை நிகழ்வுகள் நடாத்தப்படுத்போதுகூட நம் அனைவரினது கண்களும் கலங்கிவிடும். நாம் அவர்களுடன் பயணித்த, கடந்து வந்த நாட்கள் அனைத்தும் நம் கண்முன்னே வந்துசேரும். மீண்டும் நாம் கடந்த அந்த நாடகள் மீண்டும் ஒருமுறை கிடைத்துவிடாதா என்று இன்று பலரும் ஏங்கிக் கொண்டிருப்பதும் நட்பின் மகத்துவத்தினையே உணர்த்துகின்றது.

எனவே இன்றைய கல்விச் சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களினுடைய பங்களிப்பானது நாம் தெரிவு செய்கின்ற நபர்களைப் பொறுத்தே அவர்கள் நம் வாழ்க்கைக்கான முன்னேற்றப்பாதைக்கு ஒளியேற்றி வைப்பவர்களா? அல்லது இருளிலே மூழ்கடிப்பவர்களா? என்பது தீர்மானிக்கப்படுகின்றது. இதனையே வள்ளுவப் பெருந்தகை,

'நிலத்தியல்பான் நீர்திரிந்
தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு'

என்ற குறளினூடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

**சுரேஷ் ஷஞ்சய் ராஜ்...**
இரண்டாம் வருட கல்வியல் சிறப்புக் கற்கை மாணவன்
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

# கொழும்பு தமிழ்ச்சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

## தலைவராக சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, பொதுச்செயலாளராக கலாநிதி ஜெ. தற்பரன்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஒத்திவைக்கப்பட்ட 82ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் கடந்த 25ஆம் திகதி சங்கத்தலைவர் கலாநிதி க. இரகுபரன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவராக சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தெரிவு செய்யப்பட்டார் (82 வருட கால சங்க வரலாற்றில் முதன்முறையாக ஒரு பெண் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளமை இம்முறையே என்பது விசேடமாக குறிப்பிடத்தக்கது).

துணைத்தலைவர்களாக கலாநிதி என்.எஸ். தணிகாசலம்பிள்ளை, செல்வ திருச்செல்வன், த.அரியரத்தினம், பொதுச் செயலாளராக கலாநிதி ஜெ.தற்பரன், நிதிச் செயலாளராக ம.பிரசாந்தன், உதவிச் செயலாளராக ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி உதவி நிதிச்செயலாளர் பா. நந்தகுமார், நூலகக்குழுச் செயலாளராக கலாநிதி க. இரகுபரன், இலக்கியக்குழுச் செயலாளராக தெ. மதுசூதனன், கல்விக்குழுச் செயலாளராக த.இராஜரட்னம், நிலையமைப்புக்குழுச் செயலாளராக செ.சத்தியராஜா, உறுப்புரிமைக்குழுச் செயலாளராக கி.பொன்னுத்துரை மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக பேராசிரியர் வ.மகேஸ்வரன், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், வேலுப்பிள்ளை இளஞ்செழியன், திருமதி லீலாவதி மோகனசுந்தரம், திருமதி செல்வராணி யோகராஜா, க. குமரன், திருமதி புவனேஸ்வரி அரியரத்தினம், கலாநிதி ந.குமரகுருபரன், மு.மனோகரன், ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன், என்.கே.எஸ். திருச்செல்வம், வே.ஜனகன், திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன், திருமதி சண்முகபிரியா கார்த்திகேசு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.





எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு மாத்தறை மாவட்ட உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை முன்னாள் தலைவர்கள், பிரதித் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள் மற்றும் அரசியல் முக்கியஸ்தர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வொன்று மாத்தறையில் அண்மையில் இடம்பெற்றது. இதில் மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்னாயக்கா உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம். (படங்கள் வெலிகம தினகரன் நிருபர்)

### கல்முனை ஸாஹிரா

# கொழும்பு கிளையின் வருடாந்த பொதுக் கூட்டம்

கல்முனை ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஆண்கள்) சங்கம் (ZCK OBA) கொழும்பு கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (31) பி.ப 3.30 மணிக்கு, கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள, ஹெக்டர் கொப்பேகடுவ கமநலக் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் உறுப்பினர்கள் டாக்டர் முனீர் (075 3267545), அல்லது நப்ரிஸ் (077 8777997) கைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு தங்கள் பங்கேற்பைப் உறுதி செய்யுமாறு கொழும்பு கிளையின் செயலாளர் கேட்டுள்ளார். மேற்படி கூட்டத்தில் முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### பழைய மாணவர் சங்க ஏற்பாட்டில்

# பாடசாலைக்கு முதலுதவி பெட்டிகள் அன்பளிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**




கலாவெவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நலன் கருதி பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில், ஒருதொகை முதலுதவிப்பெட்டிகள் பாடசாலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இதனை இளைஞர் பாராளு மன்ற உறுப்பினர் எப். எம். சஜீர் பெற்றுக் கொடுத்துள்ளார்.

முதற்கட்டமாக வகுப்பறைகளுக்கு தேவையான முதலுதவிப் பெட்டிகள் பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.ஏ. இல்ஹாமிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# பாஸியத்துல் நஸ்ரியா பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் அறிவிப்பு

தினகரன் பத்திரிகையின் 09.08.2024 ஆம் திகதி இதழின் 6 ஆம் பக்கத்தில், 'பாஸியத்துல் நஸ்ரியாவில் பெயர் மாற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் சிறுதவறொன்று இடம்பெற்றுள்ளது.

பேருவளை, மருதானையில் அன்றைய தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், அப்பாடசாலையின் அதிபரோ, ஆசிரியர்களோ ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லையென பாடசாலை அபிவிருத்தி சங்க நிறைவேற்றுக்குழு அறிவித்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அன்றைய ஆர்ப்பாட்டத்தில் ஊர் மக்கள், நலன்விரும்பிகள், பள்ளிச்சங்கத்தினர் போன்றோரே கலந்து கொண்டதாக பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் நிறைவேற்றுக்குழு சார்பாக அதிபர் தெரிவித்துள்ளார்.

# 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கு

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் மாவட்டத்தில் நடாத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான விசேட கருத்தரங்கில் தூய தேசத்திற்கான இயக்கத்தின் தலைவர் இஷாம் மரிக்கார் கலந்து சிறப்பித்தார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றுவதற்காக புத்தளம் மாவட்டத்தில் காத்திருக்கும் 3000 மாணவர்களுக்கான விஷேட வழிகாட்டல் கருத்தரங்கு செயற்திட்டமொன்று தூய தேசத்திற்கான இயக்கத்தின் தலைவர் இஷாம் மரிக்காரின் தந்தை செய்னுதீன் மரிக்கார் அறக்கட்டளை நிதியத்தின் மூலமாக, ஆசிரியர் எம்.டீ.எம்.நபீல் தலைமையிலான ஒபெட் அமைப்பின் உதவியோடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் புத்தளம் மாவட்டத்தை மையப்படுத்தி 10 முக்கிய நிலையங்களில் இந்த கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதன் முதல் கட்டமாக புத்தளம் ஸாஹிரா ஆரம்ப பாடசாலையில் முதலாவது வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் ஸாஹிரா ஆரம்ப பாடசாலை மாணவர்களை தூய தேசத்துக்கான இயக்கத்தின் தலைவர் சந்தித்து நல்ல பல கல்விசார் ஆலோசனைகளை வழங்கினார்.


HDFC BANK உங்கள் வீட்டு வங்கி

# HDFC வங்கி

## இடைக்கால நிதியியல் கூற்றுக்கள் முடிவடைந்த காலாண்டுக்கானது 2024.06.30 இல்

BB+(lka) (stable)
Fitch Ratings
(Fitch Rating - BB+ lka) outlook stable.

### வருமான அறிக்கை

முடிவடைந்த 30-06-2024 காலத்துக்கானது

| விபரம் | 2024 ஜுன் 30 முடிவடைந்த காலாண்டுக்கானது | 2023 ஜுன் 30 முடிவடைந்த காலாண்டுக்கானது | 2024 ஜுன் 30 முடிவடைந்த காலத்துக்கானது | 2023 ஜுன் 30 முடிவடைந்த காலத்துக்கானது |
|---|---|---|---|---|
| | ரூபா.'000' | ரூபா.'000' | ரூபா.'000' | ரூபா.'000' |
| வட்டி வருமானம் | 2,146,192 | 3,030,251 | 4,461,232 | 5,903,660 |
| வட்டி செலவினம் | 1,360,817 | 2,482,963 | 2,897,357 | 4,876,237 |
| **தேறிய வட்டி வருமானம்** | **785,375** | **547,288** | **1,563,875** | **1,027,423** |
| கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள் | 77,549 | 73,401 | 177,742 | 155,135 |
| கழி: கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | | - | - |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **77,549** | **73,401** | **177,742** | **155,135** |
| நிகர வணிக வருமானம் | - | - | - | - |
| இலாபம் மற்றும் நஷ்டம் மூலம் நியயமான மதிப்பில் நிதிச் சொத்துக்களின் நிகர இலாபங்கள் / (இழப்புகள்) | | | | |
| இலாபம் அல்லது நஷ்டம் மூலம் நியயமான மதிப்பில் நிதிப் பொறுப்புகளின் நிகர இலாபங்கள் / (இழப்புகள்) | - | - | - | - |
| ஏனைய விரிவான வருமானத்தின் மூலம் நியாயமான மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்களின் அங்கீகாரமற்ற | - | - | - | - |
| நிகர இலாபங்கள் / (இழப்புகள்) நிகர இலாபங்கள் / நிதிச் | - | - | - | - |
| சொத்துகளின் அங்கீகாரத்தை நீக்குதல் ஆகியவை கடனீட்டுச் சொத்துகளில் அளவிடப்படுகின்றன ஏனைய செயற்பாட்டு வருமானம் | - | 58,455 | - | 58,455 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **862,924** | **679,143** | **1,741,618** | **1,241,012** |
| குறைபாட்டுக் கட்டணம் (ரத்துச் செய்யப்பட்டது) | 4,131 | 73,034 | 42,593 | 41,643 |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **858,793** | **606,109** | **1,699,024** | **1,199,369** |
| தனிப்பட்ட செலவினங்கள் | 318,433 | 400,856 | 772,027 | 806,646 |
| தேய்மானம் மற்றும் பணமதிப்பு நீக்கம் | 43,931 | 45,205 | 88,027 | 88,895 |
| ஏனைய செலவினங்கள் | 157,928 | 134,193 | 295,429 | 261,505 |
| **VAT மற்றும் SSCL வரிக்கு முன்னரான செயல்பாட்டு இலாபம்** | **338,500** | **25,855** | **543,540** | **42,323** |
| கழி : நிதிச் சேவைகள் மீதான VAT மற்றும் SSCL | 110,773 | 72,638 | 221,534 | 144,496 |
| நிதிச் சேவைகள் மீதான வரிக்குப் பின்னரான பெறுமதி சேர் **VAT மற்றும் SSCL** | 227, 727 | **(46,783)** | **322,006** | **(102,173)** |
| கூட்டு முயற்சிகள் மற்றும் கூட்டு நிறுவனங்களின் பங்கு மற்றும் இலாபம் | - | - | - | - |
| **வரிக்கு முன்னரான இலாபம்** | **227,727** | **(46,783)** | **322,006** | **(102,173)** |
| வருமான வரிச் செலவினம் | 98,301 | (1,885) | 134,156 | 18,830 |
| காலத்திற்கான இலபம் | **129,426** | **(44,897)** | **187,850** | **(121,003)** |
| **இலாபம் சட்டுதல் செய்யப்பட்டது** | | | | |
| வங்கியின் உரிமை பங்குதாரருக்கு | 129,426 | (44,897) | 187,850 | (121,003) |
| கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு | | | - | - |
| **வருமானத்துக்கான பங்கொன்றிற்கான உழைப்பு** | | | | |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூபா) | 2.00 | (069) | 2.90 | (1.87) |

### விரிவான வருமான அறிக்கை

முடிவடைந்த 30-06-2024 காலத்துக்கானது

| விபரம் | 2024 ஜுன் 30 முடிவடைந்த காலாண்டுக்கானது | 2023 ஜுன் 30 முடிவடைந்த காலாண்டுக்கானது | 2024 ஜுன் 30 முடிவடைந்த காலத்துக்கானது | 2023 ஜுன் 30 முடிவடைந்த காலத்துக்கானது |
|---|---|---|---|---|
| | ரூபா.'000' | ரூபா.'000' | ரூபா.'000' | ரூபா.'000' |
| காலப்பகுதிக்கான இலாபம் / நஷ்டம் | 129,426 | (44,897) | 187,850 | (121,003) |
| **வருமான அறிக்கையில் மீள் வகைப்படுத்தப்படாதவை** | | | | |
| மறு அளவீட்டின் போது ஏற்படும் ஏனைய விரிவான இலாபம்/நஷ்டம் | (14,567) | - | (19,808) | - |
| மூலம் நியாயமான மதிப்பீட்டில் கடனீட்டுக் கருவிகள் | 4,370 | - | 5,943 | - |
| மேலே உள்ளவற்றின் மீதான ஒத்தி வைக்கப்பட்ட வரித் தாக்கங்கள் | (10,197) | - | (13,866) | - |
| நிகர ஏனைய விரிவான வருமானம் இலாபம் அல்லது இழப்பு என மறுவகைப்படுத்தப்பட வேண்டும் | | | | |
| **வருமான அறிக்கையில் மறுவகைப்படுத்தாத பொருட்கள்** | | | | |
| ஓய்வின் பின்னரான நன்மைக் கடப்பாடுகளின் மீள் மதிப்பீடு கழி வருமான அறிக்கையில் மீள் வகைப்படுத்தப்படாத விடயங்களுக்கான வரிச் செலவினங்கள் | - | - | - | - |
| **வரி நீங்கலான காலப்பகுதிக்கான (OCI) ஏனைய உள்ளடக்கிய வருமானம்** | (10,197) | - | (13,866) | - |
| **வரி நீங்கலான 31 மார்ச் காலப்பகுதிக்கான மொத்த வருமானம்** | **119,229** | **(44,897)** | **173,984** | **(121,003)** |
| **சாட்டுதல் செய்யப்பட்டது** | | | | |
| உரிமைப் பங்குதாரரின் இலாபம் | 119,229 | (44,897 | 173,984 | (121,003) |
| கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு | - | - | - | - |
| | **119,229** | **(44,897)** | **173,984** | **(121,003)** |

### நிதியியல் நிலைமைக் கூற்று

30-06-2024 இல் உள்ளவாறான விபரம்

| விபரம் | 30.06.2024 ரூபா."000" | 31.12.2023 ரூபா. "000" (கணக்காய்வு செய்யப்பட்ட) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 294,636 | 237,282 |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | - | - |
| வங்கிகளுடனான வைத்திருப்புக்கள் | 3,468,243 | 33,314 |
| இலாபம் / நஷ்டத்தின் ஊடாக அறியப்பட்ட நிதிச் சொத்துக்கள் | | |
| - நியாயமான பெறுமதியில் கணக்கிடப்பட்டது | - | - |
| - நியாயமான பெறுமதியில் பெயரிடப்பட்டது | - | - |
| இலதாக்கல் பெறுமதியின் நிதிச் சொத்துக்கள் | | |
| கடன்களும் முற்பணங்களும் | 41,046,586 | 41,217,714 |
| கடன் மற்றும் ஏனைய கருவிகள் | 3,461,149 | 7,162,774 |
| நிதிச் சொத்துக்கள் ஏனைய வடிவான வருமானம் மூரம் நியாய மதிப்பில் அளவிடப்பட்டவை | 15,171,281 | 16,814,672 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 211,629 | 222,575 |
| குத்தகை ROUA | 264,002 | 304,420 |
| முதலீட்டு ஆதனங்கள் | 1,284,000 | 1,284,000 |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 80,339 | 101,895 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 487,323 | 458,743 |
| ஏனைய சொத்துக்கள் | 99,409 | 103,719 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 65,868,596 | 67,941,107 |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை | 396,108 | 799,830 |
| பெறுமதி நிதியியல் கருவிகள் | - | - |
| இலதாக்கல் பெறுமதியின் நிதியியல் பொறுப்புக்கள் | | |
| வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 52,022,702 | 53,613,104 |
| எனைய கடன்பாடுகள் | 1,591,661 | 1,525,527 |
| வழங்களப்பட்ட கடன் பிணைகள் | 1,510,373 | 1,425,439 |
| குத்தகை பொறுப்புகள் | 298,880 | 335,679 |
| ஓய்வூதிய நலன்களுக்கான கடன்பாடு | 906,900 | 872,628 |
| நடப்பு வரி பொறுப்புக்கள் | 204,187 | 618,798 |
| ஏனையபொறுப்புக்கள் | 339,179 | 341,022 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 57,269,991 | 59,532,026 |
| **மூலதனம்** | | |
| **AT - 1 மூலதனம்** | | |
| நிரந்தர பிணைப்பு | 296,790 | 281,250 |
| **மொத்த AT - 1 மூலதனம்** | 296,790 | 281,250 |
| **உரிமையாண்மை மூலதனம்** | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் / ஒதுக்கப்பட்ட மூலதனம் | 962,093 | 962,093 |
| சட்டபூர்வ ஒதுக்க நிதி | 357,507 | 357,507 |
| ஏனைய முற்றடக்க வருமான ஒதுக்கம் | (24,823) | (10,957) |
| வைத்திருப்பு வருவாய் | 6,365,623 | 6,177,773 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 641,416 | 641,416 |
| கட்டுப்பாட்டில் இல்லாத பங்கு | - | - |
| மொத்த உரிமையாண்மை மூலதனம் | 8,301,816 | 8,127,832 |
| **மொத்த பங்குதாரரின் உரிமையாண்மையும் AT-1 மூலதனம்** | 8,598,605 | 8,409,082 |
| கட்டுபாடற்ற வரிகள் | | |
| மொத்த பொறுப்புக்களும் உரிமையாண்மையும் | 65,868,596 | 67,941,107 |
| **Contingent liabilities and commitments** | **340,598** | **305,616** |
| **Net Assets value per Ordinary Share (Rs)** | 128,29 | 125.60 |
| **Memorandum information** | | |
| Number of employees | 511 | 515 |
| Number of Branches | 39 | 39 |

**Note: Amounts stated are net of impairment and depreciation.**

### பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று

30-06-2024 முடிவடைந்த காலத்திற்கான — வங்கியில் பங்குகள் வைத்திருப்போருக்கு சாட்டுதல் செய்ய முடியும் — ரூபா.'000

| விபரம் | நடப்பு மூலதனம் | சட்டபூர்வ இருப்பு நிதி | OCI ஒதுக்கம் | தக்க வைத்திருக்கும் வருவாய் | ஏனைய ஒதுக்கீடுகள் | மொத்தம் | கட்டுப் படுத்தாத வட்டி | மொத்த பங்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **01/01/2023 இல் உள்ளவாறான மீதி** | **962,093** | **288,689** | **(46,022)** | **5,007,868** | **503,780** | **6,716,407** | **-** | **6,716,407** |
| காலப்பகுதிக்கான இலாபம் / நஷ்டம் | - | - | - | (121,003) | - | (121,003) | - | (121,003) |
| ஏனைய திரட்டிய வருமானம் (நிகர வரியில்) | - | - | | - | - | | - | |
| ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் பங்கு வழங்கல் / அதிகரிப்பு | - | - | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட போனஸ் | - | - | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட உரிமைகள் | - | - | - | - | - | - | - | - |
| குறித்த காலத்தில் இருப்புகளின் மாற்றம் | - | | - | | | - | - | - |
| செலுத்திய பங்குலாபம் | - | - | - | - | - | - | - | - |
| தலைமை அலுவலகத்துக்கு மாற்றப்பட்ட இலாபம் | - | - | - | - | - | - | - | - |
| ஆதனம்,பொறிக்கருவிகளின் மீள்மதிப்பீட்டு (இலாபம்/நஷ்டம்) | - | - | - | - | - | - | - | - |
| ஏனையவை | - | - | - | - | - | - | - | - |
| **30/06/2023 இல் உள்ளவாறான மீதி** | **962,093** | **288,689** | **(46,022)** | **4,886,864** | **503,780** | **6,595,404** | **-** | **6,595,404** |

வங்கியில் பங்குகள் வைத்திருப்போருக்கு சாட்டுதல் செய்ய முடியும் — ரூபா.'000

| விபரம் | நடப்பு மூலதனம் | சட்டபூர்வ இருப்பு நிதி | OCI ஒதுக்கம் | தக்க வைத்திருக்கும் வருவாய் | ஏனைய ஒதுக்கீடுகள் | மொத்தம் | கட்டுப் படுத்தாத வட்டி | மொத்த பங்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **01/01/2024 இல் உள்ளவாறான மீதி** | **962,093** | **357,507** | **(10,957)** | **6,177,773** | **641,416** | **8,127,832** | **-** | **8,127,832** |
| காலப்பகுதிக்கான இலாபம் / நஷ்டம் | - | - | - | 187,850 | - | 187,850 | - | 187,850 |
| ஏனைய திரட்டிய வருமானம் (நிகர வரியில்) | - | - | (13,866) | - | - | (13,866) | - | (13,866) |
| ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் பங்கு வழங்கல் / அதிகரிப்பு | - | - | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட போனஸ் | - | - | - | - | - | - | - | - |
| வழங்கப்பட்ட உரிமைகள் | - | - | - | - | - | - | - | - |
| குறித்த காலத்தில் இருப்புகளின் மாற்றம் | - | - | - | - | - | - | - | - |
| செலுத்திய பங்குலாபம் | - | - | - | - | - | - | - | - |
| தலைமை அலுவலகத்துக்கு மாற்றப்பட்ட இலாபம் | - | - | - | - | - | - | - | - |
| ஏனையவை | - | - | - | - | - | - | - | - |
| **30/06/2024 இல் உள்ளவாறான மீதி** | **962,093** | **357,507** | **(24,823)** | **6,365,623** | **641,416** | **8,301,816** | **-** | **8,301,816** |

### காசுப்பாய்ச்சல்கள் கூற்று

ரூபா.'000

| 30-06-2024 முடிவடைந்த காலத்திற்கான | வங்கி 2024 | வங்கி 2023 |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| வட்டிக்கான வரவுகள் | 3,530,059 | 6,085,339 |
| வட்டிக்கான கட்டணங்கள் | (2,994,156) | (4,319,462) |
| நிகர தரகு பெறுவனங்கள் | 139,108 | 133,448 |
| பணியாளர்களுக்கான கொடுப்பனவுகள் | (757,088) | (698,959) |
| VAT, CROP மற்றும் SSCL கட்டணங்கள் | (250,515) | (143,060) |
| பிற செயல்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற ரசீது | 27,814 | 49,754 |
| ஏனைய செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் | (330,992) | (260,590) |
| **செயல்பாட்டு சொத்துக்களின் மாற்றங்களும் முன்னரான செயல்பாட்டு இலாபம்** | **(635,769)** | **846,470** |
| **செயல்பாட்டு சொத்துக்களின் அதிகரிப்பு / வீழ்ச்சி** | | |
| பணமதிப்பு நீக்கப்பட்ட செலவின் நிதிச்சொத்துக்கள்-கடன்கள், முற்பணங்கள் | 1,080,068 | 1,998,959 |
| ஏனைய சொத்துக்கள் | 4,310 | (857,893) |
| | 1,084,378 | 1,141,066 |
| **செயல்பாட்டு பொறுப்புகளின் அதிகரிப்பு / வீழ்ச்சி** | | |
| பணமதிப்பு நீக்கப்பட்ட செலவின் நிதிப் பொறுப்புக்கள்-வைப்பாளர்களால் | (1,373,091) | 5,354,368 |
| பணமதிப்பு நீக்கப்பட்ட செலவின் நிதிப் பொறுப்புக்கள்-ஏனைய கடன் பெறுநர்களால் | (376,928) | 704,304 |
| ஏனைய பொறுப்புக்கள் | 8,611 | 58,401 |
| | (1,741,408) | 6,117,072 |
| **வருமான வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற நிகர இலாபம்** | (1,292,799) | 8,104,609 |
| செலுத்தப்பட்ட வருமானவரி | (549,513) | (49,266) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற நிகர பணம்** | **(1,842,312)** | **8,055,343** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்து பெற்ற காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம், இயந்திர உபகரணங்கள் கொள்வனவு | (15,082) | (26,676) |
| ஆதனம், இயந்திர உபகரணங்கள் விற்பதன் மூலம் கூடியவை | | |
| முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் | 1,914,748 | (8,137,751) |
| துணை நிறுவனங்கள் மற்றும் பங்காளிகளின் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட ஈவுதொகை | | |
| **முதலீட்டு நடவக்கைகளிலிருந்து பெறப்பட்ட நிகர பணத்தொகை** | **1,899,667** | **(8,164,427)** |
| **நிதியியல் நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்** | | |
| பங்குதாரருக்கு செலுத்திய பங்கிலாபம் | | |
| நிதியியல் நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் | | |
| காலத்தின் தொடக்கத்தில் பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை | 57,354 | (109,084) |
| கால ஆரம்பத்தில் பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை | 237,282 | 339,730 |
| கால முடிவில் பணம் மற்றும் பணத்துக்கு சமமானவை | **294,636** | **230,646** |
| **பணம் மற்றும் பணத்துக்கு சமமானவைகளின் சமரசம்** | | |
| கையிலிருக்கும் பணம் | 142,114 | 187,243 |
| வங்கியிலிருக்கும் பணம் | 152,522 | 43,403 |
| | **294,636** | **230,646** |

### அளவீட்டு அடிப்படையில் நிதிக்கருவிகளின் பகுப்பாய்வு

2024.06.30 காலத்துக்கானது ரூபா "000"

| விபரம் | பண மதிப்பிழப்பு செலவு (AC) | "இலாபம் அல்லது இழப்பு மூலமான நியாய மதிப்பு (FVTPL)" | "ஏனைய விரிவான வருமானம் மூலமான நியாய மதிப்பு (FVOCI)" | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 294,636 | - | - | 294,636 |
| வங்கிகளுடனான வாய்ப்புகள் | 3,468,243 | - | - | 3,468,243 |
| கடன்களும் முற்பணங்களும் | 41,046,586 | - | - | 41,046,586 |
| கடன் மற்றும் பிற கருவிகள் | 3,461,149 | - | - | 3,461,149 |
| நிதிச் சொத்து FVTOCI | - | - | 15,171,281 | 15,171,281 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **48,270,613** | **-** | **-** | **63,441,894** |
| ஏனைய சொத்துக்கள் | - | - | - | 2,426,702 |
| **மொத்த சொத்துக்கள்** | **48,270,613** | **-** | **-** | **65,868,596** |

| விபரம் | பண மதிப்பிழப்பு செலவு (AC) | "இலாபம் அல்லது இழப்பு மூலமான நியாய மதிப்பு (FVTPL)" | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகளால் | 399,108 | - | 396,108 |
| பணமதிப்பிழப்பு செலவுகளுக்கான நிதியியல் பொறுப்புக்கள் | | | |
| - வைப்பாளர்களால் | 52,022,702 | - | 52,022,702 |
| - பாதுகாப்புக் கடன் வைத்திருப்பவர்களால் | 1,510,373 | - | 1,510,373 |
| - ஏனைய கடன் வங்கியாளர்களால் | 1,888,451 | - | 1,888,451 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **55,817,635** | **-** | **55,817,635** |
| ஏனைய பொறுப்புக்கள் | - | - | 1,749,145 |
| பங்குகள் | - | - | 8,301,816 |
| **மொத்த பொறுப்புக்களும் பங்குகளும்** | **55,817,635** | **-** | **65,868,596** |

### அளவீட்டு அடிப்படையில் நிதிக்கருவிகளின் பகுப்பாய்வு (கணக்காய்வு செய்யப்பட்ட)

2023.12.31 காலத்துக்கானது ரூபா "000"

| விபரம் | பண மதிப்பிழப்பு செலவு (AC) | "இலாபம் அல்லது இழப்பு மூலமான நியாய மதிப்பு (FVTPL)" | "ஏனைய விரிவான வருமானம் மூலமான நியாய மதிப்பு (FVOCI)" | மொத்தம் |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| காசும் காசுக்குச் சமமானவையும | 237,282 | - | - | 237,282 |
| வங்கிகளுடனான வாய்ப்புகள் | 33,314 | - | - | 33,314 |
| கடன்களும் முற்பணங்களும் | 41,217,714 | - | - | 41,217,714 |
| கடன் மற்றும் பிற கருவிகள் | 7,162,774 | - | - | 7,162,774 |
| நிதிச் சொத்து FVTOCI | - | - | 16,814,672 | 16,814,672 |
| மொத்த நிதியியல் சொத்துக்கள் | 48,651,084 | | 16,814,672 | 65,465,755 |
| ஏனைய சொத்துக்கள் | | | | 2,475,352 |
| **மொத்த சொத்துக்கள்** | **48,651,084** | **-** | **16,814,672** | **67,941,107** |

| விபரம் | பண மதிப்பிழப்பு செலவு (AC) | "இலாபம் அல்லது இழப்பு மூலமான நியாய மதிப்பு (FVTPL)" | மொத்தம் |
|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகளால் | 799,830 | - | 799,830 |
| பணமதிப்பிழப்பு செலவுகளுக்கான நிதியியல் பொறுப்புக்கள் | - | - | - |
| - வைப்பாளர்களால் | 53,613,104 | - | 53,613,104 |
| - பாதுகாப்புக் கடன் வைத்திருப்பவர்களால் | 1,425,439 | - | 1,425,439 |
| - ஏனைய கடன் வங்கியாளர்களால் | 1,806,777 | - | 1,806,777 |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **57,645,149** | **-** | **57,645,149** |
| ஏனைய பொறுப்புக்கள் | | - | 2,168,127 |
| பங்குகள் | - | - | 8,127,832 |
| **மொத்த பொறுப்புக்களும் பங்குகளும்** | **57,645,129** | **-** | **67,941,107** |

AC – நிதிச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் என்பன பணமதிப்பிழப்பு செலவில் அளவிடப்படுகின்றது
FVPL – நிதிச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் இலாபம் அல்லது இழப்பு என்பன நியாயமான மதிப்பில் அளவிடப்படுகின்றது
FVOCI – நிதிச் சொத்துக்கள் ஏனைய விரிவானவருமானத்தின் மூலம் நியாயமான மதிப்பில் அளவிடப்படுகின்றது

### கடன் மற்றும் பெறத்தக்கவைகளின் பகுப்பாய்வு

2024.06.30 இல் உள்ளவாறு ரூபா."000"

| மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள | 30.06.2024 திகதியில் உள்ளவாறு | 31.12.2023 திகதியில் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்ட) |
|---|---|---|
| **தயாரிப்புகள் மூலம் - உள்நாட்டு நாணயம்** | | |
| வீட்டுக் கடன்கள் குடியிருப்பு சொத்துக்களை விட முதன்மை அடமானத்தால் பாதுகாக்கப்படுகின்றது | 9,587,822 | 10,044,132 |
| EPF தொகைக்கமைய வீட்டுக் கடன்கள் | 14,921,791 | 14,997,401 |
| உத்தரவாததாரர்கள் மற்றும் பிறர் மீதான வீட்டுக் கடன்கள் | 5,521,383 | 6,085,407 |
| தங்க அடகுக் கடன் | 1,250,746 | 927,038 |
| வணிகக் கடன்கள் | 2,208,773 | 2,520,774 |
| குத்தகையிலிருந்து பெற்ற வாடகை | 640,001 | 619,035 |
| தவணைமுறை கொள்முதல் | 2,523 | 2,523 |
| பணியாளர் கடன்கள் | 1,693,585 | 1,713,215 |
| பணவரம்புக் கடன்கள் | 2,728,771 | 2,729,933 |
| வட்டி மற்றும் பிற வரவுகள் | 5,045,285 | 4,091,068 |
| **கூட்டுத்தொகை** | **43,600,679** | **43,730,525** |
| தயாரிப்புகள் மூலம் - வெளிநாட்டு நாணயம் | - | - |
| **மொத்தம்** | **43,600,679** | **43,730,525** |

| தயாரிப்புகள் - நிலைவாரியான அர்பணிப்புகள் மற்றும் தற்செயல் செலவுகள் | 30.06.2024 | 31.12.2023 |
|---|---|---|
| தயாரிப்புகள் மூலம் - உள்நாட்டு நாணயம் | | |
| உத்தரவாதங்கள் | 8,720 | 3,720 |
| பிணைகள் | - | - |
| குறிக்கப்படாத கடன் வரம்புகள் | 331,878 | 301,896 |
| **கூட்டுத்தொகை** | **340,598** | **305,616** |
| தயாரிப்புகள் மூலம் - வெளிநாட்டு நாணயம் | - | - |
| **மொத்தம்** | **340,598** | **305,616** |

| கடன்கள், முற்பணங்கள், பொறுப்புக்கள் மற்றும் திடீர் செலவுகள் தொடர்பான நிலைவாரியான குறைபாடு | 30.06.2024 திகதியில் உள்ளவாறு | 31.12.2023 திகதியில் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்ட) |
|---|---|---|
| **மொத்தக் கடன்கள், முற்பணங்கள், பொறுப்புக்கள் மற்றும் திடீர் செலவுகள்** | 43,941,277 | 44,036,141 |
| கழி: கட்டம் 1 இன் கீழ் திரட்டப்பட்ட குறைபாடு | 250,717 | 284,953 |
| கட்டம் 2 இன் கீழ் திரட்டப்பட்ட குறைபாடு | 286,073 | 279,677 |
| கட்டம் 3 இன் கீழ் திரட்டப்பட்ட குறைபாடு | 2,017,303 | 1,948,181 |
| மொத்த குறைபாடு | 2,554,093 | 2,512,811 |
| **கடன்கள், முற்பணங்கள், பொறுப்புக்கள் மற்றும் திடீர் செலவுகள் மீதான மொத்த பெறுமதி** | **41,387,184** | **41,523,330** |

### குறைபாடு, வாடிக்கையாளர் வைப்பு மற்றும் கடன் பாதுகாப்பு பற்றிய பகுப்பாய்வு

2024.06.30 இல் உள்ளவாறு ரூபா."000"

| காலத்துக்கான குறைப்பட்டு நகர்வு | 30.06.2024 | 31.12.2023 (கணக்காய்வு செய்யப்பட்ட) |
|---|---|---|
| **கட்டம் 1 இன் கீழ்** | | |
| தொடக்க இருப்பு 01-01 | 284,953 | 245,981 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் (மீள எழுதப்பட்டது) | (34,236) | 38,972 |
| வருடத்தில் தள்ளுபடி செய்யப்பட்டவை | - | - |
| ஏனைய நகர்வுகள் | - | - |
| **முடிவிருப்பு** | **250,717** | **284,953** |
| **கட்டம் 2 இன் கீழ்** | | |
| தொடக்க இருப்பு 01-01 | 279,677 | 197,923 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் (மீள எழுதப்பட்டது) | 6,396 | 81,754 |
| வருடத்தில் தள்ளுபடி செய்யப்பட்டவை | - | - |
| ஏனைய நகர்வுகள் | - | - |
| **முடிவிருப்பு** | **286,073** | **279,677** |
| **கட்டம் 3 இன் கீழ்** | | |
| தொடக்க இருப்பு 01-01 | 1,948,181 | 1,563,136 |
| வருமான அறிக்கைக்கான கட்டணம் (மீள எழுதப்பட்டது) | 69,122 | 385,045 |
| வருடத்தில் தள்ளுபடி செய்யப்பட்டவை | - | - |
| ஏனைய நகர்வுகள் | - | - |
| **முடிவிருப்பு** | **2,017,303** | **1,948,181** |
| **மொத்தக் குறைப்பாடு** | **2,554,093** | **2,512,811** |

| ஏனைய வாடிக்கையாளர்களால் - உற்பத்தி மூலம் — ரூபாவில் "000" | 30.06.2024 திகதியில் உள்ளவாறு | 31.12.2023 திகதியில் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்ட) |
|---|---|---|
| **தயாரிப்புகள் மூலம் - உள்நாட்டு நாணயம்** | | |
| கோரிக்கை வைப்பு (நடைமுறைக் கணக்கு) | - | - |
| சேமிப்புகள் | 8,886,699 | 8,546,936 |
| நிலையான வைப்புகள் | 43,136,003 | 45,066,168 |
| ஏனைய வைப்புகள் | - | - |
| **கூட்டுத்தொகை** | **52,022,702** | **53,613,104** |
| தயாரிப்பு மூலம் வெளிநாட்டு நாணயம் | - | - |
| **மொத்தம்** | **52,022,702** | **53,613,104** |

### கடன் பாதுகாப்பு வட்டி வீதம் உடனான அரசாங்க பாதுகாப்பு வட்டி வீதங்கள்

| | வட்டி வீதம் % | | அரசாங்க பாதுகாப்பு வட்டி வீதம் % | |
|---|---|---|---|---|
| **கடன் பத்திர வகை** | **30.06.2024** | **31.12.2023** | **30.06.2024** | **31.12.2023** |
| **கடன் பத்திரம் - 10 ஆண்டுகள் 2015 (நிலையான ஆண்டு 2025)** | 12.00 | 12.00 | 10.37 | 13.63 |

### தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள்

| விபரம் | 30.06.2024 திகதியில் உள்ளவாறு | 31.12.2023 திகதியில் உள்ளவாறு |
|---|---|---|
| **போதுமான ஒழுங்குமுறை மூலதனம்** | | |
| பொதுவான பங்கு மூலதன கட்டம் 1 மில்லியன் ரூபா | 7,581 | 7,578 |
| மூலதன அடுக்கு 1 (CET1+AT1) மில்லியன் ரூபா | 7,831 | 7,828 |
| மொத்த மூலதனம் (Tier 1 Capital+Tire 2) மில்லியன் ரூபா | 8,225 | 8,253 |
| **ஒழுங்குமுறை மூலதன விகிதங்கள் (%)** | | |
| பொதுவான பங்குகளின் அடுக்கு 1 இன் மூலதன விகிதம் இடர் எடையுள்ள சொத்துக்களாக (குறைந்த பட்ச தேவை 7.0%) | 38.10% | 35.84% |
| கட்டம் 1 இன் மூலதன விகிதம் இடர் எடையுள்ள - சொத்துகளாக (குறைந்த பட்ச தேவை 8.5%) | 39.35% | 37.02% |
| மொத்த மூலதன விகிதம் இடர் எடையுள்ள சொத்துக்களாக (குறைந்த பட்ச தேவை 12.5%) | 41.33% | 39.03% |
| **அந்நிய செலாவணி விகிதம் (குறைந்த பட்ச தேவை 3%)** | 11.90% | 9.54% |
| **முறையான பணப்புழக்கம்** | | |
| சட்டபூர்வ திரவச் சொத்துக்கள் (மில்லியன் ரூபாய்களில்) | - | - |
| சட்டபூர்வ திரவச் சொத்துக்கள் (குறைந்த பட்ச தேவை 90%) | | |
| உள்நாட்டு வங்கிப் பிரிவு | - | - |
| கரையோர வங்கிப் பிரிவு | | |
| திரவச் சொத்துக்களின் மொத்த கையிருப்பு (மில்லியன் ரூபாய்களில் | 17,056 | 22,259 |
| பணப்புழக்க காப்பீட்டு விகிதம் (குறைந்த பட்ச தேவை 90%) | | |
| ரூபாய் | 225% | 394% |
| ஏனைய நாணயங்கள் | | |
| நிகர நிலையான நிதி விகிதம் (குறைந்த பட்ச தேவை 90%) | 108% | 143% |
| **சொத்துக்களின் தரம் (கடன் இலாகாவின் தரம்)** | | |
| குறைபாடுள்ள கடன்கள் (படிநிலை 3 விகிதம்) (%) | 42.56% | 41.51% |
| குறைபாடுகள் கடன்கள் (படிநிலை 3 இன் கடன் விகிதம்) (%) | 10.35% | 10.22% |
| குறைபாடுகள் கடன்கள் (படிநிலை 3 இன் கடன் விகிதம்) (%) EPF கடன்கள் தவிர்ந்த | 24.43% | 22.56% |
| குறைபாடுகள் (படிநிலை 3 இன் கடன் விகிதம்) (%) EPF கடன்கள் தவிர்ந்த | 23.68% | 23.45% |
| **இலாபம்** | | |
| வட்டிக்கான வரம்பு | 4.67% | 3.76% |
| சொத்துக்கள் மீதான வருமானம் (வரிக்கு முன்னதான) | 0.96% | 3.29% |
| பங்குகள் மீதான வருமானம் | 4.57% | 18.54% |
| கடன்கள் /பங்குகள் (முறைகள்) | 0.46 | 0.50 |
| வட்டிக்கான காப்பீடு (முறைகள்) | 5.07 | 9.02 |
| பெற்ற வட்டி | 13.90% | 18.15% |

| நிதியியல் குறிகாட்டிகள் | பங்குகளின் விலை (ரூபா) இரண்டாம் காலாண்டு 30.06.2024 | பங்குகளின் விலை (ரூபா) 31.12.2023 திகதியில் உள்ளவாறு | கடனீட்டு விலை (ரூபா) 2015 இல் வெளியிடப்பபட்டது இரண்டாம் காலாண்டு 30.06.2024 |
|---|---|---|---|
| **காலாண்டுக்கான பங்குகள் / கடனீட்டுப் பத்திரங்கள் சந்தை விலை** | | | |
| உயர் விலை | 38.80 | 38.40 | N/T * |
| குறைந்த விலை | 32.00 | 28.90 | N/T * |
| கடைசி வர்த்தகத்தின் விலை | 36.00 | 31.60 | N/T * |

* N/T - பரிவர்த்தனை இல்லை

### பட்டியலிடப்பட்ட கடனிட்டுத் தகவல்கள்

கடைசி வர்த்தகத்தின் முதிர்ச்சிக்காக பெறப்பட்டவை (% வருடாந்த)

| 30.06.2024 இல் முடிவடையும் காலாண்டுக்கானது | 2024 | 2023 |
|---|---|---|
| 10 ஆண்டுகளுக்கான நிலையான வருடாந்த வட்டி (12.00 வருடாந்தம்) | - | - |

### நிதிநிலை அறிக்கைக்கான குறிப்புகள்

1. 30.06.2024 இன் நிதிநிலை அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, காசுப்பாய்ச்சல் அறிக்கை மற்றும் முடிவடைந்த காலாண்டுக்கான பங்குகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை வங்கியின் தணிக்கை செய்யப்படாத கணக்குகளில் இருந்து பெறப்பட்டு தகவல்கள் CSE மற்றும் CBSL ஆகியவற்றால் தேவைப்படும் அறிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன. தேவையேற்பட்டால் LKAS 34 இடைகால நிதி அறிக்கைக்கு இணங்க மேலதிகமான வெளிப்பாடுகளை வழங்கி வரும்.
2. நிதிச் சொத்துக்களை அகற்றுவதன் மூலம் பெறப்பட்ட மூலதன வருமானம் மற்றும் வரிக்கு பின்னரான இலாபம் பின்வருமாறு.
3. 2024.06.30 இல் முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கைகளில் சரிசெய்தல் அல்லது வெளிப்படுத்துதல், ஒரு குறிப்பிட்ட வகை கடன் வாடிக்கையாளர்களுக்கான வட்டிக் கட்டணங்களில் திருத்தம் தவிர. ஒரு சுதந்திரமான துல்லியமான தாக்கத்தை தீர்மானிக்க கணக்காளர்கள் நிறுவனம் இந்த திருத்தத்தை மதிப்பிடும்.
4. 2023.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளின் படி நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
5. தற்செயல் பொறுப்புகளுக்கு வழங்கப்படாத கடன்கள் மற்றும் வாடிக்கையாளரக்கு வழங்கப்படும் உத்தரவாதங்கள்.
6. 2024.06.30 இல் வங்கிக்கும் பங்குகளின் இருபது பெரிய பங்குதாரர்கள் வைத்திருக்கும் பங்குகள்

| பங்குதாரர்களின் பெயர்கள் | பங்குகளின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| 1. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 32,180,000 | 49.73 |
| 2. சம்பத் வங்கி PLC /LOLC ஹோல்டிங்ஸ் PLC | 9,707,740 | 15.00 |
| 3. வரையறுக்கப்பட்ட தர்ஸ்டன் முதலீடுகள் | 9,155,000 | 14.15 |
| 4. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி / டாக்டர்.டி.செந்தில்வேல் | 4,893,378 | 7.56 |
| 5. கண்டொமினியம் முகாமைத்துவ அதிகாரசபை | 300,000 | 0.46 |
| 5. நகர அபிவிருத்தி அதிகாரசபை | 300,000 | 0.46 |
| 7. டாக்டர்.ஆர்.அர்.டி.சில்வா | 295,126 | 0.46 |
| 8. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி / திரு.அரணாசலம் சித்தம்பலம் | 258,054 | 0.40 |
| 9. திருமதி.எஸ்.என்.சீ.டப்லியூ.எம்.டீ.ஆர்.கந்தேகெதர | 235,325 | 0.36 |
| 10. வரையறுக்கப்பட்ட ரவி எக்ஸ்போர்ட்ஸ் | 200,000 | 0.31 |
| 11. வரையறுக்கப்பட்ட FINCO ஹோஸ்டிங்ஸ் | 185,000 | 0.29 |
| 12. தி அசோசியேட் நிவ்ஸ் பேப்பர்ஸ் / சிலோன் லிமிடட் | 180,000 | 0.28 |
| 13. திரு.டீ.ஏ.டி.சொய்சா | 170,000 | 0.26 |
| 14. டாக்டர்.எஸ்.யத்தெஹிகே | 133,180 | 0.21 |
| 15. திர.எஸ்.அபிஷேக் | 128,709 | 0.20 |
| 16. தேசிய நீர் வழங்கல்மற்றும் வடிகால் அமைச்சு | 120,000 | 0.19 |
| 16. பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை | 120,000 | 0.19 |
| 16. அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் | 120,000 | 0.19 |
| 19. திரு.ஏ.சீ.சேனக | 114,910 | 0.18 |
| 20. செலான் வங்கி பிஎல்சி/ கரகொட லொகு கமகே உதயானந்த | 114,400 | 0.18 |
| **மொத்தம்** | **58,910,822** | **91.06** |

*பொது இருப்புக்களின் சதவிதம் 36.080%, பங்குகளின் எண்ணிக்கை 23,347,637 மற்றும் பங்குதாரரகளின் எண்ணிக்கை 2181.

7. இணக்கத்திற்கான குறைந்தபட்ச பங்குதாரர்கள்

| விருப்பத்தெரிவு - 5 | இணக்கத்திற்கான குறைந்தபட்ச பங்குதாரர்கள்: மிதக்கும்-சரிசெய்யப்பட்ட சந்தை மூலதனம் | பொது இருப்புக்களின் சதவீதம் | பொது பங்குதாரர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **ஆகக் குறைந்தது** | **2.5 க்கு குறைந்தது** | 20% | 500 |
| **காணப்படுவது** | **0.84** | **36.08%** | **2,181** |

8. 2024.06.30 இன் இறுதியில் வங்கியில் பங்குகள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களில் பணிப்பாளர்கள் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் இரப்பகள் பின்வருமாறு

| பணிப்பாளர்கள் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | கடனிட்டும் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. திரு.ஈ.டீ.பீ.சூசைபிள்ளை | - | - |
| 2. திரு.டப்ளியூ.எம்.ஆனந்த | - | - |
| 3. திரு.பீ.ஏ.லயனல் | 2,000 | - |
| 4. திரு.டீ.எம்..எம்.எம். விஜயரத்ன | - | - |
| 5. திரு.பீ.எம்.கே.ஹெட்டியாரச்சி | - | |
| 6. டாக்டர்.கே.பதிராஜ.(பீ.ஏ.கிரிஷான்த) | 1,000 | - |
| 7. திரு.ஆர் சூரியாராச்சி | - | - |
| 8. திரு.டி.எம்.என்.பி.கருணாபால (GM / CEO) | - | - |
| **மொத்தம்** | **3,000** | **-** |

9. நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனத்தைக் குறிக்கும் பங்குகளின் எண்ணிக்கை - 64,710,520

**உறுதிப்படுத்தல் :**

HDFC வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரதம நிதி அதிகாரி என்ற வகையில் நாம் கையொப்பமிட்டு நாங்கள் : [illegible]

(1) [illegible]

(2) [illegible]

[illegible] தலைமை நிதி உத்தியோகத்தர்

டி.எம்.என்.பி.கருணாபால பொது முகாமையாளர் / பி.நி.அ

பி.எம்.கே.ஹெட்டியாராச்சி தலைவர் - கணக்காய்வுக் குழு

ஈ.டி.பி.சூசைபிள்ளை தலைவர்

திகதி: 06/08/2024

[illegible]

HDFC வங்கி
HDFC BANK உங்கள் வீட்டு வங்கி



பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த நன்னாள் ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி விழா கடந்த 26ஆம், 27ஆம் திகதிகளில் கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. இதன்போது இரண்டாம் நாள் மாலை சந்தியா ஆரத்தியைத் தொடர்ந்து ஹரே கிருஷ்ணா இசை நாட்டியக்கல்லூரி மாணவிகள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## மீண்டும் கஷ்ட யுகம் ஏற்பட்டால்...

விடுத்தார். நுகேகொட ஆனந்த சமரகோன் திறந்தவெளி அரங்கில் (28) இடம்பெற்ற "இயலும் ஸ்ரீ லங்கா" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மக்கள் பேரணியில், பெருந்திரளான மக்கள் பங்கேற்று ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பளித்தனர்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

''இதே இடத்தில் அரசியல் மேடையில் இதற்கு முன்னதாகவும் பேசியுள்ளேன். அப்போது இன்று என்னோடு இருக்கும் அமைச்சர்கள் இருந்த மேடையை விமர்ச்சித்துள்ளேன். அவர்ளும் என்னை விமர்ச்சித்துள்ளனர். இன்று நாங்கள் ஒரே மேடையில் இருக்கிறோம்.

அன்று இந்நாட்டு ரூபாவின் பெறுமதி 50 சதவீத்தினால் குறைந்திருந்தது. இதற்கு தீர்வு தேடுவதா? இல்லாவிட்டால் பிரச்சினையை சாடுவதா? என்ற கேள்வி இருந்தது. நாட்டில் கேஸ், உணவு, மருந்து இல்லாத வேளையில் நாம் என்ன செய்ய வேண்டும். இதையே நாங்கள் சிந்தித்தோம். இதற்கு தீர்வுத் தேட என்னோடு வந்தவர்கள் இன்றும் எனது மேடையில் இருக்கின்றனர்.

எம்மை விமர்சிப்பவர்கள் அன்று என்ன செய்தனர். அவர்களின் விமர்சனங்கள் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தந்ததா? மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. சஜித்துக்கும் அனுரவுக்கும் அன்று அழைப்பு விடுக்கப்பட்டது. மக்கள் இறந்தாலும் தமது அரசியல் இலாபமே முக்கியம் என்று இவர்கள் நினைத்தனர். இதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

சகல மக்களும் சமூகமாக என்னோடு இணைந்துள்ளனர். எதிர்கட்சியினர் அன்று எதற்காக பொறுப்பை ஏற்க மறுத்தனர்? அன்று மக்களை பற்றி சிந்திக்காத தலைவர் இன்று அதிகாரத்தை கோருகிறார். நாட்டில் பிரச்சினை வந்தால் கட்டுநாயக்கவிற்கு ஓடி விமானத்தில் பறந்துவிடுவார். கஷ்ட காலத்தில் எந்த ஜனாதிபதி மக்களோடு இருப்பார் என்று சிந்தியுங்கள். அன்று இல்லாதவர்கள் இன்று வந்து புத்தகம் படித்து காட்டுவதில் அர்த்தமில்லை.

2022 இல், மொத்த தேசிய உற்பத்தி 15 சதவீதத்தால் குறைந்தது. ரூபாவின் பெறுமதியும் குறைந்தது. அதனால் பொருட்களின் விலை அதிகரித்தது. வாழ்க்கை சவாலாக மாறியது. இன்றும் பிரச்சினைகள் உள்ளன.

ஒரு வருடத்தில் முடிந்த சலுகையை தந்திருக்கிறேன். நீங்கள் எனக்கு தந்த வாய்ப்பை பயன்படுத்தி சர்வதேச நாணய நிதியத்துடன் பேசி, ரூபாவின் பெறுமதியை பலப்படுத்த வழி செய்தேன்.

இலங்கைகுள்ளேயே பணத்தை தேடினோம். விருப்பமின்றியேனும் மருந்து குடிப்பது போல கஷ்டமான தீர்மானங்களை எடுத்தோம். மக்கள் எம்மை திட்டித் தீர்த்தனர். ஆனால், நாம் மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்தோம். வரி சேகரிக்க ஆரம்பித்தோம் ரூபாயின் பெறுமதியும் வலுவடைந்தது அதன் பலனாக கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

பருப்பு விலை குறைந்துள்ளது. பஸ் கட்டணமும் குறைந்திருக்கிறது.

இன்று கிரீஸ் பற்றி பேசுவோர் அன்று ஒலிம்பிக் ஆரம்பித்த கிரீஸுக்கே ஓடி மறைந்தனர். ஆனால் பேய்களை கண்டு நான் ஒருபோதும் அஞ்சுவதில்லை. ஜே.ஆர் ஜயவர்தனவிடமே பாடத்தைக் கற்றேன். செய்து காட்ட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது.

அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வரையில் சம்பளத்தை அதிகரித்தோம்.

அடுத்த வருடத்திலும் உதய செனவிரத்ன அறிக்கையின் பிரகாரம் சம்பள அதிகரிப்புச் செய்ய தீர்மானித்திருக்கிறோம். அதனால் வாழ்வாதாரச் செலவை அதிகரிப்போம். வருமானம் ஈட்டும் போது செலுத்த வேண்டிய வரி வரம்பை குறைத்திருக்கிறோம்.

யானைக்கோ, கதிரைக்கோ, கை சின்னத்துக்கோ மொட்டுக்கோ வாக்களிக்கவில்லை. உங்கள் சமையலறைக்கே வாக்களிக்க போகிறீர்கள்.

சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டர் இல்லை என்று என்னை திட்டித் தீர்க்காதீர்கள்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன:

"ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தம் நாட்டு மக்கள் மூச்சுவிடும் நிலைமையை உருவாக்கியுள்ளது. இந்த ஒப்பந்தத்தை அடுத்த மூன்று வருடங்களும் சரியான முறையில் வழிநடத்திச் செல்ல வேண்டும். அரச ஊழியர்கள் கொடுப்பனவு, அபிவிருத்தி பணிகள் என்பவற்றை உள்ளடக்கியே அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை தயாரிக்க வேண்டியுள்ளது.

அடுத்த வருடம் வரவு செலவு திட்டத்தில் 5018 பில்லியன் ரூபா துண்டு விழும் தொகையாக காணப்படும். 666 பில்லியன் ரூபா தேடிக்கொள்வதற்கான வழியை தற்போதும் ஜனாதிபதி தேடி வைத்துள்ளார். 700 பில்லியன்களை உலக வங்கி பெற்றுத்தரும். அவற்றை பெற்றுக்கொள்ளாமல் நாட்டு மக்களுக்கான எதிர்காலத்தை வடிவமைக்க எவராலும் முடியாது.

அதனை செய்யக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மட்டுமே என்பதை புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதார செயற்பாடுகளை மாற்றும் வகையில் 5 சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைகவேற்றப்பட்டுள்ளன. அந்த ஐந்து சட்டங்களும் நாட்டின் பாதுகாப்புக்கான பஞ்சாயுதமாகும்." என்றார்.

## பொருளாதார யுத்தத்தில் வெற்றியீட்டிய...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொண்டார் .

எதிர்க்கட்சியின் எதிர்கால அரசியல் நோக்கங்களை கருத்தில் கொண்டு இற்கு இணங்க மறுத்து விட்டார். நாட்டின் பிரதமர் பதவியையும் அந்த சந்தர்ப்பத்தில் அவர் பொறுப்பேற்க மறுத்துவிட்டார்.

அந்த வகையில் தனி ஒரு மனிதனாக நாட்டைப் பொறுப்பேற்று, பொருளாதார யுத்தத்தை முழுமையாக பொறுப்பேற்று இரண்டு வருட காலத்தில் அதனை வெற்றி கொண்ட தலைவராக ரணில் விக்கிரமசிங்க திகழ்கிறார்.

தற்போது நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளது. பணவீக்கம் தனி இலக்கத்திற்கு வந்துள்ளது. ஒருபோதும் இல்லாதவாறு நாட்டுக்கு பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். சுற்றுலாத்துறை வருமானம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் பெரும் நம்பிக்கை மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

நாட்டின் எதிர்காலத்தை வெற்றிகரமாக கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்கள் ஜனாதிபதியிடம் மட்டுமே உள்ளன. மக்கள் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் செப்டம்பர் (21) மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவை நாட்டின் ஜனாதிபதியாக்க வேண்டும். எதிர்கால சவால்களிலிருந்து நாட்டை வெற்றி கொள்ளும் பலம் அவரிடமே உள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இறப்பருக்கு உரமானியம்...

தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவுக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர ஆலோசனை வழங்கியுள்ளார். இவ்வாரம் முதல் இறப்பருக்கான உரமானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நெல் உற்பத்திக்கு ஒரு ஹெக்டேயருக்கு 25,000 ரூபா வீதம் உர மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர தேயிலை, தென்னை மற்றும் கறுவா போன்ற உற்பத்திகளுக்காக 4000 ரூபா உர மானியம் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் இறப்பர் உற்பத்திக்கு பல வருடங்கள் உரம் வழங்கப்படாததால்,இறப்பர் உற்பத்தி ஒரு இலட்சம் மெற்றிக் தொன்னிலிருந்து 65,000 மெற்றிக் தொன் வரை குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## GCE O/L பெறுபேறுகள்...

அனைத்து பணிகளும் தற்போது நடைபெற்று வருவதாகவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக பரீட்சை திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப அதிகாரிகளை வேறு நிறுவனங்களுக்கு மாற்றுவதால், இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களை இடமாற்றம் செய்ய வேண்டாமென, பொது நிர்வாக அமைச்சிடம் கோரிய போதிலும் உரிய தீர்வு கிடைக்கவில்லையெனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

## மட்டு. மங்களாராம...

கைது செய்யப்பட்ட சுமனரத்ன தேரரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், எதிர்வரும் செப்டம்பர் (06) விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு, சஜித் பிரேமதாசவிடம் நான் கோரினேன்.

சஜித், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். தலதா சிறந்த யோசனையை முன்வைத்ததாகவே, நான் கூற வேண்டும்" எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

வெற்றியீட்ட முடியுமென சஜித் பிரேமதாச இன்னமும் நம்புவதால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்ளத் தயங்குகிறார். இதனால் கட்சியின் நிலை குறித்து ஏமாற்றமடைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், ரணிலுடன் இணைய காத்திருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் தீவிரமடையும்போது அவர்கள் அவ்வாறு செய்வார்கள்" என்று அவர் கூறினார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஜனாதிபதிக்கு எதிரான...

ஜனாதிபதி, தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என அறிவிக்குமாறும் தனது மனுவில் கோரியிருந்தார்.

இந்நிலையில்,இம்மனுவை விசாரணைக்கு எடுப்பதை உயர் நீதிமன்றம் நிராகரித்ததுடன் வழக்குச் செலவாக 50 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறும் மனுதாரருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கட்டணத்தை ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

அடிப்படை உரிமை மனு தொடர்பாக எவ்வித அடிப்படை சட்ட அறிவுமின்றி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எச். எம்.டி.நவாஸ் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியிடம் சுட்டிக்காட்டினார்.

## அலி சாஹிரை...

தெரிவித்து அலி சாஹிர் மௌலானாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென, முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்திருந்தது.

இது தொடர்பில் விளக்கம் கொடுக்க அலி சாஹிர் மௌலானாவுக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான கடிதம் கடந்த 21 பதிவுத் தபால் மூலம் மௌலானா தரப்புக்கு கிடைத்துள்ளது.

இந்த ஒரு வார காலம் நேற்று இரவு 12 மணி வரையில் இருந்தாலும், நேற்றே முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் கிழக்குப் பகுதியில் ஒரு இடத்தில் ஒன்று கூடி அலி சாஹிர் மௌலானாவை கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கைகளை எடுத்திருந்ததாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் அலி சாஹிர் மௌலானாவை கட்சியின் பதவியில் இருந்து நீக்க முடியாது என்றும் அவருடைய அங்கத்துவத்தை நீக்க முடியாதென்றும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

## ஜனாதிபதி ரணிலின் தேர்தல்...

வரலாற்றில் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட இலங்கை, படிப்படியாக மீண்டு வந்ததன் பின்னர், மற்றுமொரு அடியை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கைக்கு நேராக...

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நேற்று (28) நண்பகல் 12.11 மணி முதல் நெடுந்தீவு, பூநகரி, தட்டுவன்கொட்டி மற்றும் சுண்டிக்குளம் போன்ற இடங்களுக்கு நேரே சூரியன் உச்சம் கொடுத்துள்ளது. இக்காலங்களில் நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை உயர்வடையக் கூடுமென, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. சிறுவர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டோர் இந்நிலைமை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. பொதுமக்கள் முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வு எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

## ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின்...

சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## மாவட்ட அபிவிருத்தி நிதி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பாராளுமன்ற உறுப்பினர்களின் அபிவிருத்தி முன்மொழிவுகளுக்கேற்ப, வெவ்வேறு தொகையான நிதி ஜனாதிபதி செயலாகத்தால் ஒதுக்கப்படுகிறது.

இந்நிதிகள், நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகிறதே தவிர, எந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்படுவதில்லை.

## வடக்கு, கிழக்கு மாகாண... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர், இதனை தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடா்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவளிக்கின்றனர்.

மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்காக மக்கள் தங்களின் வாக்குகளை பயன்படுத்த வேண்டும். இன்று பலர் அரசியல் வரப்பிரசாதங்களை பெறுவதற்காக தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

பொது வேட்பாளராக இருந்தாலும் அல்லது ஏனைய வேட்பாளராக இருந்தாலும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்ட தலைவருடன் மக்கள் இன்று இணைந்துள்ளனர். செப்டெம்பர் 22 இல், நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தெரிவு செய்யப்படுவாரென பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் மேலும் குறிப்பிட்டார்.

## இன்றைய பலன்கள் (29.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:** பொருளாதார பற்றாக்குறை ஏற்படும். வாங்கிய கடனை கொடுக்க முடியாமலும் கொடுத்த கடனை வசூலிக்க முடியாமலும் திணறுவீர்கள்.

**ரிஷபம் :** எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் திடீர்னு வரும் மாற்றங்கள் மன வருத்தத்தை உருவாக்கும்.

**மிதுனம்:** உங்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் தடைப்படும். பிள்ளைகளால் பிரச்சினைகள் அதிகரிக்கும்.

**கடகம்:** பொருளாதார பற்ற குறையை சரி செய்ய புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** தொழில் போட்டி அதிகரிக்கும். துணிவும் தன்நம்பிக்கையும் தேவைப்படும் நேரம் இது.

**கன்னி:** பணத்தட்டுப்பாடு அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் உங்களை விட்டு விலக நேரிடும்.

**துலாம்:** ஆரோக்கிய தொல்லை அதிகரிக்கும். மருத்துவச் செலவு ஏற்படும். தன்னம்பிக்கை தான் உங்களுக்கான துணை. அதை எப்போதும் கைவிடாதீர்கள்.

**விருச்சிகம்:** விரயங்கள் கூடுதலாக இருந்தாலும் அதற்கு ஏற்ற விதத்தில் வருமானம் வந்து கொண்டே இருக்கும்.

**தனுசு:** உத்தியோகத்தில் திடீர் மாற்றமும் பதவி உயர்வும் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாக நடந்து கொள்வார்கள்.

**மகரம்:** பிள்ளைகள் வழியிலும் பிரச்சனைகள் வரலாம். பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்துக்களாலும் பிரச்சினைகள் வரலாம்.

**கும்பம்:** இன்பங்கள் குறையும் .துணிவும் தன்னம்பிக்கையும் அதிகம் தேவைப்படும். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கிய குறைபாடு ஏற்படும்.

**மீனம்:** நினைத்த காரியங்கள் நிறைவேறும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைவர்.

## IMF: மீண்டும் பேச்சு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அந்த பயன்களை அடைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிறந்த தலைமைத்துவத்தை வழங்கினார்.

சர்வதேச உறவுகள் மூலம் நாட்டின் கடனை மறுசீரமைக்க 17 நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்படிக்கையை எட்ட முடிந்திருப்பது நாம் பெற்ற பாரிய வெற்றி என்றே கூற வேண்டும்.

இன்று நாம் எமது வெளிநாட்டுக் கொள்கை, தேசிய தனித்துவம் மற்றும் இறையாண்மை ஆகியவற்றை எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்காமல் கடன் மறுசீரமைப்பு செயல்முறையை நிறைவு செய்துள்ளோம். இன்று, பொருளாதார நெருக்கடியில் இருந்து மிக விரைவாக மீண்டு வருவதற்கு, உலகிற்கே எடுத்துக்காட்டாக நாம் மாறியுள்ளோம். தற்போது, பாகிஸ்தான், மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக எங்களிடம் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றன.

இந்த நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய தலைமைத்துவம் சர்வதேச ரீதியாக பாராட்டைப் பெற்றுள்ளது என்றார்.

## நாட்டின் முதலாவது... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இலங்கையின் முதலாவது இயற்கை திரவ வாயு மின் உற்பத்தி நிலையமான கெரவலப்பிட்டிய 'சொபாதனவி' ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையத்தின் முதல் கட்டத்தை நேற்று (28) காலை திறந்து வைத்து உரையாற்றும் போதே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் தெரிவித்தார்.

நாட்டின் நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்காக நாட்டின் மின்சார விநியோகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் முக்கியமான உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டமான 'லக்தனவி' நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட "சொபாதனவி" மின் உற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்பிற்கு 350 மெகாவோட் மின்சாரத்தை பெற்றுத்தரும்.

முதல் கட்டமாக, 220 மெகாவாட் வலுவை கொண்ட FClass gas turbines இயக்கும் பணிகள் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதனால் நாட்டின் தேசிய மின் கட்டமைப்புக்கு மின்சார உற்பத்தி மூலத்துக்கு தேவையான பங்களிப்பு வழங்கப்படும்.

இரண்டாம் கட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் நிறைவு செய்யப்படவுள்ளது. நீராவி சுழற்சி விசையாழி ஒன்றை நிறுவுவதன் மூலம் உற்பத்தி நிலையத்திலிருந்து மேலும் 130 மெகாவோட் மின் உற்பத்தியை பெற்றுக்கொள்ள முடியும்.

இரண்டாம் கட்டத்தில், விசையாழி அமைக்கப்பட்டதன் பிரதிபலனாக உற்பத்தி நிலையத்திலிருந்து 350 மெகாவோட் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## ஐ.தே.கட்சியின் வட்டார... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்யும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க, நாடு பூராகவும் பிராந்திய மற்றும் பிரதேச அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அக்கரைப்பற்று பிரதேசத்தில், நீண்டகாலமாக சமூக சேவை செயற்பாடுகளில் எம்.ஏ.செய்னுடீன் சலீம் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல் சுவரொட்டிகளை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நாரஹேன்பிட்டி பிரதேசத்தை சேர்ந்த விஜேரத்ன மற்றும் வெள்ளவத்தை பிரதேசத்தை சேர்ந்த எல்பர்ட் என்ற இருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கறுவாத்தோட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரவு நேரத்தில், தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டும்போது ரோந்து வந்த பொலிஸ் குழுவினர் இருவரையும் கைது செய்ததாக பொலிஸ் அதிகாரி நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

தேர்தல் விதிகளின்படி அங்கீகரிக்கப்படாத இடங்களில் அரசியல் விளம்பர பலகைகள், சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துவது சட்ட விரோதமானதெனவும் அவர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக அவர்கள் சார்பில், ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்தே,இவர்களுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

## சிவம் பாக்கியநாதனின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஐந்து ஆண் பிள்ளைகளின் தாயாரான நந்தினிதேவியின் பூதவுடல் மட்டக்களப்பு, பன்சல வீதி, இல. 66/6 இல் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று பிற்பகல் 4.00 இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான சிவம் பாக்கியநாதன், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் தொழில்துறை, போட்டித்திறனை அதிகரிக்க ஆடை சங்கங்களின் மன்றம் கோரிக்கை

(றிஸ்வான் சேகு முகைதீன்)

தொழில்துறை பாவனையாளர்களுக்கான நீர் கட்டணங்களை குறைக்க வேண்டும் என, ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் (JAAF), இலங்கை வர்த்தக சம்மேளனங்களின் கூட்டமைப்பு (FCCISL), இலங்கைக்கான ஐரோப்பிய வர்த்தக சம்மேளனம் (ECCSL), இலங்கை ஏற்றுமதியாளர்கள் சங்கம் (EASL), இலங்கை சர்வதேச வர்த்தக சம்மேளனம் (ICCSL) மற்றும் தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் (NCE) உள்ளிட்ட தொழில்துறை சங்கங்களின் கூட்டமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இலங்கை தொழில்களில் நிலவும் நிதிச் சுமையைக் குறைப்பதற்கும், அத்தியாவசிய சேவைகளுக்கு நியாயமான விலையை உறுதி செய்யும் செலவுகளை பிரதிபலிக்கும் விலை நிர்ணய முறையை செயல்படுத்த வேண்டிய அவசியத்திற்கான முயற்சியின் ஒரு பகுதியாக இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம், அமைச்சரவைப் பேச்சாளரும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சருமான பந்துல குணவர்தன, நீர் கட்டணத்தை குறைப்பதற்கான புதிய சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, கடந்த 23ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று, உள்நாட்டு நுகர்வோருக்கான குடிநீர் கட்டணத்தை 7 சதவீதம் குறைப்பதாக அரசு அறிவித்தது. மேலும், அரச மருத்துவமனைகளுக்கு 4.5 சதவீத கட்டணக் குறைப்பும், கோயில்கள் மற்றும் பிற மத முக்கியத்துவம் வாய்ந்த தலங்களுக்கு 6.3 சதவீதக் கட்டணமும் குறைக்கப்பட்டு வர்த்தமானி வெளியிடப்பட்டது. நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானால் வெளியிடப்பட்ட இந்த திருத்தப்பட்ட கட்டணக் கொள்கை கடந்த 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்தது.



மொத்த விற்பனையாளர்களுக்கு நியாயமான விலை நிர்ணயத்திற்கான குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக இந்த அறிவிப்பு இருந்த போதிலும், தொழில்துறை விகிதங்களை தங்கள் விலை நிர்ணய சூத்திரத்தில் இருந்து விடுவித்த முடிவு குறித்து சங்கங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

"இலங்கை தொழில்துறைகளுக்கு நீர் ஒரு முக்கியமான மூலதனமாகும், இது செயல்பாட்டு செலவுகளை நேரடியாக பாதிக்கிறது. அதிக விகிதங்கள் போட்டித்திறனை பெரிதும் பாதித்து, உற்பத்தி போன்ற துறைகளில் தேவையான முதலீட்டைத் தடுக்கின்றன," என JAAF செயலாளர் நாயகம் யொஹான் லோரன்ஸ் கூறினார். "படிப்படியான நீர் விகிதங்கள் பொருளாதார மீட்சியை நிலைநிறுத்தி, உலகளாவிய போட்டித்திறனை நிர்வகிப்பதற்கு இன்றியமையாதது."

சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) செய்த ஒப்பந்தத்தின்படி நிறுவப்பட்ட புதிய விலை நிர்ணய சூத்திரம், நீர் வழங்கலின் உண்மையான செலவுகளை பிரதிபலிக்கும் நோக்கம் கொண்டுள்ளது.

சமீபத்தில் எரிபொருள் மற்றும் மின்சார விகிதங்களில் குறைப்பு ஏற்பட்டதால், நீர் விகிதங்களில் மேலும் சில மாற்றங்கள் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

புதிய விகிதங்களின் கீழ், உள்நாட்டு விகிதங்களில் பல்வேறு குறைப்புகள் இப்போது நடைமுறையில் உள்ளன, ஆனால் தொழில்துறை விகிதங்கள் மாறாமல் உள்ளன, மேலும் தொழில்துறை விகிதங்களை தொடர்ந்து அதிகரிக்கும் போக்கு உள்ளது.

எடுத்துக்காட்டாக, BOI மண்டலங்களுக்கு வழங்கப்படும் குடி நீரின் விகிதம் 2022 இல் 65 ரூபாவிலிருந்து 85 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இந்த விகிதம் மீண்டும் 2023 இல் ஒரு அலகுக்கு 150 ரூபாவாக திருத்தப்பட்டது.

இலங்கை மின்சார சபை (CEB) மின் விகிதங்களை குறைத்ததோடு, எரிபொருள், இரசாயன மற்றும் வட்டி செலவுகளும் குறைந்துள்ள நிலையில், நீர் விகிதங்களையும் மறுபரிசீலனை செய்து குறைப்பதற்கு வலுவான சந்தர்ப்பம் இருப்பதாக சங்கங்கள் வலியுறுத்துகின்றன. உள்நாட்டு பாவனையாளர்களுக்கான தற்போதைய குறைப்பு, வர்த்தமானி 2398/19 இன் கீழ் அறிவிப்பு செய்யப்பட்டது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இந்த அங்கீகரிக்கப்பட்ட விதி வரையறை மற்றும் சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, 2023 ஆகஸ்ட் 1 முதல் தற்போதுள்ள நீர் கட்டணங்களை செயல்படுத்தியுள்ளது.

தொழில்துறை சங்கங்கள், நீர் விகிதங்களை குறைப்பது பொருளாதார மீட்சியை ஆதரிப்பதற்கும் அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் இலங்கையர்களுக்கும் மலிவு விலையில் இருப்பதை உறுதி செய்வதற்கும் ஒரு முக்கியமான படியாகும் என்று நம்புகின்றன.

# புத்தளம் அல் குர்ஆனிய கல்வி நிலையத்தின் விருது வழங்கும் நிகழ்வுகள்



(புத்தளம் தினகரன் நிருபர்)



புத்தளம் அல் குர்ஆனிய கல்வி நிலையத்தில் இரண்டு வருட பாட நெறியை நிறைவு செய்த நான்காவது தொகுதி மாணவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் அண்மையில் புத்தளம் இபுனு பதூதா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதேவேளை, கடந்த ரமழானில் இடம்பெற்ற "வசந்தம் வளம் பெற" போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் சமகாலத்தில் இடம்பெற்றது.

புத்தளம் அல் குர்ஆனிக் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ரவூத் பவாஸ் அஹ்மத் (அஷ்ஹரி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக எக்ஸலன்ஸ் பாடசாலை அதிபர் ஹிதாயதுல்லா அஜ்மலும் விஷேட அதிதியாக புத்தளம் உப்பு உற்பத்தியாளர் நலன்புரிச்சங்க தலைவரும், முன்னாள் புத்தளம் நகர சபை உறுப்பினருமான ரனீஸ் பதுர்தீன், புத்தளம் ஹுசைன் மஸ்ஜித் நிர்வாக தலைவர் அஷ்ஷெய்க் ஷாபி ஷஹ்தி உள்ளிட்ட ஏனைய அதிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

பரீட்சையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் அதிதிகளால் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. மாணவர்களது அறிவு, ஆன்மீகம், ஆளுமை விருத்தியை மேம்படுத்துவதோடு அல்குர்ஆனுடன் நல்லுறவை பேணக்கூடிய பண்பொழுக்கமுள்ள ஓர் இளைய தலை முறையை உருவாக்குதல் எனும் இலக்கோடு கடந்த ஆறு வருடங்களாக அல் குர்ஆனிய கல்வி நிலையம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# 14 நாட்களில் வீட்டுக் கடன் BOC வழங்கும் சிறந்த வாய்ப்பு

சொந்த வீடு கட்டுவது என்பது நம் ஒவ்வொருவரினதும் கனவாகும். அந்தவகையில் அதற்கான வழிவகைகளை அமைத்துகொடுத்துள்ளது இலங்கை வங்கி (BOC).

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டில் உள்ளவர்களுக்கும் இலங்கை வங்கி வீட்டுக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (கிளை கடன் செயற்பாடுகள் -Range 01) அஜித் கருணாரத்னவை நாம் சந்தித்து உரையாடியிருந்தோம்.

**கேள்வி : 14 வேலை நாட்களில் வீட்டுக் கடனை பெற்றுக்கொள்ள முடியும் என்பது உண்மையா?**

நீங்கள் வீட்டுக் கடனைப் பெறுவதற்காக இலங்கை வங்கிக் கிளை ஒன்றைத் தொடர்பு கொண்டு, அவர்களால் பரிந்துரைக்கப்படுகின்ற ஆவணங்களை முழுமையாகவும் சரியாகவும் சமர்ப்பித்தால், சமர்ப்பிக்கப்பட்ட அந் நாளிலிருந்து 14 நாட்களுக்குள் கடனைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். அதற்காக பிரதேச கடன் நிலையங்களின் உடனான செயல்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**அந்த சிறப்பு செயல்முறை பற்றி கூற முடியுமா?**

85 வருடங்கள் அனுபவம் நிறைந்த எங்கள் வங்கி, கடன் வழங்குவதில் தனித்துவமான அனுபவத்தைக் கொண்டுள்ளது. அதன்படி நாடளாவிய ரீதியில் 16 கடன் வழங்கும் நிலையங்களை (regional loan center) நிறுவியுள்ளோம். இங்கு அனுபவம் வாய்ந்த மற்றும் நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகளே செயற்பட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு வாடிக்கையாளரின் பொருளாதாரத் திறன் மற்றும் கடன் தேவையைக் கருத்திற் கொண்டு, கடன்களை வழங்குவதற்கும் தேவையான ஆவணங்களைத் தயாரிப்பதற்கும், மிகவும் பொருத்தமான தீர்வை விரைவாக வழங்குவதற்கும் அந்த அதிகாரிகள் நிபுணத்துவம் பெற்றுள்ளனர்.

அதுமட்டுமின்றி, வீட்டுக் கடன் வழங்கும்போது, சொத்தின் உரிமையை சரிபார்த்தல் மற்றும் பெறுமதியை மதிப்பிடுதல் போன்ற பணிகளுக்கு உதவியாக இருக்கும் செயற்பாடுகள் உள்ளன. இந்த நடவடிக்கைகளுக்காக எங்கள் பிரதேச கடன் வழங்கும் நிலையங்களுடன் இணைந்து பணிபுரியும் மதிப்பீட்டு அதிகாரிகள், வழக்கறிஞர்கள் போன்றவர்கள் அடங்கிய குழுவினர் உள்ளனர். இதன் காரணமாக, செயற்திறனை அதிகரிப்பதற்கான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. இந்த வலுவான அடித்தளம் மற்றும் அமைப்பு காரணமாக முழுமையான ஆவணங்களைப் பெற்ற 14 வேலை நாட்களுக்குள், பிரதேச கடன் வழங்கும் நிலையங்களினூடாக கடன்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**வீடு கட்டுவதற்கும், நிலம் வாங்குவதற்கும் இதன் கீழ் விண்ணப்பிக்க முடியுமா?**

ஆம், வீடு கட்டுதல், நிலம் வாங்குதல், வீடு வாங்குதல், வீட்டைப் பழுதுபார்த்தல், வீட்டிற்கு ஒரு பகுதியைச் சேர்ப்பது, வீட்டுத் தோட்டத்தை அழகுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்காக வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

**வெளிநாட்டு தொழிலாளர்கள் இதற்கு எவ்வாறு விண்ணப்பிக்க முடியும்?**

இந்த நாட்டில் வசிக்கும் குடும்ப அங்கத்தவர் அல்லது நெருங்கிய உறவினருடன் சேர்ந்து விண்ணப்பிக்க முடியும். இந்த கடன் வசதியின் சிறப்பு என்னவென்றால், வங்கியுடன் தொடர்பு கொண்ட காலம் கருத்திற்கொள்ளப்படாது. ஒருவர் இன்றே கணக்கைத் திறந்து இந்தக்கடனுக்கு விண்ணப்பிக்கலாம்.

**வீட்டுக் கடனுக்கு விண்ணப்பிக்கும் இலங்கையர்கள் ஏன் இலங்கை வங்கியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?**

எமது வங்கி கடந்த 85 ஆண்டுகளில் வாடிக்கையாளரின் மிகவும் மோசமான பொருளாதார சூழ்நிலையிலும், அவர்களின் கடனைப் புதுப்பித்து தீர்ப்பதற்கான நேரத்தை நீடிப்பது மற்றும் எப்படியாவது வாடிக்கையாளரின் சொத்தை பாதுகாத்து கடனை மீட்டெடுப்பது போன்ற தீர்வுகளை வழங்குவதே எங்கள் கொள்கை. குறைந்த வட்டியில் நீண்ட காலத்திற்கு கடன்களை வழங்குவதும் எமது முக்கியமான நோக்கமாகும்.

**வீட்டுக் கடனுக்கு விண்ணப்பிக்கும் வாடிக்கையாளருக்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச தகுதிகள் என்ன?**

18 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையாகவும், அவருக்கு உறுதி செய்யக்கூடிய வருமானத்தை கொண்டவராகவும் இருக்க வேண்டும். பெறும் கடனுக்கான தவணைப் பணத்தை செலுத்துவதற்கு வருமானம் போதுமானதாக இருக்கவேண்டும். வீடு கட்டும்போது, அரச விதிமுறைகளின்படி கட்டமைப்பு மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். அதன்படி எமது கிளை ஒன்றிற்குச் சென்று, வீட்டுக் கடன் பெற விரும்பும் வாடிக்கையாளர் ஒருவருக்கு குறித்த தகுதிகள் இருப்பின் அவருக்கு அந்த கிளையினூடாக கடன் விண்ணப்பப் படிவம் வழங்கப்படும். அதனுடன் வழங்க வேண்டிய பல ஆவணங்கள் மற்றும் தகவல்களின் பட்டியல் வழங்கப்படும். பட்டியலில் உள்ள அனைத்து ஆவணங்களும் ஒரே நாளில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் கிளையில் சமர்ப்பிக்கப்பட்டால், அதன் பின்னர் அவை அதே நாளில் சம்பந்தப்பட்ட பிரதேச கடன் வழங்கும் மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அன்றைய தினம் தொடக்கம் 14 வேலை நாட்களுக்குள் வீட்டுக் கடனை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். வீடற்றவர்களுக்கு வீடு கிடைக்க உதவுவதே எங்கள் குறிக்கோளாகும்.

**இந்த வீட்டுக் கடன் வசதியில் உள்ள வட்டிவீதம், பிணை மற்றும் காலம் தொடர்பாக தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம், எமது வீட்டுக் கடன் வசதியை பெற்றுக்கொள்ள விரும்பும் நபர் ஒருவரின் வயதை அடிப்படையாகக் கொண்டு தவணைக்காலம் கணிப்பிடப்படுகின்றது. அதன்படி, ஆகக்கூடிய காலமாக 25 வருடங்கள் கடனை அறவிடுவதற்கான காலமாக வழங்கப்படுகின்றது. இக் கடன் ஆதனத்திற்கு எதிராக கொடுக்கப்படுவதனால், வேறு எந்தவொரு பிணையும் எதிர்பார்க்கப்படமாட்டாது.

மேலும், கடனுக்கான வட்டி வீதத்தை பார்க்கும்போது, ஆகக் குறைந்தது 10 வீதத்திலிருந்து அறவிடப்படுகின்றது.

இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் இந்த வீட்டுக் கடன் வசதியை பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாட்டில் உள்ளவர்கள் எமது வங்கியினூடாக இக் கடன் வசதியை பெற விரும்பினால் உள்நாட்டில் உள்ள அவர்களின் குடும்ப அங்கத்தவர் மூலமாகவோ அல்லது நெருங்கிய உறவினர்கள் மூலமாகவோ தாம் தெரிவு செய்யும் கிளையினூடாக விண்ணப்பிக்க முடியும். வீட்டுக்கடன் வசதியினூடாக ஒவ்வொருவரும் தங்களது சொந்த வீட்டில் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதே எமது இலங்கை வங்கியின் நோக்கமாக காணப்படுகின்றது.





அஜித் கருணாரத்ன
பிரதிப் பொது முகாமையாளர்
இலங்கை வங்கி



# நகர்வலம்



## கொழும்பு குப்பையை புத்தளம் கொண்டு செல்லும் திட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கொழும்பு குப்பைகளை புத்தளம் அருவக்காட்டுக்கு கொண்டு வரும் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் என கோரி புத்தளத்தில் கடந்த (25) அதிகாலை அமைதியான கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

சுமார் இரண்டு மணி நேரம் புத்தளம் நூர்நகர் ரயில் நிலையத்திற்கு முன்பாக இக்கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. இக் கவனயீர்ப்பு போராட்டத்தில் தூய தேசத்திற்கான கட்சியின் தலைவர் இஷாம் மரிக்கார் உட்பட இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

பரீட்சார்த்த நடவடிக்கைகளுக்காக கொழும்பிலிருந்து குப்பைகளை ஏற்றிய விஷேட ரயில் புத்தளம் அருவக்காடு – சேரக்குளி பகுதிக்கு கடந்த 25 ஆம் திகதி





அதிகாலை வருகை தரவுள்ளதாக க்ளீன் புத்தளம் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் இத்திட்டத்தை உடனடியாக கைவிடுமாறு கோரி சந்ததிகளை காக்கும் சரித்திரப் போராட்டம் எனும் தலைப்பில் புத்தளத்தில் வாழும் மூவின மக்களும் பல மாதங்களாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வந்ததுடன், தொடர்ச்சியாக சத்தியாக்கிரக போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

எனினும், புத்தளம் மக்களின் எதிர்ப்புக் கோஷங்களுக்கு மத்தியில், அருவக்காட்டில் திண்மக்கழிவு அகற்றும் திட்ட பணிகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அமைதி வழி போராட்டங்களை மீண்டும் ஆரம்பிக்கவிருப்பதாகவும் ஜனாதிபதி அபேட்சகர்களை சந்தித்து தாங்கள் முகம் கொடுத்துள்ள அவல நிலையை எடுத்துக்கூறவிருப்பதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

## அநுராதபுரத்தில் மிகப்பெரிய புத்தகக் கண்காட்சி; இன்று இறுதிநாள்

திறப்பனை தினகரன் நிருபர்



அநுராதபுரத்தின் மிகப் பெரிய புத்தகக் கண்காட்சியான அநுராதபுரம் புத்தக வசந்தம் 22ஆம் திகதி ஆரம்பமாகி இன்று (29) கடைசி நாளாகும். அநுராதபுரம் கீல்ஸ் சுப்பர் அருகில் உள்ள கட்டிடத் தொகுதியில் நடைபெற்று வருகின்ற நான்காவது தடவையாக இடம் பெறும் இக் கண்காட்சியில் இலங்கையின் பல பிரபல புத்தக வெளியீட்டாளர்கள் பங்குபற்றுகின்றனர்.

அநுராதபுரம் மாநகர சபை மற்றும் பிரபுத்த கலாசார அறக்கட்டளை இணைந்து இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன. மதிப்புமிக்க புத்தகங்களை சிறப்பு விலையில் வாங்க இது ஒரு சிறந்த வாய்ப்பாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்ப புத்தக வசந்தத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ரஜரட்ட பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் சேன நாணயக்கார, அநுராதபுரத்தில் உள்ள அனைத்து பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் இந்த அனுபவத்தைப் பெறுவது பெரும் பாக்கியமாகும். மனிதாபிமானம் நிரம்பிய அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க, வாசிப்பை நிச்சயமாக சமூகத்தில் ஊக்குவிக்க வேண்டும் என்றும், அதற்கு அநுராதபுரம் புத்தக வசந்தம் ஒரு சிறந்த வாய்ப்பாக இருப்பதாகவும் குறிப்பிட்டார். புத்தகக் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்ட நாளிலிருந்து ஏராளமானோர் வருகை தந்து புத்தகங்களை கொள்வனவு செய்து வருவதையும் காண முடிந்தது.

## பாணந்துறை பிரதேசத்துக்கு முதலாவது பெண் வைத்தியர்

### பிரதேச மக்கள் வாழ்த்து தெரிவிப்பு




பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

பாணந்துறை ஹேனமுல்லையைச் சேர்ந்த எம்.எச். சயிமா பானு ஹேனமுல்லை பிரதேசத்தின் முதலாவது முஸ்லிம் பெண் வைத்தியராக நியமனம் பெற்றுள்ளார்.

பேராதனை பல்கலைக்கழகத்தின் எண்பத்தைந்தாவது பொதுப் பட்டமளிப்பு விழா2023 பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் இறுதிப் பரீட்சையில் திறமைச் சித்தியடைந்த டாக்டர் சயிமா பானு, பட்டமளிப்பு விருதினை உப வேந்தரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

பாணந்துறை மண்ணில் உதித்த இவர், ஹேனமுல்லை ஜீலான் தேசிய பாடசாலையின் பழைய மாணவியும் இக்கல்லூரியில் கல்விகற்ற முதல் பெண் வைத்தியர் என்ற பெருமைக்குரியவருமாவார். ஹேனமுல்லையைச் சேர்ந்த முஹம்மது ஹாரிஸ் மற்றும் ஆசிரியை எம்.எம்.எஸ்.சரீனா தம்பதிகளின் புதல்வியுமாவார்.

பல்கலைக்கழக வைத்தியபீட இறுதிப் பரீட்சையில் திறமைச் சித்தியடைந்த இவர், வைத்தியத்துறை சேவைக்கு தெரிவாகி கொழும்பு டீ. சொயிசா மகளிர் வைத்தியசாலையில் கடமையாற்றி வருகிறார். இவர் வைத்திய துறையில் மேலும் உயர்வுகளைப் பெற பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வாழ்த்தியுள்ளனர்.

## தற்கொலை தவிர்ப்பு விழிப்புணர்வுக்காக 13 நாட்கள் சைக்கிளோட்டம்

### சுதந்திர சதுக்கத்தில் இன்று ஆரம்பம்

மர்லின் மரிக்கார்





தற்கொலைத் தவிர்ப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான 1333 கிலோ மீற்றர்கள் தூரத்திற்கு 13 நாட்கள் சைக்கிள் ஓட்டம் உள ரீதியான நெருக்கடிகளுக்கு தீர்வு ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கள் வழங்கும் சி.சி.சி லைன் நிறுவனத்தினால் இன்று 29ஆம் திகதி காலை 5.30 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

25 சைக்கிளோட்டிகளின் பங்குபற்றுதலோடு இன்று ஆரம்பிக்கப்படும் இந்த சைக்கிள் ஓட்டம் செப்டம்பர் 10 ஆம் திகதி வரையும் 1333 கிலோ மீட்டர்கள் தூரம் பயணித்து சுதந்திர சதுக்கத்திலேயே நிறைவடையும் என்று சி.சி.சி லைன் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஜேதா தேவபுர நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு 08, ஏ.சி.எல் கேபள் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், உலக தற்கொலை தவிர்ப்பு தினம் வருடா வருடம் செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அத்தினத்தை இலக்காகக் கொண்டு தான் இவ்விழிப்புணர்வு சைக்கிளோட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகிறது. இன்று ஆரம்பமாகும் இச்சைக்கிளோட்டம் கொழும்பு, கித்துல்கல, கண்டி, தம்புள்ள, அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை, சிகிரியா, மஹியங்கனை, கதிர்காமம், திக்வெல்ல, பெந்தோட்டை எனப் பயணித்து எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தை வந்தடையும். அன்றைய தினம் உலக தற்கொலை தவிர்ப்பு தினம் தொடர்பான விஷேட விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபவனியும் சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய நிறுவனத்தின் தலைவர் சுரேஷ் மெண்டிஸ் குறிப்பிடுகையில், எமது 1333 தொலைபேசி ஆதரவு சேவைத் திட்டத்தின் ஊடாக வாழ்க்கையில் எதிர்கொள்ளக்கூடிய உள ரீதியிலான நெருக்கடிகள் அழுத்தங்களால் வாழ்க்கையில் வெறுப்புற்று இருப்பவர்களுக்கும் தற்கொலை எண்ணங்களுக்கு உள்ளாகின்றவர்களுக்கும் ஆலோசனைகள், அறிவுரைகள் வழங்கப்படுகிறது. வாழ்க்கை தொடர்பில் அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கப்படுகிறது.

தவறான எண்ணங்களில் இருந்து அவர்களை விடுவிப்பதே இச்சேவையின் பிரதான இலக்கு. 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவைக்கு ஆரம்ப நாட்களில் நாளொன்றுக்கு பத்துக்கும் குறைவான தொலைபேசி அழைப்புகளே கிடைக்கப்பெற்றன. இன்று நாளொன்றுக்கு 200 க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்பு கிடைக்கப்பெறுவதாகவும், இவ்வருடம் ஜனவரி முதல் ஓகஸ்ட் மாதம் வரை 40 ஆயிரம் அழைப்புக்கள் கிடைத்துள்ளன. அந்தளவுக்கு எமது இத்தொலைபேசி சேவை மக்களுக்கு சேவை வழங்குகிறது. அதற்கு நாம் வருடாவரும் நடாத்தும் சைக்கிளோட்டம் பெரிதும் பங்களித்துள்ளது என்றார்.

## ஹம்பாந்தோட்டையில் ஜனாதிபதியை ஆதரித்து இன்று பொதுக்கூட்டம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சை அபேட்சகராக போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து இன்று (29) பி.ப 2.00 மணிக்கு ஹம்பாந்தோட்டையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

'இயலும் ஸ்ரீலங்கா' எனும் தொனிப் பொருளில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் துறைசார்ந்த நிபுணர்கள் ஆகியோருடன் ஜனாதிபதியும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளார்.

## பேருவளை ராபிதா ஏற்பாட்டில் செயற்கை நுண்ணறிவு அறிமுக நிகழ்ச்சி





செயற்கை நுண்ணறிவு அறிமுக விழா என்ற தொனிப்பொருளில் (Artificial Intelligence) தொடர்பான அறிமுக நிகழ்ச்சி பேருவளையில் நடைபெற்றது.

பேருவளை வலய ராபிததுந் நளீமிய்யீன் அமைப்பின் அங்கத்தவர்களுக்கான மேற்படி நிகழ்ச்சி கடந்த சனிக்கிழமை (24) பேருவளை விஸ்டம் கெம்பஸில் (Wisdom Campus) இடம்பெற்றது.

காலை 9.30 முதல் நண்பகல் 12.30 வரை நடைபெற்ற மேற்படி நிகழ்வில் 24 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

வளவாளராக SLBC முஸ்லிம் சேவைத் தயாரிப்பாளரும் ஊடக பயிற்றுவிப்பாளருமான அஷ் ஷெய்க் இஸ்பஹான் சாப்தீன் கலந்து கொண்டார்.

சிறப்பான முறையில் அமையப் பெற்ற மேற்படி நிகழ்வில் 'AI' பற்றிய அறிமுகம் உட்பட அதன் கையாளுகை முறைமைகளும் நடைமுறை ரீதியாக பயிற்றுவிக்கப் பட்டன.

இந்நிகழ்வில், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மாணிக்கக்கல் வியாபாரிகளும் கலந்துகொண்டமை விசேட அம்சமாகும்.



சாதனை வீரன் ஷஹ்மி ஷஹீத் கடந்த (26) திங்கட் கிழமை தனது 45வது நாள் பயணத்தை வாத்துவையில் இருந்து ஆரம்பித்தார். மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.எம் அம்ஜாத், தர்காநகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தலைவர் ஏ.பி.எம் சுஹைர் ஆகியோர் உட்பட பேருவளை, களுத்துறை வாழ் மக்கள் அவரின் பயணத்தை தொடக்கி வைத்தபோது பிடிக்கப்பட்ட படம்.

படம் பேருவளை விசேட நிருபர்

## கொலன்னாவ பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கான பயிற்சி பட்டறை

கொழும்பு தினகரன் நிருபர்





கொலன்னாவ கிழக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, கொலன்னாவ மஸ்ஜிதுகளின் சம்மேளனம் என்பன முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் வழி நடாத்தலில் ஒழுங்கு செய்த வெள்ளம்பிட்டி மற்றும் கொல்லன்னாவ பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்களின் நிருவாகிகளுக்கான பள்ளிவாசல் நிருவாக நடைமுறைகள் மற்றும் வக்பு சட்ட நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளம்பிட்டி நாஸ் கலாசார நிலையத்தில் கொலன்னாவ கிழக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ் ஷெய்க் மௌலவி ஏ.என்.எம். பிர்தௌஸ் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி பயிற்சிப்பட்டறையில் வளவாளர்களாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அலா அஹமட், மௌலவி எம்.ஐ.எம். மசீன், கொழும்பு மாவட்ட அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் கொழும்பு மாவட்ட தலைவர் முக்திஸ் அஹமட், அஷ்ஷெய்க் மௌலவி எம்.எம். இர்பான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் மற்றும் கொதட்டுவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொலன்னாவ மஸ்ஜிதுகளின் சம்மேளன தலைவர் உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# வடக்கின் உதயம்

# பொதுமக்கள் இலகுவில் சேவைகளை பெறும் வகையில் நகர திட்டமிடல் அமைய வேண்டும்

## வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ்



பொதுமக்கள் தமக்கான சேவைகளை இலகுவில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நகர திட்டமிடல் அமைய வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

தேசிய பௌதீக திட்டமிடல் தொடர்பான விசேட கலந்துரையாடல் வடமாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போதே, அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநரின் செயலாளர், வடமாகாண பிரதம செயலாளர், தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்கள அதிகாரிகள், வடமாகாண அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மேலும் தெரிவித்த வடமாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ்,

"ஜனாதிபதியினுடைய முயற்சியின் பயனாக தேசிய பௌதீக திட்டமிடல் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகிறது. அந்த வகையில் வடமாகாண நகர திட்டமிடல் தொடர்பான அனைத்து திட்டமிடல்களையும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து அதற்கான அனுமதி பெற வேண்டுமென்று கோரினோம்.

சமர்ப்பிக்கப்பட்ட திட்டமிடல்கள் தொடர்பான தமிழ்மொழியாக்கம் தேவையென மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக நகர திட்டமிடலின் போது புவியியல் கேந்திரங்களை மையப்படுத்தி, இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு இந்த திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.

வடமாகாணத்தை பொறுத்தவரையில் அனைத்து துறைகளையும் இணைப்பதற்கான தொடர்பு முறை சவாலாக உள்ளது. அதேபோன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதும் பாரிய சவாலாக உள்ளது. வீதி போக்குவரத்து மிக நெடுந்தூரமாக காணப்படுவதன் காரணமாக முதலீட்டாளர்களின் வருகை மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது. ஆகவே நகர திட்டமிடலின் போது போக்குவரத்து தொடர்பை ஏற்படுத்தும் இலகு முறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அத்துடன் ஏனைய திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனுமதிகளை பெற்றுக்கொள்வதில் காணப்படக்கூடிய சிக்கல்களை தவிர்த்து எவ்வாறு இலகுவில் முதலீடு மேற்கொள்வதென்பது தொடர்பாகவும் கவனம் செலுத்துவது அவசியமாக காணப்படுகிறது. நகர திட்டமிடலின் போது பெருநகரங்களை அபிவிருத்தி செய்யும் அதே சந்தர்ப்பத்தில் ஏனைய சிறு நகரங்களையும் அபிவிருத்தி செய்து அவற்றையும் பெருநகரங்களுடன் இணைக்க வேண்டும்.

கழிவு முகாமைத்துவம், பயணிகளுக்கான சிறந்த தங்குமிட வசதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாகவும் கருத்திற்கொண்டு நகர திட்டமிடலை வடிவமைத்தல் அவசியமாகும். வடக்கையும் கிழக்கையும் இணைக்கக்கூடிய வட்டுவாகல் பாலத்தை புனரமைப்பது தொடர்பாகவும் இந்த செயற்திட்டத்தில் கவனம் செலுத்துவது சிறந்ததாக அமையும்" எனத் தெரிவித்தார்.

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம்



**பருத்தித்துறை விசேட, யாழ். விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அனுமதியுடன் நேற்று புதன்கிழமை நடைபெற்றதுடன், இதன்போது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரின் இணைத் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர், முப்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.

# நல்லூர் கோயில் மகோற்சவம்; சந்தான கோபாலர் உற்சவம்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், நல்லூர் கோயிலினுடைய வருடாந்த மகோற்சவத்தின் இருபதாம் நாள் திருவிழாவான நேற்று புதன்கிழமை காலை சந்தான கோபாலர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்த மண்டப பூஜையை அடுத்து தங்க எருது வாகனத்தில் எழுந்தருளிய சந்தான கோபாலர், உள்வீதி மற்றும் வெளிவீதி உலா வந்தார். இதனைத் தொடர்ந்து கோயில் உள்வீதியில் பட்டிப்பொங்கலும் நடைபெற்றது.

சந்தான கோபாலர் உற்சவத்தில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சந்தான கோபாலரின் அருட்காட்சியை கண்டுகளித்தனர்.

இந்நிலையில் நல்லூர் மகோற்சவ திருவிழாவின் தேர் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

# உயிலங்குளத்தில் வாகன விபத்து; 3 பேர் படுகாயம்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார், உயிலங்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 3 பேர் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மதவாச்சி பிரதான வீதியில், உயிலங்குளம் பிரதேசத்தில் பட்டா ரக வாகனமும் இரண்டு மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை விபத்துக்குள்ளாகின. இதில் மோட்டார் சைக்கிள் மற்றும் பட்டா ரக வாகனத்தில் பயணித்த மூவரே படுகாயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் உடனடியாக முருங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த இருவரும் மாந்தை மேற்கைச் சேர்ந்த ஒருவருமே விபத்தில் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான விசாரணையை உயிலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# பிளாஸ்ரிக் இடியப்ப தட்டால் புற்றுநோய் ஏற்படும் அபாயம்

## பொது சுகாதார பரிசோதகர்

**சாவகச்சேரி விசேட நிருபர்**



இடியப்பம் அவிக்கப் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் தட்டுகளால் புற்றுநோய் உட்பட பல்வேறுபட்ட தீமைகளுக்கு ஆளாக நேரிடுமென, பூநகரி பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்தார்.

அண்மையில் பூநகரி, நாச்சிக்குடா பிரதேசத்தில் அமைந்துள்ள உணவகங்களில் திடீர் சோதனை நடத்திய வேளையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"இடியப்பம் அவிப்பதற்காக பிளாஸ்ரிக்கால் தயாரிக்கப்பட்ட இடியப்ப தட்டுகளை பயன்படுத்துவது சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கக் கூடியது. இதனால் புற்றுநோய் உட்பட பல தீய விளைவுகளை எதிர்நோக்க நேரிடும். இதனை உணர்ந்து பிளாஸ்ரிக் இடியப்ப தட்டு பாவனையை முற்றாக தவிர்க்க வேண்டும்.

சூடான உணவுகளை பிளாஸ்ரிக் பாத்திரங்களில் பேணுதல், பொலித்தீன் பைகளில் சூடான நிலையில் உணவு, கறி பொதியிடல், பொலித்தீன் பயன்படுத்தி இட்லி அவித்தல், லன்ஞ்ரிசுவை உணவு தட்டில் இட்டு சூடான உணவை பரிமாறல் உள்ளிட்டவை சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிப்பவையாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளை உணவு உற்பத்திசாலைகள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் வீடுகளிலும் முழுமையாக தவிர்க்க வேண்டும்" என்றார்.

# சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட கிருமிநாசினி கைப்பற்றல்

## வர்த்தகருக்கு அபராதம் விதிப்பு

**யாழ். விசேட நிருபர்**

சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்ட கிருமிநாசினியை விற்பனை செய்து வந்த வர்த்தகர் ஒருவருக்கு ஒன்றரை இலட்சம் ரூபா அபராதம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் சட்டவிரோதமாக களைகிருமிநாசினி விற்பனை செய்யப்படுவதாக விவசாய திணைக்களத்துக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவ்வர்த்தக நிலையத்தில் சோதனையிடப்பட்டு, ஒருதொகை சட்டவிரோத கிருமிநாசினி மீட்கப்பட்டது. இந்நிலையில் அவ்வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த போது, குற்றத்தை அந்நபர் ஒப்புக்கொண்ட நிலையில் மேற்படி அபராதம் விதிக்கப்பட்டது

இதேவேளை யாழ். ஆவரங்காலிலுள்ள வர்த்தக நிலையமொன்றிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான கிருமிநாசினி நேற்று முன்தினம் மீட்கப்பட்டது. இவ்வர்த்தக நிலைய களஞ்சியசாலையிலிருந்தும் பெருந்தொகை கிருமிநாசினி மீட்கப்பட்டது. இந்நிலையில் இவ்வர்த்தக நிலைய உரிமையாளர் மீது விவசாய திணைக்களத்தால் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



யாழ். மாவட்டத்தில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட கிருமிநாசினி விற்பனை அதிகரித்துள்ள நிலையில் இம்மாவட்டத்தில் விவசாய இராசாயன கட்டுப்பாட்டு பிரிவினர் திடீர் சோதனை நடத்தி வருவதாக, இம்மாவட்ட விவசாய திணைக்களத்தின் உதவி பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் தெரிவித்தார்.

# ஐஸ் போதைப்பொருளுடன் 6 சந்தேக நபர்கள் கைது

**ஓமந்தை விசேட நிருபர்**



புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு, குரவில் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 6 இளைஞர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி பிரதேசத்தில் யாருமற்ற வீடொன்றில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து திடீர் சுற்றிவளைப்பு சோதனை மேற்கொள்ளப்பட்ட போதே, போதைப்பொருளுடன் இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்களிடமிருந்து 7 தொலைபேசிகள், 17,000 ரூபா பணம், சிறிய 7 பொதிகளில் 90 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டது. புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17, 18, 18, 21, 23, 24 வயதுடைய 6 பேர் கைது செய்யப்பட்டதாகவும், பொலிஸார் மேலும் கூறினர்.

இச்சந்தேக நபர்களிடம் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' கண்காட்சி





நல்லூர் கோயில் முன்றலில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகர சபை தீயணைப்பு படை வளாகத்தில் 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' எனும் தொனிப்பொருளின் கீழ் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்புணர்வு கண்காட்சி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் வடமாகாண நீர் பாதுகாப்பு செயற்றிட்டம் மற்றும் இளைய நீர்த்துறையாளர் வட்டத்தின் ஏற்பாட்டில் வடமாகாண நீர்ப்பாசன திணைக்களம், நீர்வளசபை உள்ளிட்ட பல்வேறு நீர் சார்ந்த அரசாங்க திணைக்களங்களும் அமைப்புகளும் இணைந்து இந்த கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன. எதிர்வரும் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த கண்காட்சியில் நீர் சார்ந்த ஆய்வு விபரம், விஞ்ஞான விளக்கம், கலந்துரையாடல், விளையாட்டு, இளையோர் சிறார்களுக்கான பரிசுப்போட்டி ஆகியவையும் நடைபெறுகின்றன.

நல்லூர் திருவிழாவுக்கு வருகை தரும் பொதுமக்கள், வடமாகாண நிலத்தடி நீர்வளம் தொடர்பாக கவனம் செலுத்தி கண்காட்சியை பார்வையிடுவதுடன், நீர் சார்ந்த தகவல்களை அறிந்துகொள்ளுமாறும், கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# திடீர் சுகயீனத்தால் மீனவர் உயிரிழப்பு

**நாகர்கோவில் விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், நாகர்கோவில் பிரதேச கடலில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது கடற்றொழிலாளர் ஒருவர் திடீரென சுகயீனம் ஏற்பட்டு உயிரிழந்தார்.

கற்பிட்டியை சேர்ந்த 21 வயதுடைய முகமட் றஸ்லான் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

நாகர்கோவிலில் தங்கிநின்று இவர் கடற்றொழிலில் ஈடுபடுவதாகவும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கடற்றொழிலில் இவர் ஈடுபட்டிருந்த போது திடீர் சுகயீனம் அடைந்தார்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இவரை அனுமதித்த போது இவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இந்நிலையில் உடற்கூற்று பரிசோதனை நடத்த பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி பணித்துள்ளார்.

# விபத்தில் காயமடைந்தவர் மரணம்

**நாகர்கோவில் விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தின் பருத்தித்துறை, புலோலி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

புற்றளை, புலோலி தெற்கை சேர்ந்த 39 வயதுடைய இராசையா யோகராஜா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 21ஆம் திகதி இரவு புலோலி, கிராம கோட்டு சந்தியில் இவர் சைக்கிளில் சென்ற போது இவரது சைக்கிளும் வானும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இவ்விபத்தில் படுகாயமடைந்த இவர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். பின்னர் இவர் மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக, வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.




# நுவரெலியா மாவட்டத்தில் ஜனாதிபதி பெரும்வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்

## முன்னாள் எம்.பி சுப்பையா சதாசிவம் நம்பிக்கை

நுவரெலியா மாவட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 60% வீத வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதியென இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி பொதுச்செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நுவரெலியாவில் எதிர்வரும் முதலாம் திகதி பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசார நடவடிக்கை தொடர்பான முதலாவது பொதுக்கூட்டம், நுவரெலியா பொது வாசிகசாலை கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் இக்கூட்டத்தில் அனைத்து மக்களும் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அதேநேரத்தில் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவது உறுதியென தெரிவித்த அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த காலம் முதல் அவருடன் நட்பு பேணி வந்துள்ளதாகவும் சதாசிவம் தெரிவித்தார்.

பெருந்தோட்டங்களை 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 22 கம்பனி காரர்களுக்கு குத்தகைக்கு விடும் பொழுது இவர் நாட்டின் பிரதமராகவிருந்து செயற்பட்டார் என்பதை குறிப்பிட்ட அவர் மலையக தோட்டப்பகுதி கல்விக்காகவும் தொழிலாளர்களின் உரிமை சார் நலத்திட்டங்களிலும் இவரின் பங்கு கடந்த காலங்களில் சிறப்பு பெற்றிருந்ததாகவும் அவர் தெரிவித்தார். அவருடன் இணைந்து தோட்டப் பகுதி கல்வி அபிவிருத்திக்கு நானும் பங்காற்றி



வந்திருந்தேன் எனவும் சுட்டிக்காட்டினார்.

எனவே தோட்ட தொழிலாளர்கள் தொடர்பில் அக்கறை கொண்ட தலைவராகவும் ரணில் விக்கிரமசிங்க விளங்குகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனநாயக மக்கள் முன்னணியில் புதிய நியமனங்கள்



ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட கட்சி பணியாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு தென் கொழும்பு அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்படி கண்டி மாவட்ட அமைப்பாளராக எம். விக்கினேஸ்வரன், மாவட்ட செயலாளராக குலேந்திரன் கணேசன், மாவட்ட பொருளாளராக எம். கிருஸ்ணகுமார், மாவட்ட செயற்குழு உறுப்பினராக எம். கே. வினோத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் எஸ். சசிகுமார், கண்டி மாவட்டத்திற்கான இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சமாதான நீதவானாக நியமனம்



கொழும்பு சங்கமித்தை மாவத்தையை வசிப்பிடமாக கொண்டவரும் டனிஸ்ட் ரேட் சென்டர் உரிமையாளருமான பிரபல வர்த்தகர் மாசிலாமணி டேனியல் அகில இலங்கை சமாதான நீதவானாக கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.எஸ்.பண்டார இளங்கசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் தலவாக்கலை பெல்கிறேவியா தோட்டத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு நகரை வசிப்பிடமாகவும் கொண்டவர். அதேபோல் சமூகப்பற்றுமிக்க இவர் தலவாக்கலை பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியிலுள்ள பூஜாப்பிட்டியவில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அண்மையில் ஆரம்பமானது. இதன்போது அக்குறணை முன்னாள் பிரதேசசபை தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து ஜனாதிபதியுடன் இணைந்து பலூன்களை வானில் பறக்க விடுவதை படத்தில் காணலாம்.

(படம் - மாவத்தகம தினகரன் நிருபர்)

# சிறுபான்மையின மக்களின் ஆதரவுடன் சஜித் அமோக வெற்றி பெறுவார்

## முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் நம்பிக்கை

மாவத்தகம தினகரன் நிருபர்

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச தமிழ் பேசும் சிறுபான்மையின மக்களின் ஆதரவுடன் அமோக வெற்றி பெறுவார் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் எம். டி. முத்தலிப் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக பெரும் அரசியல் சூழ்ச்சிகள் அரங்கேற்றம் செய்யப்பட்டன.

இந்நாட்டில் வாழும் சிறுபான்மையின முஸ்லிம் மக்கள் மீது இனவாத நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குலை நடத்தி சிங்களப் பெரும்பான்மையின மக்களுடைய சிந்தனையை திசை திருப்பினார்கள்.



அதனுடைய எதிரொலியாக முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரங்களை உண்டு பண்ணி பல இடங்களில் தாக்குதல்களை நடத்தினார்கள். ஆனால் அவர்களால் ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை.

பாரிய பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்துக் கிடந்தனர்.

உணவுப் பொருட்களின் விலையேற்றம், விவசாயிகள் உரமின்றி தவித்தனர். உணவுப் பஞ்சம், பால்மா தட்டுப்பாடு, போக்குவரத்துப் பிரச்சினை, மருந்து தட்டுப்பாடு என பல சவால்களை மக்கள் எதிர்கொண்டனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவுக்கு எதிராக மக்களுடைய எதிர்ப்பலைகள் உருவாகின. அவர் பதவியை துறந்தார். அதன்பின்னர் தற்பேதைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க களமிறங்கினார்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சத்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாச தமிழ் பேசும் சிறுபான்மையின மக்களின் நல் ஆதரவுடன் அமோக வெற்றி பெறுவார். எனினும் அநுரகுமார திசாநாயக சிறுபான்மையின மக்களுடைய வாக்குகளைப் பெற்றுக் கொள்வது என்பது கடினமான விடயமாகும்.

எனவே சிறுபான்மையின மக்களாகிய எமது வாக்குகளால் சஜித் பிரேமதாச நிச்சயமாக வெற்றி பெறுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா இணைப்பாளர்- இராதாகிருஷ்ணன் எம்.பி சந்திப்பு

## பெருந்தோட்டத்துறை பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் விசேட கவனம்



இலங்கைக்கான ஐ.நா இணைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணனை நுவரெலியாவில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நுவரெலியாவில் நடைபெற்ற இச்சந்திப்பில் பெருந்தோட்டத்துறை சமூகங்களின் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக பெருந்தோட்ட சமூகங்களின் சமகால பிரச்சினைகள் மற்றும் அதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், தீர்வுகள், தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

அதுமட்டுமின்றி ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான இணைப்பாளர் மார்க் அன்றூ வரலாற்று சிறப்புமிக்க சீதாஎலிய சீதையம்மன் ஆலயத்துக்கு சிறப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

# கடனாக பெற்ற பணத்தை திருப்பி கையளிக்க மறுத்த ஆசிரியர் கைது

## 14 நாட்கள் விளக்கமறியல் உத்தரவு

உதவி கல்விப்பணிப்பாளர் ஒருவரிடம் கடனாக பணத்தை பெற்று அதை திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிய குற்றச்சாட்டில் தனியார் பாடசாலை ஆசிரியரொருவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உதவி கல்விப்பணிப்பாளர் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய இவர் கைதுசெய்யப்பட்டு நுவரெலியா மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுவரெலியா மஜிஸ்ரேட் நீதிமன்ற நீதவான் பிரபுதிகா லங்காகனி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக நுவரெலியா நீதவான் நீதிமன்ற பதிவாளர் தெரிவித்தார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணைகள் இரண்டாவது முறையாக கடந்த 26ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நுவரெலியா கல்வி திணைக்களத்தில் ஆரம்ப கல்வி பிரிவுக்கான உதவி கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய ஒருவரிடம் கடனாக ரூ.35 இலட்சம் பணத்தை பெற்று கொண்ட ஆசிரியர், அந்த பணத்தை திருப்பி கையளிக்க மறுத்துள்ளதாக உதவி கல்விப் பணிப்பாளர் நுவரெலியா குற்ற புலனாய்வு பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.



இதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஆசிரியரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இதன்போது விசாரணையை மேற்கொண்ட நீதவான் குறித்த வழக்கின் சந்தேகநபரான ஆசிரியரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# மாத்தளை மாவட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கு ரூ.1348 மில்லியன் நிதி ஒதுக்கீடு

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மாவட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கு மத்திய மாகாண சபை ஊடாக ரூ.1348 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாண சபையின் கீழ் இயங்கும் 5 அமைச்சுகள் மற்றும் முதலமைச்சரின் நிதியிலிருந்து இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாத்தளை மாவட்டத்தில் இவ்வாண்டு (2024) முன்னெடுக்கப்படும் 1022 அபிவிருத்தி திட்டங்களுக்காக இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மத்திய மாகாண முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ.383 மில்லியனும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் ரூ.222 மில்லியனும் தொழில் அமைச்சினால் ரூ.59 மில்லியனும் சுகாதார அமைச்சினால் ரூ.359 மில்லியனும், விவசாய அமைச்சினால் ரூ.286 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சபை தெரிவித்துள்ளது.

# பழைய மாணவர் ஒன்றுகூடல்



(காவத்தை தினகரன் விசேட நிருபர்)

இறக்குவானை பரியோவான் தேசிய கல்லூரியில் 1989ஆம் ஆண்டு கல்விப்பொதுத் தராதர சாதாரண தரத்தில் கல்வி பயின்ற பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் இறக்குவானை கஸ்தூரி ஹோட்டலில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் இறக்குவானை பரியோவான் தேசிய கல்லூரியில் 1989ஆம் ஆண்டு கல்விப்பொது தராதர சாதாரண தரத்தில் கல்வி பயின்ற பழைய மாணவர்களின் எதிர்கால திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

# அரச வனத்தில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு

(ஊவா சுழற்சி நிருபர்)

கொஸ்லந்த நிகபொத்த பிரதேசத்திலுள்ள அரச வனத்தில் சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் தோண்டிய மூவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொஸ்லந்த நிகபொத்த,ரத்னாரா அரசு வனப் பகுதியில் சட்ட விரோதமாக மாணிக்கக்கல் அகழ்ந்து விற்பனை செய்து வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்தே இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பொலிஸார் மூவரை கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

அதுமட்டுமின்றி மாணிக்கக்கல் தோண்ட பயன்படுத்திய மண்வெட்டிகள், நீர் இறைக்கும் இயந்திரம், பிரம்புக் கூடை அலவாங்கு மற்றும் வாளி போன்ற பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர். ஊவாமாவெலகம,திவுள்கஸ்முல்ல, ஹிவல்கதுற போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 35,45,65 வயதுகளையுடைய சந்தேக நபர்களை கைது செய்த கொஸ்லந்தை பொலிஸார் பண்டாரவளை குற்றவியல் நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். பண்டாரவளை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் கலுபஹனவின் பணிப்புரைக்கமைய மேலதிக விசாரணைகளை கொஸ்லந்தை பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# குளவித் தாக்குதலில் 13 பேர் பாதிப்பு

கதிர்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்லக்கதிர்காமம் பாலத்திற்கு அருகில் சிறுவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் சிலர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான 10 சிறுவர்களும் மூன்று பெற்றோர்களும் கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

4 சிறுவர்களும், 6 சிறுமிகளும் மற்றும் ஒரு பெண் இரண்டு ஆண்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இவர்கள் அனைவரும் செல்லக்கதிர்காமம் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

# 'இயலும் ஸ்ரீலங்கா' எஹலியகொடை பேரணி










# இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையத்தால் விவாத போட்டி

**மன்னார் குறூப் நிருபர்**

இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட விவாதப் போட்டியின் இறுதி விவாதப் போட்டி நேற்று புதன்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையமானது கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக மழைநீர் தாங்கிகள் மூலம் மக்களுக்கு தரமான மற்றும் சுகாதாரமான குடிநீர் வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் தற்போது இலங்கையில் வெள்ளம் மற்றும் வரட்சி ஏற்படும் பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுத்தல் எனும் செயற்றிட்டத்தின் கீழ் USAID இன் அனுசரணையுடன் இயங்கி வருகிறது.






இந்நிலையில் மன்னார் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு தாங்கிகள் மூலம் பயனடைந்த பாடசாலை மாணவர்கள் இவ்விவாதப் போட்டியில் பங்குபற்றினர்.

மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் முதலாவது மற்றும் இரண்டாவது சுற்றில் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விவாதப் போட்டியின் இறுதி விவாதப்போட்டியே நேற்று நடைபெற்றது. நீர் பற்றாக்குறை நிலவும் கிராமப்புறங்களில் மழைநீர் சேகரிப்பு அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏற்படும் செலவில் அரசாங்கத்தின் பங்களிப்பு (மானியம்) போதுமானதாக உள்ளது / இல்லை எனும் தலைப்பில் இப்போட்டி நடைபெற்றது.

இறுதி போட்டியில் பங்குபற்றி மன்/ பரிகாரி கண்டல் அ.த.க.பா முதலாம் இடத்தையும் மன்/ கட்டையடம்பன் றோ.க.த.க.பா இரண்டாம் இடத்தையும் மன்/ தலைமன்னார் அ.த.க.பா மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இந்திய பிரஜை கைது



கட்டுநாயக்க பிரதேசத்தில் வெளிநாட்டு சிகரெட்டுகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையப் பகுதியில் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இச்சந்தேக நபர் வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் சென்னையிலிருந்து இலங்கைக்கு சுங்க வரியின்றி வெளிநாட்டு சிகரெட்டுகள் 7,200 ஐ தனது உடைமையில் வைத்து கொண்டு வந்த சந்தேக நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவை சேர்ந்த 30 வயதுடைய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த சந்தேக நபரிடம் போதை ஒழிப்பு பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.




மலையக அபிவிருத்தி அமைப்பின் ஸ்தாபக தலைவர் எஸ்.மகேந்திரன் JP தலைமையில் செயற்குழு உறுப்பினர்கள், திருக்கயிலாய பரம்பரை கந்தப் பரம்பரை சூரியனார் கோயில் ஆதீனம் ஸ்ரீகார்யம் அருட்குருநாதர் தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிக சுவாமிகளை சந்தித்து அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்

# எரிகாயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

**யாழ். விசேட நிருபர்**

தீக்காயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலியைச் சேர்ந்த 30 வயதுடைய துவரகன் நிருத்திகா எனும் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி தீக்காயங்களுடன் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்தப் பெண், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் , சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த பெண்ணுக்கும் இவரது கணவருக்கும் இடையில் நீண்ட காலமாக குடும்ப தகராறு காணப்பட்டு வந்ததாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

# புதுக்குடியிருப்பில் அதிகரிக்கும் ஐஸ் போதைப்பொருள் பாவனை

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இளைஞர்கள் மத்தியில் ஐஸ் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாகவும் இதனால் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் அப்பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்த பொலிஸாரின் போதிய ஒத்துழைப்பு தேவையெனவும் புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகையால் போதைப்பொருள் பாவனையிலிருந்து இளைஞர்களை விடுவிப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டாலும், போதைக்கு அடிமையாகும் இளைஞர்களின் எண்ணிக்கையும் அதனால் குற்றச்செயல்களும் அதிகரித்து செல்கின்றமை கவலையளிப்பதாகவும் அம்மக்கள் கூறினர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — செவ்வாய் 2024.08.27 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5578 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.21,308,360.00
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 8 3 5 3 0 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 153 — ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 5 3 0 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3820 — சீட்டிழுப்பு திகதி 2024.08.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,000,000.00
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 01 36 75 79 — விசேட எழுத்து J — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 38995

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1926 — 2024.08.27 — 22655 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.443,993,758.00
ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 11 33 47 67
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.08.27 — சீட்டிழுப்பு இலக்கம் 404
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 7 9 9 2 9 4 — L7 எழுத்து R
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 34,806,960.48

ராசி சுப பலன் — திகதி 2024.08.27 — சீட்டிழுப்பு இலக்கம் 887 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.4,071,593.20
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 06 27 40 53 — தனயோக இலக்கம் 45433 — நாளுக்கான விதி எண் 03

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1608 — 2024.08.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 108,677,765.84
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 37 59 72 73 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 50451

# கிழக்கின் குரல்



# அம்பாறையில் சூடு பிடிக்கும் தேர்தல் பிரசாரம்; 04,05,06 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து வருகிறது. அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் உரையாற்றி வருகின்றனர்.

கடந்தவாரம் அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, பொத்துவில் பிரதேசங்களில் நடைபெற்ற கூட்டங்களில் ஜனாதிபதியும், வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு உரையாற்றினார்.

அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில், தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ் ஏற்பாடு செய்திருந்த, தேசிய காங்கிரஸ் கட்சியின் 20 ஆவது வருடாந்த மகா நாட்டிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு வேட்பாளருமான சஜித் பிரேமதாச அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டங்களில் உரையாற்றினார்.

இக்கூட்டங்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் வெற்றிக்காக, ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்கள் தங்களது தொகுதிகளில் தனியான தேர்தல் பிரசாரங்களை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றனர். இந்நிலையில், எதிர்வரும் நாட்களிலும் பல்வேறு பிரசாரக் கூட்டங்கள், கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிறிலங்கா பொதுஜன பெரமுன திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்து தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன், தேர்தல் வெற்றிக்கு உழைப்பதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, செப்டெம்பர் 04,05,06ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்புக்கு அரச உத்தியோகத்தர்கள் தயாராகி வருகின்றனர்.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலரும், உதவித் தேர்தல்கள் ஆணையாளருமான கசுன் சிறிநாத் அத்தநாயக்க மேற்கொண்டுள்ளார்.

# மக்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது பெறுமதி வாய்ந்த தலைவர்களை ஆதரிக்க வேண்டும்

## யு.என்.பி சசிகலா

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கடவுளும் மக்களும் நேசிக்கின்ற பெறுமதி வாய்ந்த தலைவர்களை ஆதரிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அமைப்பாளர் சசிகலா ஜெயதேவா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (28) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இதனை தெரிவித்த அவர்,

எமது நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்தபோது எந்த ஒரு தலைவரும் முன்வந்து நாட்டை பொறுப்பெடுக்காத நிலையிலே கடவுளின் ஆசிர்வாதத்துடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

வறுமைக் கோட்டின் கீழ் இருந்த மக்கள் அனைவரும் இறந்து விடுவோம் என்ற அச்சத்தில் இருந்தபோது, நாட்டின் தலைமைத்துவத்தை துணிச்சலாக பொறுப்பேற்றார். அத்தியாவசிய பொருட்களுக்காக மக்கள் வரிசையில் நின்று மரணித்த வேளையில், நாட்டை பொறுப்பேற்று தற்போது அனைவரும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை வாழ வழியமைத்து கொடுத்துள்ளார்.

# சேதமடைந்துள்ள வீதியை புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

பொத்துவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட றொட்டை மீள் குடியேற்ற கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியினை செப்பனிட்டு தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா நிறுவனத்தினால் வீடுகள் மற்றும் வீதிகள் அமைக்கப்பட்ட நிலையில், குறித்த கிராமத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த 10 வருடத்திற்கும் மேலாக குறித்த வீதி உடைந்து சேதமடைந்து குண்டும் குழியுமாக காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் வயோதிபர்கள் போன்றோர் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

றொட்டை மீள் குடியேற்ற கிராமத்தில் 347 குடும்பங்கள் வாழ்ந்து வருவதோடு, றொட்டை, ஜெய்க்கா ஆகிய கிராமங்களுக்கும் மற்றும் தாரம்பளை விவசாயக் காணிகளுக்குச் செல்லும் விவசாயிகளும் தமது அன்றாடத் தேவைகளுக்காக குறித்த வீதியினை பயன்படுத்தி வருகின்றனர்.



இந்நிலையில், சேதமடைந்துள்ள இந்த வீதியினை புனரமைத்துத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியா தஞ்சாவூர் ஸ்ரீமத் சுவாமி காரைதீவில் சொற்பொழிவு

இந்தியா தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்தா ஜீ மகராஜின் ஆளுமை விருத்தி தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவு கடந்த 26 ஆம் திகதி காரைதீவு இராம கிருஷ்ண மிஷன் சாரதா நலன்புரி நிலையத்தில் நடைபெற்றது.

சுவாமி விபுலாநந்தா பணிமன்ற முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகரும் இராம கிருஷ்ண மிஷன் சிவானந்தா பழைய மாணவனுமான வி.ரி.சகாதேவராஜாவின் நெறிப்படுத்தலில் இவ் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெற்றது.

கடந்த 26 ஆம் திகதி காரைதீவுக்கு விஜயம் செய்த ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்தா ஜீ மகராஜ், முன்னதாக காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்த சுவாமி, பின்னர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த வீட்டுக்கு விஜயம் செய்து அங்கு திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்துமரியாதை செலுத்தினர்.



தொடர்ந்து காரைதீவு ஸ்ரீ சாரதா நலன்புரி நிலையத்திற்கு விஜயம் செய்து அங்கி சொற்பொழிவு ஆற்றினார். இறுதியில் பக்தர்கள் சுவாமிகளிடம் பாதநமஸ்காரம் செய்து இனிப்புகளைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் 442 பாடசாலைகளில் தொழிநுட்ப கற்கை நெறிகள்

## சஜித் பிரேமதாச



அம்பாறை மாவட்டத்திலுள்ள 442 பாடசாலைகளிலும் ஸ்மார்ட் கிளாஸ் வசதியினை ஏற்படுத்துவதோடு AI தொழிநுட்பம் உள்ளிட்ட அனைத்து தொழிநுட்ப கற்கை நெறிகளையும் ஆரம்பித்து, அம்பாறை மாவட்டத்தை தொழிநுட்ப கல்வியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றுவேன் என எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அத்தோடு அம்பாறை மாவட்டத்தில் உள்ள கஞ்சிகுடிச்சாறு குளம் உள்ளிட்ட அனைத்து விவசாய குளங்களையும் புனரமைப்பதோடு விவசாயிகளுக்கு சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்கி கொடுப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளரான வெ.வினோகாந்தின் அழைப்புக்கமைய, அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் (27) இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றவூப் ஹக்கீம் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் உள்ளிட்ட அரச தலைவர்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள் கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கராத்தே போட்டியில் 10 தங்கப்பதக்கங்களுடன் 29 பதக்கங்களை சுவீகரித்துக்கொண்ட பாடசாலை

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

கராத்தே போட்டியில் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலய மாணவர்கள் 10 தங்கப்பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 8 வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்து சாதனை படைத்துள்ளனர்.

இந்த கராத்தே போட்டி கடந்த 25 ஆம் திகதி, ராம் கராத்தே சம்மேளனத்தினால் தேசிய ரீதியாக அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் அமைந்துள்ள கொல்லநுலைப் பாடசாலையில், கராத்தே விளையாட்டுக்கான எவ்வித அடிப்படை விளையாட்டுப் பொருட்கள் இல்லாத நிலையிலும் குறித்த மாணவர்கள் இச்சாதனையை நிலை நாட்டியுள்ளனர்.

கராத்தே பயிற்றுவிப்பாளர் மற்றும் உடற்கல்வி ஆசிரியரின் தொடர் பயிற்சி மற்றும் முயற்சியினால் கொல்லநுலைப் பாடசாலை மாணவர்களுக்கு வரலாற்றில் முதன் முறையாக கராத்தே பயிற்சி வழங்கப்பட்டு இச்சாதனை நிலைநாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# சீன பயிற்சி பட்டறையில் பங்கேற்க திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் பயணம்

காரைதீவு குறூப் நிருபர்

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் நேற்று முன்தினம் (27) சீனாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

சுற்றுலா வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனும் கருத்திலான சர்வதேச பயிற்சி பட்டறை இன்று (29) தொடக்கம் செப்டம்பர் 11 ஆம் திகதி வரை சீனாவில் இடம்பெறவுள்ளது.



இதில் கலந்து கொள்வதற்காக அம்பாறை மாவட்டத்தில் இருந்து 2 பிரதேச செயலாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் மற்றும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அரசாங்கத்தின் உரிமய தேசிய வேலைத் திட்டம் மற்றும் உற்பத்தி திறனாய்வு போட்டி மற்றும் சமுக பாதுகாப்பு சபை ஆகியவற்றில் தேசிய ரீதியாகவும், சிறப்பாக செயற்பட்டவர் என்ற வகையில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இரண்டு பிரதேச செயலாளர்களுக்கான விடுகை ஆவணங்களை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம நேற்று முன்தினம் (27) வழங்கி வைத்திருந்தார்.

# "சுவர்ணபுரவர – 2024" விருது அக்கரைப்பற்று மாநகர சபைக்கு

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிறனை மதிப்பீடு செய்கின்ற "சுவர்ணபுரவர 2024" போட்டி நிகழ்ச்சியில் அக்கரைப்பற்று மாநகர சபை திறமையான செயற்பாடுகளுக்கான விருதினை வென்றெடுத்துள்ளது.

இலங்கையில் காணப்படும் சுமார் 341 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சியின் விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 32 வருடகால சேவையிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியருக்கு கௌரவிப்பு

பாலமுனை தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றி ஓய்வு பெறும் ஏ. சீ. எஹியாவை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (28)நடைபெற்றது.

"விடைபெறும் வித்தகர் சேவை நலன் பாராட்டு விழா" எனும் தொனிப் பொருளில், அதிபர் ஏ. எம். எம்.இத்ரீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றஸ்மி பிரதம அதிதியாகவும், ஓய்வு பெற்ற அதிபர் கே.எல்.ஏ.சமது, அதிபர்களான எஸ். எம். சாஹிர் ஹுசைன், எம். எச்.எம்.உவைஸ், ஏனைய பாடசாலைகளின் அதிபர்களான எம். ஏ. சீ. அன்சார், ஏ.ஜீ. ஏ. சமூர், எம். எம். அஹ்சாத், எஸ். எம். றகீம், ஆர்.ஜப்ராஸ்,ஏ.அஸ்மி,எம்.எஸ்.பாஹிம், ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும்,



ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, சுமார் 32 வருடங்களாக ஆசிரியர் சேவையில் ஈட்டுபட்டு வந்த ஆசிரியர் எஹியாவிற்கு பொன்னாடை போத்தி, நினைவு சின்னங்கள் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் கிருஷ்ண ஜெயந்தி உறியடி நிகழ்வு



வருடாந்த கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு நேற்று காரைதீவு கொம்புச் சந்தியில் உறியடி நிகழ்வு இடம்பெற்றபோது...

படங்கள் காரைதீவு குறூப் நிருபர்

# வைக்கோலை உரமாகப் பயன்படுத்துமாறு வலியுறுத்து

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அம்பாறை மாவட்டத்தில், அறுவடை நிறைவடைந்த நெற்காணிகளில் வைக்கோலை அகற்றாது, உரமாகப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

சிறுபோக அறுவடை நிறைந்த அம்பாறை மாவட்ட நெற்காணிகளில் வைக்கோல் உடனடியாக அகற்றப்பட்டு வருகின்றது. மாட்டுத் தீனி மற்றும் இதர தேவைகளுக்காக இவை அகற்றப்படுவதாகவும் இது நெற்செய்கைக்கு ஆரோக்கியமானதல்ல எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.



மேலும் அதிகமான பிரதேசங்களில் நெற்காணிகளில் வைக்கோல் தீயிட்டு எரிக்கப்பட்டு வருவதாகவும், இதனால் நன்மைபயக்கும் எண்ணிலடங்காத நுண்ணங்கிகள் இறப்பதுடன், மண்வளமும் பாதிக்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

# இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
கொழும்பு
உங்கள் வளர்ச்சிக்கு உத்தம நண்பன்
139, மெயின் வீதி, கொழும்பு - 11, இலங்கை

## வருமானகூற்று 30.06.2024 இல் முடிவடைந்த காலாண்டுக்குரியது

| ரூபா மில்லியன்களில் | வங்கி (in LKR) | | குழுமம் (in INR) | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | 01.04.2024 லிருந்து 30.06.2024 வரை | 01.04.2023 லிருந்து 30.06.2023 வரை | 01.04.2024 லிருந்து 30.06.2024 வரை | 01.04.2023 லிருந்து 30.06.2023 வரை |
| வட்டி வருமானம் | 668 | 835 | 65,350 | 54,243 |
| வட்டிச் செலவுகள் | 177 | 74 | 40,939 | 31,015 |
| **தேறிய வட்டி வருமானம்** | **491** | **761** | **24,411** | **23,228** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 70 | 60 | 3,083 | 2,657 |
| கட்டணம் மற்றும் தரகு வருமாகம் செலவினங்கள் | - | - | - | - |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **70** | **60** | **3,083** | **2,657** |
| 16. | Adjustable Bed | 05 Nos. |
| 17. | Suction apparatus Single Jar | 02 Nos. |
| 18. | Oxygen Cart | 10 Nos. |
| 19. | Bed Table | 10 Nos. |
| 20. | Spot Lamp | 04 Nos. |
| 21. | Nerve Stimulator | 02 Nos. |
| 22. | Digital Imaging System for Post Mortem | 01 No. |

1. விலைமனுக்கோரல் ஆவணத்துடன் விபரமான அம்ச பட்டியல் மற்றும் அளவுக் குறிப்புக்கள் ஆகியனவற்றை பெற்றுக் கொள்ளலாம். பாவனையாளர் பட்டியல், விபரமான அளவுக் குறிப்புக்கள், சேவை கைநூல், விற்பனைக்குப் பிந்திய சேவை ஆற்றல் மற்றும் கையிருப்பு ஆகியன விலைமனுக்கோரல் ஆவணத்துடன் வழங்கப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருப்பதுடன் அவற்றிற்கான ஆவணச் சான்றை விலைமனுக்கோரல் ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   1. மேலே குறிப்பிட்டுள்ள அம்சங்களை விற்பனை செய்வதற்கான செல்லுபடியாகும் நிலையிலுள்ள வியாபார பதிவு.
   2. உற்பத்தியாளர் இல்லாவிடின், விலைமனுதாரர் அம்சங்களை விற்பனை செய்வதற்காக உற்பத்தியாளரிடமிருந்து எழுத்து மூலமான அதிகாரம்.
3. 2024.08.29 ஆம் திகதியிலிருந்து 2024.09.17 ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் ஒவ்வொரு அம்சத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை செலுத்திய பின்னர் மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலை கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
4. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது 2024.09.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் வைக்கப்பட்டுள்ள பெறுகை பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடியதும் உடனடியாகவே மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தறை.**

தொலைபேசி: 0412222261/0412227820
தொலைநகல்: 0412222444
மின்னஞ்சல்: **dghmatara@yahoo.com**

---

## அறிவித்தல்

**கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில்**

**கள்ளுத்தவறணைகளுக்கான குத்தகை விற்பனை – 2025**

கட்டானை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கள்ளுத்தவறணை கேள்விப் பத்திரங்கள் (2024.10.01)

2024 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ஆம் திகதி முற்பகல் 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2024.08.09 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**ஏ.எஸ்.ஜே.பீ.அதுகோரள,**
**பிரதேச செயலாளர்**
**கட்டானை**

**கட்டானை பிரதேச செயலகம்**
**தெமங்ஹந்திய**
**2024.08.13**

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

---

## காணிகளைக் கைப்பற்றும் சட்டம் (460 ஆம் அத்தியாயம்) 39 அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் உரித்தாக்குதல்

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி 2116/14 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் (460 ஆம் அதிகாரத்தின்) காணிகளைக் கைப்பற்றும் சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையின் (அ) இடைக்கால பொறுப்பாணையின் கீழ் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டு முழுமையாக அரசாங்கத்துக்கு சொந்தமாகி உள்ளதோடு, அரசாங்கத்திற்காக மற்றும் அதற்காக குறித்த சட்டத்தின் 40 ஆம் உறுப்புரையின் (அ) பந்தியின் கீழ் அந்தக் காணித் துண்டின் அனைத்து உரிமைகளையும் பெற்றுக் கொண்டு உள்ளது. ஆயினும் குறித்த சட்டத்தின் (1979 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ)1 ஆம் உறுப்புரையினால் என் மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப கௌரவ சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பிரனாந்து ஆகிய நான் குறித்த காணித் துண்டு என கீழ்வரும் முதலாம் மற்றும் இரண்டாம் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள 81 மற்றும் 82ஆம் இலக்க காணித் துண்டுகளை இந்த சட்டத்தின் மூலம் மீளளிப்புச் செய்கிறேன்.

**நாலக்க ஜூட் ஹரின் பிரனாந்து**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சர்**

காணி அமைச்சின் தொடர் இலக்கம் - 4-3/15/2016/VE/506
பிரதேச செயலாளரின் தொடர் இலக்கம் :- MUL/LND/02/ACQ/91
2024 ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி
சுற்றுலா மற்றும் காணி அமைச்சு,
இலக்கம் 1200/06,
மிஹிகத்த மெதுர,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல

**முதலாம் அட்டவணை**

**தென் மாகாணத்தின் மாத்தறை** மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவின் கல் எட்டும்ப (இலக்கம் 275 ஸீ) எனும் கிராமத்தில் அமைந்துள்ள சர்வியர் நாயகத்தினால் தொகுக்கப்பட்ட நில அளவைப் பட இலக்கம் 89 மற்றும் 2020.09.16 ஆம் திகதிய நில அளவைப் படத்தில் காட்டப்பட்டுள்ள 81 ஆம் இலக்க 1.9804 ஹெக்ரேயர் அளவு மற்றும் 82 ஆம் இலக்க 0.0063 ஹெக்ரேயர் அளவு உடைய காணித் துண்டுகள் உள்ளடங்கிய மொத்தக் காணியின் அளவு 19867 ஹெக்ரேயர் ஆகும்.

**காணித் துண்டு இலக்கம் 81 இன் எல்லை தொடர்பான அட்டவணை**

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | காணித் துண்டு இலக்கம் 62,59J மற்றும் 82 |
| கிழக்கில் | : | காணித் துண்டு இலக்கம் 62 மற்றும் 82 |
| தெற்கில் | : | காணித் துண்டு இலக்கம் 62 |
| மேற்கில் | : | காணித் துண்டு இலக்கம் 62 மற்றும் காணித் துண்டு இலக்கம் இடப்படாத பிரதான பாதை |

**காணித் துண்டு இலக்கம் 82 இன் எல்லை தொடர்பான அட்டவணை**

| | | |
|---|---|---|
| வடக்கில் | : | காணித் துண்டு இலக்கம் 59J |
| கிழக்கில் | : | காணித் துண்டு இலக்கம் 59J |
| தெற்கில் | : | காணித் துண்டு இலக்கம் 59J,62 மற்றும் 81 |
| மேற்கில் | : | காணித் துண்டு இலக்கம் 81 மற்றும் 62 |

---

## கேள்விக்கான அழைப்பு

**மாவட்ட பொது வைத்தியசாலை – மாத்தளை**

**உணவக சேவையை நடத்திச் செல்லல் 2024/2025ம் ஆண்டு**

01. மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் 2024/2025ம் ஆண்டிற்காக வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி முறையின் கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. கேள்வி ஆவணக் கட்டணமாக ரூபா 2000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தை இவ் வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் கேள்வி விநியோகிகப்படும் தினம் முதல் எதிர்வரும் 06 மாதத்திற்கு செல்லுபடியாகும் ரூபா பத்து இலட்சம் (ரூ. 1,000,000.00) பெறுமதிக்குப் பெற்றுக்கொண்ட சொத்துச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்து 2024.08.29 முதல் 2024.09.18 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை வைத்தியசாலை கணக்குப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. 2024.09.18 பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்கள் கணக்குப் பிரிவில் ஏற்கப்படுவதுடன் பி.ப. 2.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும். 2024.09.18 பி.ப. 2.00 இற்கு பின்பு கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
04. அறிவுறுத்தல்கள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டவாறு ரூ. 75,000/= கேள்வி பிணையொன்றை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையின் காசாளரிடம் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் பெயரில் விநியோகிக்கப்பட்ட 2024.12.31 வரை செல்லுபடியாகும் ரூ. 100,000/= வங்கிப் பிணையொன்றை கேள்விப் பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (காப்புறுதி பிணைமுறியை சமர்ப்பித்தல் கூடாது)
05. சகல கேள்விதாரர்களாலும் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் **கணக்காளர், மாவட்ட பொது வைத்தியசாலை, மாத்தளை** என்ற பெயரில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை சரியாகப் பூர்த்தி செய்து மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு இருப்பதுடன் சகல உறைகளிலும் இடதுபக்க மேல் மூலையில் **மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் பொது உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள்** என்று குறிப்பிடுதல் வேண்டும்.
06. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
07. தேவைப்படின் காசு செலுத்தாமலேயே குறித்த கேள்வி ஆவணங்களை மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**ஒப்பந்த இலக்கம் : 2024/DGHM/PD/GEN/CANTEEN**

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, மாத்தளை,**
**தொ.பே இல - 066-2222261 / 066-2221153 - 200**

The Housewives’ companion Classifieds on Daily News

## வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| JB -2XXX | NISSAN | PRIMERA | 2001 |
| KA -6XXX | SUZUKI | LIANA | 2002 |
| KE -9XXX | TATA | INDIGO LX | 2007 |
| CAJ -8XXX | SUZUKI | ALTO LXI 800 | 2015 |
| **வேன்** | | | |
| 053 -1XXX | NISSAN | VANNET | 1985 |
| **டிப்பர்** | | | |
| 068 -1XXX | ISUZU | DUMP TRUCK | 1993 |
| LE -2XXX | TATA | LPK1615 | 2007 |
| **லொறி** | | | |
| PR -1XXX | TATA | ACE | 2011 |
| PT -1XXX | TATA | ACE EX | 2012 |
| PT -7XXX | MAHINDRA | MAXXIMO | 2012 |
| PV -1XXX | MAHINDRA | MAXXIMO | 2013 |
| PV -4XXX | TATA | ACE EX | 2013 |
| PX -5XXX | TATA | ACE EX 2 | 2013 |
| PW -4XXX | MAHINDRA | MAXXIMO PLUS | 2013 |
| DAA -1XXX | DFSK | EQ1020DR | 2013 |
| DAA -3XXX | TATA | ACE EX 2 | 2015 |
| DAF -5XXX | TATA | ACE HT2 | 2017 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| HH -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HK -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HV -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| QH -3XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QN -7XXX | BAJAJ | AUTO AR4S | 2007 |
| YD -6XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| ABI -0XXX | BAJAJ | RE | 2015 |
| **துவிச்சக்கர வண்டிகள்** | | | |
| BDT -6XXX | BAJAJ | PULSAR 150 | 2016 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

**மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 ஆகஸ்ட் 29ஆம், 30ஆம் மற்றும் செப்டம்பர் 2ஆம், 3ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 செப்டம்பர் 3ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)**

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

www.skillsads.com

தொடர்பு: தினேஷ் - 0718 751 995
திசர - 0711 624 559


Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,




Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
WE ACCEPT
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343


## புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்
### சுற்றாடல் அமைச்சு

**இரத்தினபுரி பிரதேச அலுவலகத்திற்கு கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுத்தல்**

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் இரத்தினபுரி பிரதேச அலுவலகத்திற்கு கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளத் தேவையாக உள்ளது. அதனோடு சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை www.gsmb.gov.lk இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

## வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABL-8108 | பஜாஜ் | 2016 | ராகம |
| ABE-3063 | பஜாஜ் | 2015 | ராகம |
| ABA-4744 | பஜாஜ் | 2015 | ராகம |
| AAZ-7649 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAT-6254 | பஜாஜ் | 2014 | ராகம |
| AAG-0718 | டி.வி.எஸ் | 2012 | ராகம |
| YI-4966 | பஜாஜ் | 2011 | ராகம |
| QB-7576 | பஜாஜ் | 2005 | மாதரா |

| மோட்டார் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| KC-6446 | புரோட்டான் | 2005 | ராகம |
| HI-4158 | நிசான் | 2000 | கண்டி |
| FZ-9070 | வோல்வோ | 1996 | பாணடுரா |
| 64-0453 | நிசான் | 1992 | ராகம |
| 18-0489 | டொயோட்டா | 1985 | ராகம |

| டுயல் பர்போஸ் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PE-5895 | FAW | 2012 | ராகம |
| JO-0727 | ஹோண்டா | 1999 | ராகம |
| 253-5637 | நிசான் | 1995 | ராகம |

| டுயல் பர்போஸ் கேப் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PP-6163 | டாடா | 2010 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAH-3199 | டாடா | 2019 | ராகம |
| DAD-9767 | மஹிந்திரா | 2016 | நுவரேலியா |

| மோட்டார் சைக்கிள் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| LE-0986 | டொயோட்டா | 2002 | ராகம |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0778 523 285 | திருகோணமலை 0773 382 612 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாரா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாணடுரா 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ 0770 288 804 |

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### கேள்விகோரல்

| ஒப்பந்த இலக்கம் | நிர்மாண ஒப்பந்தம் | கேள்விப் பிணை (ரூ) | CIDA தரம் | காலம் |
|---|---|---|---|---|
| RDA/SAB/PD/TEN/CON/2024/10 | அவிசாவளை ஹட்டன் நுவரெலியா வீதி 23 கி.மீ. மற்றும் 33 கி.மீ. இற்கிடையில் 775 மீற்றர் Section overlay செய்தல் 23+000km 135 மீற்றர் பகுதி 26+000km - 28+0000km 60 மீற்றர் பகுதி 33+000km 40 மீற்றர் பகுதி | 238,000.00 | | 60 நாட்கள் |
| RDA/SAB/PD/TEN/CON/2024/11 | அவிசாவளை ஹட்டன் நுவரெலியா வீதி 15/1 பாலத்தை மேம்படுத்தல் | 179,000.00 | C5 & C6 | 90 நாட்கள் |

பிரதம பொறியியலாளர் கேகாலை அலுவலகத்திற்குச் சொந்தமான மேற்படி வீதியின் பராமரிப்பிற்காக போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 ஒகஸ்ட் 29 முதல் 2024 செப்டெம்பர் 12 மாலை 3.00 வரை கீழேயுள்ள முகவரியில் கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன் கீழே தொலைபேசி இலக்கம் அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாகாண பணிப்பாளர் பணிமனை (சபரகமுவ)**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**இரத்தினபுரி**
**தொ.பே. இல.: 045-2222608**

## கொழும்பு மாநகர சபை

### விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர்/ கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ME/ME/ ME/67/2024 | கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்புப் பொருட்களுக்காக (பொருட்கள் இன்றி) தொழிலாளர் விலைகளை அழைத்தல் | 5,900.00 | 5,000.00 | கட்டிட நிர்மாணத் துறையில் C9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தை ஒப்பந்தக்காரர்கள் கொண்டிருத்தல் வேண்டும். | பொறியியல் பணிப்பாளர் தொலைபேசி: 011-2685055 |
| 02 | ME/ME/ ME/73/2024 | கொழும்பு நகரத்தை அழகுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூல வரைபடத்தைத் (Master Plan) தயாரிப்பதற்கு நிபுணர் ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்ளல். | 5,900.00 | 500,000.00 | கம்பனி/ நிறுவனம் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். வீட்டுத் திறன்கள், சமூக காட்சிப்படுத்தல், சுற்றாடல் காட்சிப்படுத்தல், நகர திட்டமிடல், நகர வடிவமைப்பு, நகர கட்டிடக்கலை, நகர நிலச் சீரமைப்பு, ஸ்மார்ட்/ பசுமை நகர கருத்துக்கள், பொதுப் பயன்பாடுகள் மற்றும் வசதிகள், பொதுப் போக்குவரத்து, பொதுப் பத்திரத் தன்மை மற்றும் பாதுகாப்பு | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 -** கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
- சகல வட்டார அலுவலகங்கள்

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 -** நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2024-09-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2024-09-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.04.18ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2025.03.19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-09-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-09-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் கொழும்பு நகரத்தில் வாகனத் தரிப்பிடக் கட்டணத்தை சேகரிக்கும் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டை குத்தகைக்கு வழங்குதல் - கட்டம் XXVI மற்றும் கொழும்பு நகரத்தை அழகுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மூல வரைபடத்தைத் (Master Plan) தயாரிப்பதற்கு நிபுணர் ஆலோசனைச் சேவையைப் பெற்றுக்கொள்ளல் என்பவற்றுக்கு 2024-09-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு 07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை TDRS மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**NATIONAL COMPETITIVE BIDDINGS**

| Contract No | Name of the Contract | Engineer's Estimate exclu. Contingencies (Rs. Mn) | Bid Security (Rs. Mn) | Duration (Month) |
|---|---|---|---|---|
| RDA/PRJT/WP/TB/ 2024/G-114 | Boundary Wall Construction | 8.5 | 85,000.00 | 03 |

தேசிய போட்டி கேள்விகோரலின் கீழ் மேற்படி வேலைக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 செப்டெம்பர் 29 முதல் 2024 செப்டெம்பர் 23 வரை RDA மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் **www.rda.gov.lk** ஐப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**விசேட திட்டப் பிரிவு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# பலாகல பிரதேச சபை

## ஹிகுருவெவ தெங்கு சார்ந்த உற்பத்தி இயந்திராதிகள் மற்றும் கட்டிடத்தை 2024/2026ம் ஆண்டிற்காக குத்தகைக்கு விடுவதுடன் சம்பந்தப்பட்ட கேள்விக்கோரல்

01. பலாகல பிரதேச சபைக்கு சொந்தமான இல. 679 ஹிகுருவெவ துலானே ஹிகுருவெவவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள. கட்டிடங்கள் மற்றும் தெங்கு சார்ந்த உற்பத்தி இயந்திராதிகளை 2024.10.01 முதல் 2026.09.30 வரை இரு வருடங்களுக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. குறித்த கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனைப் பத்திரங்களை 2024.09.02 முதல் 2024.09.24ம் திகதி 13.00 மணிவரை பலாகல பிரதேச சபை அலுவலகத்தில் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ள மடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் செயலாளர், பலாகல பிரதேச சபை, ஆடியாகல என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024.09.24ம் திகதி 14.00 மணிக்கு முன்பு உ்ளிட வேண்டும்.

03. கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் போது கேள்வி விண்ணப்பதாரி தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் தமது நிரந்தர வதியை உறுதி செய்வதற்காக கிராம சேவை அதிகாரியினால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் திறத்தல் 2024.09.24ம் திகதி 14.15 மணிக்கு பலாகல பிரதேச சபை அரங்கில் நடைபெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

05. இக் கட்டிடத்துடன் தெங்கு உலர்த்தும் இயந்திரம், தென்னம்பட்டை வெட்டும் இயந்திரம், தேங்காய் எண்ணெய் வடிக்கும் இயந்திரம், மற்றும் கொப்பரா துண்டாக்கும் இயந்திரம் என்பன வழங்கப்படும்.

06. அதிகூடிய கேள்வித் தொகையை சமர்ப்பிக்கின்ற கேள்விதாரருக்கு கட்டிடத்துடன் இயந்திரங்கள் வழங்கப்படுவதுடன், கேள்வித் தொகையின் 24 மடங்கு அத்தொகையின் 1/3 தொகையை ஒரு முறையில் பலாகல பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும். இவ் வைப்புத் தொகை எந்தத் தவணைக்கும் பற்று வைக்க முடியாது அத்துடன் அதனை விடுவிப்பது கேள்வித் தவணைகளை முடிவுறுத்திய பின்னராகும்.

07. இதுபற்றிய மேலதிக தெளிவுப்படுத்தல் தேவையாயின் 025-2051760 / 025-2051705 என்ற தொ.பே. இலக்கத்தை அழைத்து அல்லது எமது palagala.ps.gov.lk இணையதளத்தில் அல்லது பலாகல பிரதேச சபை பேஸ்புக் பக்கம் (www.facebook.com/palagalapradeshiyasabha.andiyagala) இற்கு பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

08. தற்காலிக மதிப்பீட்டுத் தொகைக்கு கேள்விகள் கோரப்படுவதுடன், அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீடு திருத்தப்படுவதுடன், அதன் பிரகாரம் உடன்படிக்கைக்கு வருவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

09. இக்கேள்விகோரல் பற்றிய இறுதித் தீர்மானம் மற்றும் கேள்வி வழங்கும் முழுமையான அதிகாரம் பலாகல பிரதேச சபை பெறுகைகுக் குழுவிற்கு உரியது.

10. கேள்விகோரல் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விப்பிணைத் தொகை கீழே அட்டவணைகளில் குறிப்பிடப்படும்.

**அட்டவணை**

| தொடர் இல | கட்டிடம் மற்றும் உபகரணங்கள் | குறைந்தபட்ச கேள்வித் தொகை (ரூ.) (மாதாந்த வாடகை) | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை (ரூ) | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 01 | கட்டிடம், தெங்கு உலர்த்தும் இயந்திரம், தென்னம் மட்டை வெட்டும் இயந்திரம், தேங்காய் எண்ணை வடிக்கும் இயந்திரம், கொப்பரா துண்டாக்கும் இயந்திரம் | 50,000.00 | 16,666.66 | 1500.00 |
| 02 | கடை அறை | 10,000.00 | 3,333.00 | 1500.00 |

**செயலாளர்,**
**பலாகல பிரதேச சபை,**
**ஆடியாகல**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# Invitation of Quotations

## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
## MANTHAI WEST PRADESHIYA SABHA
## EU FUNDED
## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

| | |
|---|---|
| **Name of Project** | **Purchasing of Tractor & Accessories for Solid Waste Management (brand new)** |
| **Contract No :** | **LDSP/NP/MN/MWPS/2024/BT4/04** |

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Loan from World Bank (WB) towards the cost of Local Development Support Project (LDSP), and intends to apply part of the proceeds of this Loan to payments under the LDSP BT 4 to the Contract for **Purchasing of Tractor & Accessories for Solid Waste Management (brand new)** Contract No : LDSP/NP/MN/MWPS/2024/BT4/04.
2. The Chairman of Local Authority Procurement Committee **(The Purchaser)** on behalf of Manthai West Pradeshiya Sabha, Mannar District now invites from Registered Suppliers to submit a quotation for the supply of Goods **(Purchasing of Tractor & Accessories for Solid Waste Management (brand new)** as specified in Section III of Schedule of Requirements.
3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. Quotations shall remain valid for the period of Thirty (30) days of validity after the quotation submission deadline.
5. Interested Registered Suppliers may obtain further information from **Secretary, Manthai West Pradeshiya Sabha** [Tel No: **0232051854**, Email: **mwpss@yahoo.com**] and inspect the Bidding Documents at the address : Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar from 09.00 hrs. to 14.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested registered Suppliers on submission of a written application to the **Chairman, Manthai West Pradeshiya Sabha from 2024/08/29 until 2024/09/18** between 09:00 hrs and 14:00 hrs on normal working days upon payment of a non-refundable fee of Rupees **Four Thousand (Rs. 4,000.00).** The method of payment will be by Cash**.**
7. Address for submission of Quotations (duly filled Bids with Duplicate) is: **Chairman, Local Authority Procurement Committee, Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar.** The envelopes shall bear the additional identification marks (goods' names for which the Quotation is being submitted) on the left top corner: **"Purchasing of Tractor & Accessories for Solid Waste Management (brand new)".** Deadline for submission of quotations is: **2024/09/19 at 10.30 hrs.** Late submission of Quotations will be rejected.
8. Quotations shall be opened at the address : **Manthai West Pradeshiya Sabha, Adampan Mannar** immediately after the closing of bids.
9. Registered suppliers shall submit the Quotation Submission Form using the form furnished in Section V in the Bidding Document. This form must be completed without any alterations to its format, and no substitutes shall be accepted. All blank spaces shall be filled in with the information requested.
10. Alternative offers shall not be considered. The vendors are advised not to quote different options **(unless stated in the Data Sheet)** for the same item but furnish the most competitive among the options available to the bidder.
11. The **Final Destination** shall be the Main Office of **Manthai West Pradeshiya Sabha, Adampan, Mannar, and Latest Delivery Date** should be 30 days **from the Date of Letter of Acceptance.**

**Section III: Schedule of Requirements**

| S. No. | Contract No. | Name of the Contract | ICTAD Minimum Grade Required | Required Bid Security Rs. | Period | Contract Period |
|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/MN/MWPS/2024/BT4/04 | **Purchasing of Tractor & Accessories for Solid Waste Management (brand new)** | Recognized Organization | 65,000.00 | 19.12.2024 | 30 Days |

The address referred to above is :

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC)**
**Manthai West Pradeshiya Sabha,**
**Adampan, Mannar.**

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

| இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் "மகநெகும மஹமெதுர" க்கு பாதுகாப்பு சேவையினை வழங்கல்<br>ஒப்பந்த இலக்கம் : **RDA/DPR/PRO/SE/SHP/ADMA/SEC/2024/98** |

தேசிய போட்டி விலைமனு கோரல் ஒழுங்குமுறைகளின் கீழ் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளுக்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றது. விருப்பமுடைய மனுதாரர்கள் 2024.08.29 முதல் 2024.09.19 வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளமாகிய **www.rda.gov.lk** இல் முழுதான விலை மனுக்கோரல் விபரங்களை பார்வையிடலாம்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

# பெறுகை அறிவித்தல்

## நாவலப்பிட்டிய மாவட்ட பொது வைத்தியசாலையின் உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல்

மாவட்ட பொது வைத்தியசாலை நாவலப்பிட்டி 2024/2025ம் ஆண்டுகளில் ஒருவருட கால எல்லைக்கு நடத்திச் செல்வதற்காக வியாபார பெயர் பதிவின் கீழ் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.09.24 மு.ப. 11.30 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02) கேள்வி ஆவணங்களை 2024.08.29 முதல் 2024.09.23 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்காக வியாபார பெயர் பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதியையும், மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூ.2000.00 தொகையை பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை நாவலப்பிட்டி இற்கு காசாகச் செலுத்திய பின்பு பெற்றுக் கொண்ட பொது 172 மாதிரியின் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

03) பொறியிடப்பட்ட விலைமனுக்களுடனான கேள்வியை 2024.09.24 மு.ப. 11.30 இற்கு முன்பு பதிவுத் தபாலில் "பணிப்பாளர் மாவட்ட பொது வைத்தியசாலை, நாவலப்பிட்டி" என்ற முகவரிக்கு அல்லது தலைமையகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம்.

04) கேள்விகள் திறத்தல் 2024.09.24 பி.ப. 11.30 இற்கு இடம்பெறும்.

05) விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது மூலையில், நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை "உணவகத்தை நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கள் கோரல் 2024/2025" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

06) விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்திற்கு நீங்கள் அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

07) மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல. 054 - 2223773 மூலம் விசாரித்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நாவலப்பிட்டி**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை

### கிழக்கு கொள்கலன் முனையத்தின் செயற்பாட்டுக் கட்டிடத்திற்கு நீர் வழங்கல் முறைமையொன்றை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

1. இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் சார்பில் இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை கீழ்நிலை பெறுகைக் குழு - A தலைவரினால் கிழக்கு கொள்கலன் முனையத்தின் செயற்பாட்டுக் கட்டிடத்திற்கு நீர் வழங்கல் முறைமையொன்றை வழங்குதல் மற்றும் நிறுவுதல் (ஒப்பந்த இலக்கம் **SLPA/CD/ECT/WS/1)** எனும் ஒப்பந்தத்திற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதிகள்:
   - (அ) விலைமனுதாரர் கடந்த 5 வருடங்களினுள் இதனையொத்த கொள்ளளவுடைய பம்பிகளை வழங்குதல் மற்றும் நிறுவுதலில் குறைந்தபட்சம் 2 திட்டங்களை நிறைவு செய்த முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   - (ஆ) விலைமனுதாரர் பின்வரும் ஆகக்குறைந்த மூலப்பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
     ICTAD (CIDA) பதிவுத் தேவைப்பாடுகள்
     விசேடத்துவம்: நீர்க் குழாய்வேலைகள் மற்றும் வடிகாலமைப்பு (PD)
     தரம்: EM 4
   - (இ) 1987ஆம் ஆண்டின் 03ஆம் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ். இதை இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரால் நிகழ்நிலை (Online) மூலம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். eroc.drc.gov.lk
3. விலைமனுதாரர் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட நாள் முதல் 60 நாட்களுக்குள் வேலையை நிறைவு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். (பம்பியின் அண்ணளவான கொள்ளளவு 2.5hp)
4. கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2024-09-10ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும் என்பதுடன் அதனைத் தொடர்ந்து தள விஜயம் இடம்பெறும்.
6. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 1,000.00 ரூபா (வரிகள் உட்பட) செலுத்துவதன் பேரில் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கைத் துறைமுக அதிகார சபையின் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு பிரிவு, பிரதான பொறியியலாளரினால் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) 2024-09-03ஆம் திகதி முதல் 2024-09-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் (இரு நாட்களும் உட்பட) மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் விநியோகிக்கப்படும். இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளுதல் வேண்டும்.
7. விலைமனுக்களை பாதுகாப்பு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கடித உறையில் உள்ளடக்கி முத்திரைக் குறி பொறித்து ''கிழக்கு கொள்கலன் முனையத்தின் செயற்பாட்டுக் கட்டிடத்திற்கு நீர் வழங்கல் முறைமையொன்றை வழங்குதல் மற்றும் நிறுவுதல் (ஒப்பந்த இலக்கம் **SLPA/CD/ECT/WS/1)"** எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் தலைவர், கீழ்நிலை திணைக்கள பெறுகைக் குழு - A, இலங்கைத் துறைமுக அதிகார சபை, மே/பா பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு), ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புப் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகாரசபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்கூறிய முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
8. 2024-09-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இரு நகல்களிலான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு, அதன் பின் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.
9. ஏதேனும் மேலதிக விபரங்களை பின்வரும் முகவரியில் பிரதான பொறியியலாளரிடமிருந்து (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு) பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2380517)

**தலைவர்,**
**கீழ்நிலை பெறுகைக் குழு A, (இலங்கைத் துறைமுகங்கள் அதிகார சபை),**
**மே/பா பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு),**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,**
**கொழும்பு 01.**

www.adz.lk
it's what you want

# லேக்ஹவுஸ் கிரிக்கெட் சுற்றுப் போட்டி










லேக்ஹவுஸ் நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் கடந்த 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று கொழும்பு எயார்போஸ் மைதானத்தில் நடைபெற்றன. லேக்ஹவுஸின் பராமரிப்புப் பிரிவு, போட்டிகளில் வெற்றியீட்டியது. வெற்றிபெற்ற அணியின் சார்பாக அதன் தலைவர் உபுல் குணரத்ன லேக்ஹவுஸ் தலைவர் ஹரேந்திர காரியவசமிடமிருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுகொண்டார். சிறந்த பந்துவீச்சாளராக எம். ரிஸ்வி தெரிவுசெய்யப்பட்டார்.

# பெண்கள் சமத்துவ தினம்




பெண்கள் சமத்துவ தினம் ஆண்டுதோறும் ஓகஸ்ட் 26 அன்று நினைவு கூரப்படுகிறது. இது பெண்களின் உரிமைகள் மற்றும் சமத்துவத்திற்கான தற்போதைய போராட்டத்தில் ஒரு முக்கிய தருணத்தை குறிக்கிறது. ஆண்டுதோறும் ஆகஸ்ட் 26ஆம் திகதியன்று கொண்டாடப்படும் மகளிர் சமத்துவ தினம் வெற்றி, விடாமுயற்சி மற்றும் சமத்துவத்திற்கான தொடர்ச்சியான போராட்டங்களின் தருணங்களை ஒன்றிணைத்து ஒரு வளமான மற்றும் பன்முக வரலாற்றை கொண்டுள்ளது.

அமெரிக்காவில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கிய 19ஆவது திருத்தத்தின் ஒப்புதலை நினைவு கூரும் வகையில் இந்த சிறப்பு நாள் 1971இல் காங்கிரஸால் முதன்முதலில் அறிவிக்கப்பட்டது. 2023ஆம் ஆண்டின் பெண்கள் சமத்துவ தினத்தின் கருப்பொருள் சமத்துவத்தை ஏற்றுக்கொள் என்பது 2021 முதல் 2026 வரையிலான முலோபாயத் திட்டத்தின் மூலம் எதிரொலிக்கிறது. இந்த தொனிப்பெருள் பொருளாதாரம் வளர்ச்சிக்கு மட்டுமல்ல அடிப்படை மனித உரிமையாகவும் பாலின சமத்துவத்தை அடைவதன் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஆண்களும் பெண்களும் சமம் என்ற நிலை வரவேண்டும். இன்று வரை ஏதோவொரு காரணம் காட்டி பெண்கள் சமமற்றவர்களாகவே கருதப்படுகிறார்கள். பெண்களுக்கு உரிய உரிமைகள் கிடைக்கப்பெற்றாலும் ஆண்களுக்கு நிகராக பெண்களால் வாழ முடியவில்லை. பெண்கள் மீது வன்முறைகள் விதைக்கப்படுகின்றன இலங்கையில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அரசியலில், அலுவலகங்களில், பொதுப் போக்குவரத்தில், வீதிகளில், வீடுகளில், அதிகரித்தே வருகின்றன. இதில் எங்கே பெண்கள் சமத்துவம் பேணப்படுகிறது?

தற்காலத்தில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக பல துறைகளில் சாதித்து வந்தாலும் ஆணுக்கு அடுத்த நிலை தான் பெண்கள் என்ற நிலை மாறவில்லை. சமூக மக்களிடையே உள்ள பெண்கள் பற்றிய மாதிரி வார்ப்புகளை களைய முடியவில்லை. கல்வி கற்ற ஒவ்வொரு பெண்ணும் திருமணத்தின் பின் தனக்கென வகுத்துக் கொண்ட கட்டமைப்புகள், வேலைத்தளங்களில் ஆண்களுக்கு கீழே பணியாற்றும் பெண்களின் தன்மை, பொது இடங்களில் பெண்களுக்கு ஏற்படும் வன்முறைகள், தனித்து இயங்க முடியாது என பெண்களை ஓரம் கட்டும் சமூகம், குழந்தை பேற்றை மாத்திரம் உயர்த்தி பேசுதல், இரவு வேளையில் பெண்கள் நடமாட முடியாத நிலை, ஒரு விடயத்தில் பெண்கள் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை, முடிவெடுப்பதில் பெண்கள் தயங்கி நிற்கும் நிலை என்பன எங்கே பெண் சமத்துவத்தை ஏற்றுக் கொள்கிறது?

இலங்கையில் 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 27 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் 30 தொடக்கம் 40 சதவீதமான பெண்கள் ஏதாவதொரு பாலியல் ரீதியிலான துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

இலங்கையில் என்னதான் பாலின சமத்துவம் குறித்து உரத்து பேசி வந்தாலும் இன்றும் ஒவ்வொரு நாளும் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகி கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு நிமிடமும் வார்த்தை வன்முறையினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள், ஒரு ஆண் இன்னொரு ஆணை வசைபாடும் ஒவ்வொரு வார்த்தையிலும் பெண்கள் அவமானப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கையில் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமைகளை கொண்ட பழமையான வரலாறு இருந்தும் கூட இலங்கையில் பெண்களில் அரசியல் பிரதிநிதித்துவம் குறைவாகவே உள்ளது. மிகவும் குறைவான சதவீதமான பெண் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நாடுகள் என்ற பட்டியலில் இலங்கைக்கு 16 வது இடம் கிடைக்கும் ஏனெனில் இப்போது பெண் அதிகாரத்தை அல்லது பெண்களால் நிர்வகிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளாத ஒரு ஆணாதிக்க சமூகத்தின் பிடியில் தான் இலங்கைப் பெண்கள் உள்ளனர். இந்த வருட தேர்தலில் கூட 39 வேட்பாளர்களில் எந்தவொரு பெண் வேட்பாளரும் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

போராட்டங்கள் நடத்தப்பட்டும், கொடிகள் தூக்கப்பட்டும் பெண்ணுரிமை குறித்துப் பேசியும் அவையெல்லாம் அந்த குறிப்பிட்ட நாட்கள் குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரமேயாகும். பெண்களின் சமத்துவம் குறித்து உலக மகளிர் தினங்களில் பேசப்பட்டாலும் பெண்கள் சமத்துவம் பேணப்படுவதில்லை.

சி.கதீசனா
ஊடகக் கற்கைகள்
யாழ் பல்கலைக்கழகம்

# லோட்ஸில் முதல் டெஸ்ட் வெற்றியை எதிர்பார்த்து இலங்கை இன்று களத்தில்

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

ஓல்ட் டிரபர்ட்டில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்ததால் தொடர் தோல்வியை தவிர்ப்பதற்கு இந்த டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி தோல்வியை தவிர்ப்பது கட்டாயமாகும். என்றாலும் முதல் டெஸ்ட்டில் இலங்கை அணி இங்கிலாந்துக்கு சவால் விடுக்கும் வகையில் ஆடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இரண்டாவது இன்னிங்ஸில் கமிந்து மெண்டிஸின் சதத்துடன் இலங்கை அணி 300க்கும் அதிகமான ஓட்டங்களை பெற்று எதிரணிக்கு 200க்கும் மேற்பட்ட வெற்றி இலக்கை நிர்ணயித்திருந்தது. பந்து வீச்சிலும் வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ சிறப்பாக செயற்பட்டதோடு சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரியவும் கைகொடுத்தார்.



இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட்டில் இலங்கை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் சோபித்துவரும் ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க இடம்பெற வாய்ப்பு உள்ளது. எனினும் எந்த வீரருக்கு பதில் அவரை அணியில் சேர்ப்பது என்பது குறித்து நேற்று வரை முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இதில் முதல் டெஸ்டில் சோபிக்கத் தவறிய குசல் மெண்டிஸ் அல்லது நிஷான் மதுஷ்கவை அணியில் இருந்து நீக்க வாய்ப்பு உள்ளது. எனினும் தினேஷ் சந்திமாலுக்கு கட்டைவிரலில் காயம் ஏற்பட்டிருப்பதால் அவர் விக்கெட் காப்பில் ஈடுபடுவதில் சிரமம் உள்ளது. இந்நிலையில் குசல் மெண்டிஸ் அணியில் தக்கவைக்கப்படவும் வாய்ப்பு உள்ளது. எவ்வாறாயினும் நிஷான் மதுஷ்கவும் விக்கெட் காப்பாளர் ஒருவராவார்.

இந்நிலையில் பத்தும் நிசங்கவுக்கு பதில் யாரை அணியில் இருந்து நீக்குவது என்பது பற்றி இன்று போட்டிக்கு முன்னர் தீர்மானிக்க அணி நிர்வாக முடிவு எடுத்துள்ளது.

மறுபுறம் ஏற்கனவே உபாதைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் மார்க் வூட்டுக்கு பதில் ஒல்லி ஸ்டோன் இன்றைய போட்டியில் களமிறங்கவுள்ளார். வலது கை வேகப் பந்து வீச்சாளர் ஸ்டொன் மூன்று ஆண்டுகளின் பின்னரே இங்கிலாந்து டெஸ்ட் அணியில் ஆடவுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டின் தாயகம் என்று அழைக்கப்படும் லோட்ஸ் மைதனத்தில் இலங்கையின் பல வீரர்கள் முதல் முறையாக டெஸ்ட் போட்டியில் இன்று களமிறங்கவுள்ளனர்.

எனினும், லோட்ஸ் மைதானத்தில் இலங்கை அணி தனது முதல் டெஸ்ட் வெற்றியை பெறும் எதிர்பார்ப்புடனேயே இன்று களமிறங்குகிறது. இலங்கை அணி இதுவரை லோட்ஸ் மைதானத்தில் 8 டெஸ்ட் போட்டிகளில் ஆடியபோதும் அதில் 2இல் தோல்வியை சந்தித்து 6 போட்டிகளை சமன் செய்துள்ளது.

## ஐ.சி.சியின் அடுத்த தலைவராக ஜெய் ஷா போட்டியின்றி தெரிவு



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷா, சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் தலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி 35 வயதான ஜெய் ஷா ஐ.சி.சி. தலைவராக தெரிவான இளம் வயதானவர் என பதிவாகி இருப்பதோடு அவர் நியூசிலாந்தில் கிரேக் பார்க்லேவுக்கு பதில் டிசம்பர் 1 ஆம் திகதி அந்தப் பதவியை ஏற்கவுள்ளார்.

பார்க்லே மூன்றாவது தவணைக்கு போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்த நிலையிலேயே ஐ.சி.சி. தலைமை பொறுப்புக்கு ஒரே போட்டியாளராக ஷா நின்றார். அவர் கடந்த 2019 தொடக்கம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளராக செயற்பட்டு வருகிறார்.

கிரிக்கெட்டை முன்னர் இல்லாத அளவுக்கு பிரபலப்படுத்துவது தொடர்பில் தலைமை பதவிக்கு தெரிவாகி இருக்கும் ஷா குறிப்பிட்டுள்ளார். 2028 லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கின்போது கிரிக்கெட் 128 ஆண்டுகளின் பின்னர் ஒலிம்பிக்கில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'உலகம் முழுவதும் எங்கள் விளையாட்டின் தரத்தை உயர்த்த என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன்' என்றார்.

ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் தலைவராகவும் இருக்கும் ஷா ஐ.சி.சி. தலைவராகும் ஐந்தாவது இந்திய நாட்டவராக உள்ளார். இதற்கு முன்னர் ஜக்மோகன் டால்மியா, ஷரத் பவார், என். ஸ்ரீனிவாசன் மற்றும் ஷஷங்க் மனோகர் ஆகியோர் அந்தப் பதவியை வகித்துள்ளனர்.

இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகனான ஜெய் ஷா 2009இல் குஜராத்தில் இருந்தே தனது கிரிக்கெட் நிர்வாக வாழ்வை ஆரம்பித்திருந்தார். எனினும் அவரது நியமனம் சர்வதேச கிரிக்கெட்டில் இந்தியாவின் செல்வாக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதான விமர்சனங்களும் எழுந்துள்ளன.

## சர்வதேச செய்திகள்



# காசா தாக்குதலுக்கு மத்தியில் மேற்குக் கரையில் இஸ்ரேல் பாரிய படை நடவடிக்கை: 11 பேர் பலி

காசாவில் போர் தொடரும் நிலையில் இஸ்ரேலியப் படை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்து குறைந்தது மூன்று நகரங்களில் நடத்திவரும் வான் மற்றும் தரைவழி தாக்குதல்களில் குறைந்தது 11 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

போர் விமானங்கள், ஆளில்லா விமானங்கள் மற்றும் புல்டோசர்களின் உதவியோடு நேற்றுக் காலை நூற்றுக் கணக்கான தரைப்படையினர் மேற்குக் கரைக்குள்ள ஊடுருவியுள்ளனர். இதன்போது இஸ்ரேலியப் படை ஜெனின், துல்கரம் மற்றும் ஜோர்தான் பள்ளத்தாக்கில் சமகாலத்தில் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேலியப் படையினர் டுபாஸ் அகதி முகாமில் நால்வரை கொன்றதாக பலஸ்தீன செம்பிறை சங்கத்தின் அம்புலன்ஸ் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்போது மேலும் பலர் காயமடைந்திருந்தபோதும் அந்தப் பகுதிக்கு அம்புலன்ஸ் வண்டிகள் நுழைவதை இஸ்ரேல் இராணுவம் தடுத்து வருவதால் அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஜெனினில் இருவர் கொல்லப்பட்டிருப்பதோடு அருகாமையில் உள்ள செயிர் கிராமத்தில் வாகனம் ஒன்றை இலக்கு வைத்து நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் அதில் சென்றுகொண்டிருந்த மூவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்தது.

ஜெனின் அகதி முகாம் மற்றும் துர் கரமிலுள்ள நூர் ஷம்ஸ் அகதி முகாமுக்கு செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இஸ்ரேலிய துருப்புகள் ஊடுருவியதை அடுத்தே இந்தத் தாக்குதல் ஆரம்பமானது. ஜோர்தான் பள்ளத்தாக்கில் உள்ள டுபாஸ் நகருக்கு இஸ்ரேலியப் படை இராணுவ ஹெலிகொப்டர் வழியே நுழைந்துள்ளது. குறிப்பாக அங்குள்ள பாரா அகதி முகாம் இலக்கு வைக்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான இஸ்ரேலியப் படைகள் முகாம்களை சுற்றிவளைத்திருப்பதோடு மருத்துவமனைகளை முற்றுகையிட்டு அங்கு மருத்துவ உதவியாளர்கள் செல்வதை தடுத்ததாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

இந்த முற்றுகை மேற்குக் கரையின் வடக்கே உள்ள குறித்த மூன்று நகரங்களிலும் இடம்பெற்றிருப்பதோடு அந்த நகரங்கள் ஏனைய பலஸ்தீன பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல ஆண்டுகளில் தாம் கண்ட மிகப்பெரிய படை நடவடிக்கை இது வென்று ஜெனின் முகாமைச் சேர்ந்த ஷத்தா சபோக் என்பவர் 'மிடில் ஈஸ்ட் ஐ' செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார். 'அதிக அளவான இராணுவ வாகனங்கள் பாரிய அளவில் ஜெனினுக்குள் ஊடுருவியுள்ளது' என்று குறிப்பிட்டார்.



'மூன்று பிரதான மருத்துவமனைகளும் முற்றுகை இடப்பட்டிருப்பதோடு நகரை நோக்கிச் செல்லும் அனைத்து வீதிகளும் மூடப்பட்டுள்ளன. இவ்வாறான ஊடுருவலை நான் நீண்ட காலமாக பார்த்ததில்லை. இது பல நாட்களுக்கு நீடிக்கும் என்று தெரிகிறது' என்று அந்தப் பெண் குறிப்பிட்டார்.

நகரில் உள்ள பல கட்டடங்களில் இஸ்ரேலியப் படை நிலைகொண்டிருப்பதோடு கூரை மேல் ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகளை வைத்துள்ளனர். அவர்களுக்கு முன்னால் நகரும் அனைவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வருகின்றனர் என்று அவர் கூறினார்.

அல் பாரா முகாமிலும் இது போன்ற நிலைமை காணப்படுவதாக அங்கிருப்போர் விபரித்துள்ளனர். 'முகாமில் பேரழிவு நிலைமை காணப்படுவதோடு இதுவரை காணாத பாரிய அளவிலான ஊடுருவல் ஒன்று இடம்பெற்றுள்ளது' என்று அங்கிருக்கும் காலித் சோப் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

துல்கர்மில் நூர் ஷம்ஸ் முகாமில், இஸ்ரேலியப் படை அங்குள்ள மக்களை பயமுறுத்த ஆரம்பித்ததாகவும் நள்ளிரவில் அங்கு நுழைந்த விரைவில் அங்குள்ள இரு பிரதான மருத்துவமனைகளை முற்றுகையிட்டதாகவும் சம்பவத்தை பார்த்த பயான் மன்சூர் என்பவர் உள்ளூர் ஊடகத்திற்கு விபரித்துள்ளார்.

'சுற்றிவளைப்பு மற்றும் படையினர் மற்றும் வாகனங்களின் நடமாட்டங்களை பார்க்கும்போது நீண்ட காலம் ஒன்றுக்கு நிலைகொண்டிருக்க அவர்கள் தயாராகி வருகிறார்கள் என்பது போல் தெரிகிறது' என்று அவர் கூறினார்.

பெரும் எண்ணிக்கையான புல்டோசர்களும் அந்த மூன்று நகரில் இருப்பதாகவும் அவை வீதிகள் மற்றும் முக்கிய மின்சார மற்றும் நீர் விநியோகங்களை தகர்த்து வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நூர் ஷம்ஸ் மற்றும் ஜெனின் அகதி முகாம்களில் இஸ்ரேலியப் படையுடன் சண்டையிட்டு வருவதாக பலஸ்தீன போராளிகள் தெரிவித்துள்ளனர்.

ஜெனின் மற்றும் துல்கரமில் பாரிய 'பயங்கரவாத எதிர்ப்பு' நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியபோதும் அது பற்றி விரிவாக எதனையும் கூறவில்லை. இந்தத் தாக்குதல் பல நாட்களுக்கும் நீடிக்கும் என்று எதிர்பார்ப்பதாக இஸ்ரேலிய இராணுவ வட்டாரத்தை மேற்கோள்காட்டி 'டைம்ஸ் ஒப் இஸ்ரேல்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் தரைப்படை மற்றும் விமானப்படை உட்பட நான்கு படைப் பிரிவுகள் இணைந்திருப்பதாக இஸ்ரேலின் 'சென்னல் 12' தொலைக்காட்சி கூறியது.

இதேவேளை 'இரண்டாவது இந்திபாழா போராட்டம் உச்சம் பெற்றிருந்த 2002 இல் இஸ்ரேல் இராணுவத்தின் தாக்குதலுக்குப் பின் மேற்குக் கரையில் இடம்பெறும் மிகப்பெரிய படை நடவடிக்கையாக இது உள்ளது என்று இஸ்ரேல் ஊடகங்கள் விபரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த ஒக்டோபரில் காசாவில் போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேல் நடத்தும் சுற்றி வளைப்புகள் மும்மடங்கிற்கு மேல் அதிகரித்து காணப்படுகிறது. அண்மைய வாரங்களில் அங்கு வான் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் மேற்குக் கரையில் இருந்து பலஸ்தீனர்களை இராணுவம் வெளியேற்ற வேண்டும் என்று இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இஸ்ராயேல் காட்ஸ், எக்ஸ் சமூகதளத்தில் அழைப்பு விடுத்துள்ளார்.

'பலஸ்தீன குடியிருப்பாளர்களை தற்காலிகமாக வெளியேற்றுவது மற்றும் மற்ற தேவையான நடவடிக்கைகள் உட்பட காசாவில் நாம் செய்வது போன்று மேற்குக் கரையிலும் நாம் அச்சுறுத்தல்களை கையாள வேண்டும். இது அனைத்து இடங்களுக்குமான போர் என்பதோடு அதில் நாம் வெற்றி பெறுவோம்' என்று அவர் நேற்று பதிவிட்டிருந்தார்.

மறுபுறம் சர்வதேசம் அமைதி காப்பதன் காரணமாகவே இஸ்ரேல் தனது கொடிய போரை மேற்குக் கரைக்கு விரிவுபடுத்தி இருப்பதாக காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காசா போர் வெடித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இடம்பெறும் இஸ்ரேல் இராணுவத்தின் சுற்றிவளைப்புகள் மற்றும் இஸ்ரேலிய குடியேறிகளின் தாக்குதல்களில் 148 சிறுவர்கள் உட்பட குறைந்தது 646 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு கடந்த 24 மணி நேரத்தில் 58 பேர் கொல்லப்பட்டு மேலும் 131 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. காசாவில் ஓர் ஆண்டை நெருங்கும் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 40,534 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 93,778 பேர் காயமடைந்துள்ளனர்.

கெய்ரோவில் இடம்பெற்று வரும் புதிய சுற்று போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் இஸ்ரேல், அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் அதிகாரிகள் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தை உடன்பாடு ஒன்றை எட்டத் தவறி வருகிறது. காசாவில் உள்ள பல பகுதிகளில் பாதுகாப்பை கட்டுப்படுத்துவதற்கு இஸ்ரேல் நிபந்தனை விதித்துவரும் அதேநேரம் காசாவில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வாபஸ் பெற வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்தி வருகிறது.

## ஹூத்தி தாக்குதல்:
# தொடர்ந்து எரியும் கப்பலில் எண்ணெய் கசியும் அபாயம்

செங்கடலில் கடந்த வாரம் ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு இலக்கான எண்ணெய் கப்பல் ஒன்று தொடர்ந்து எரிந்தவண்ணம் இருப்பதாகவும் அதில் இருந்து எண்ணெய் கசியக்கூடும் என்றும் அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகன் குறிப்பிட்டுள்ளது.

கிரேக்கத்திற்கு சொந்தமான அந்த நாட்டு கொடியுடனான எம்.வி. சவுனியோன் என்ற கப்பலை மீட்கும் முயற்சியை ஹூத்திக்கள் முறியடித்ததாக பெண்டகன் மேலும் தெரிவித்துள்ளது. இந்தக் கப்பல் 150,000 தொன்கள் அல்லது ஒரு மில்லியன் பீப்பாய் மசகு எண்ணெயை சுமந்திருக்கும் நிலையில் பெரும் அளவு எண்ணெய் கசிவு ஒன்று ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

காசா போரில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக யெமனின் பெரும்பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹூத்திக்கள் கடந்த 10 மாதங்களுக்கு மேலாக செங்கடலில் செல்லும் கப்பல்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களில் இதுவரை இரு கப்பல்கள் மூழ்கி இருப்பதோடு குறைந்தது இரு கப்பல் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் சவுனியோன் கப்பல் மீது கடந்த ஓகஸ்ட் 21 ஆம் திகதி இரு சிறு படகுகளில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் அடையாளம் காணப்படாத மூன்று எறிகணைகள் விழுந்ததை அடுத்தே தீப்பற்றியுள்ளது.

அதே தினத்தில் ஐரோப்பிய போர் கப்பல் மூலம் கப்பலில் இருந்த 25 பேரும் மீட்கப்பட்டு டிஜிபூட்டிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.



# பணயக்கைதி ஒருவர் மீட்பு

தெற்கு காசாவின் சுரங்கப் பாதையில் மேற்கொண்ட சிக்கலான மீட்பு நடவடிக்கை ஒன்றின் மூலம் பலஸ்தீன போராளிகளின் பிடியில் இருந்த பணயக்கைதி ஒருவரை மீட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது பலஸ்தீன போராளிகளால் கடத்தப்பட்ட பதுயின் பழங்குடி அரபியான 52 வயது காயித் பர்ஹான் அல் காதி என்பவரே மீட்கப்பட்டுள்ளார். அவர் நல்ல உடல் நிலையுடன் இருப்பதாகவும் மருத்துவ சோதனைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் இராணுவம் குறிப்பிட்டது. இஸ்ரேலில் உள்ள பிரதான அரபு நகரான ரஹத்தைச் சேர்ந்தவரான அல் காதி தெற்கு இஸ்ரேலில் உள்ள களஞ்சியம் ஒன்றில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே ஒக்டோபர் 7 ஆம் திகதி மேலும் 250 பேருடன் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். அப்போது இடம்பெற்ற தாக்குதல்களில் 1,100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து 110 பணயக்கைதிகள் பலஸ்தீன போராளிகளின் பிடியில் இருப்பதாக நம்பப்படுவதோடு இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் உயிரிழந்திருப்பதாகவும் நம்பப்படுகிறது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 29ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.